
www.padippakam.com

1 — 15 நவம். '92

விலை ரூ.2.50

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு



## போலீசின் குரூரங்கள் அரசின் மாய்மாலம்

படிப்பகம்

www.padippakam.com




## நவம்பர் 7, 1917

இப்பூவுலகின் ஐந்தில் ஒரு பங்கு நிலப்பரப்பில் பாட்டாளி வர்க்க ஆட்சி மலர்ந்த நாள். ஏகாதிபத்தியம் காகிதப் புலியே என நிரூபித்துக்காட்டி காலனிய நாட்டு மக்களின் மனங்களில் கனலை மூட்டிய நாள். முதலாளித்துவ சகாப்தம் முடிந்து சோசலிச சகாப்தம் தொடங்கிவிட்டதை உலகறிய பறைசாற்றிய நாள். ரஷியாவில் முதல் சோசலிச அரசு உதித்த அந்த நவம்பர் புரட்சியின் 76-வது ஆண்டு!

உலகப் புரட்சியின் கலங்கரை விளக்காகத் திகழ்ந்த ரஷியாவில் தோழர் ஸ்டாலின் மறைவுக்குப் பின்னர் கட்சியையும் ஆட்சியையும் உள்ளிருந்தே கைப்பற்றிய முதலாளித்துவப் பாதையாளர்கள் சோசலிச ரஷியாவை சமூக ஏகாதிபத்தியமாகச் சீரழித்தனர். துரோகி கோர்பச்சேவ் காலத்தில் சோசலிச முகமூடியும் கழற்றி எறியப்பட்டு அம்மணமான முதலாளித்துவம் அதிகாரத்துக்கு வந்தது. சோவியத் ஒன்றியமும் சிதறுண்டு போனது. ரஷியாவின் வழியில் அடியொற்றிச் சென்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் முதலாளித்துவ நரகத்தை நோக்கி நாலுகால் பாய்ச்சலில் தாவி வீழ்ந்துள்ளன.

ஆனால் முதல் உலகப் போருக்குப் பிறகு ஏகாதிபத்திய நாடுகளிலே வறுமையும் வேலையின்மையும் தலைவிரித்தாடிய போது, அவற்றின் வாடைகூட இல்லாமல் சோசலிச ரஷியா மண்ணுலக சொர்க்கமாக மலர்ந்தது. கொள்ளைச் சுரண்டலும் கொடூர அடக்குமுறையும் முதலாளித்துவ நாடுகளில் பெருகியோடியபோது, அச் சுரண்டல் அமைப்பை ஒழித்து பாட்டாளிகளையே நாட்டின் எஜமானர்களாக்கி ஜனநாயகத்தை நிலைநாட்டி வளர்த்தது சோசலிசம். கொலை, போதை, பாலியல் வன்முறை என சீரழிவை ஏகாதிபத்திய கலாச்சாரம் விதைத்தபோது, இதற்கு நேரெதிரான சமத்துவம், மனிதநேயம், பொதுமை நலம், கூட்டுத்துவ வாழ்வு எனும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரத்தை சோசலிசம் உலக மக்களுக்கு வற்றாமல் வழங்கியது.

மனிதகுல வரலாற்றில் இம்முயற்சி புதியது; உன்னதமானது. ஆனால் கடினமானது; எதிர்பாராத இடர்ப்பாடுகள் நிறைந்தது. சோசலிசத்தைக் கட்டியமைப்பதில் முதலாளித்துவத்துடன் சமரசம் செய்து கொண்டாலோ, விட்டுக் கொடுத்தாலோ அவை இன்றைய சீனா, ரஷியாவைப் போல சீரழிந்து போகும் என்பதே வரலாறு உணர்த்தும் பாடம்.

கம்யூனிசத்தை நோக்கிய நெடும் பயணத்தில் இத்தோல்வி தற்காலிகமானது. மாறாக, இதுவே கம்யூனிசத்தின் தோல்வியாகிவிடாது. பேருந்துப் பயணத்தின்போது ஒரு விபத்து நேர்த்துவிட்டதைக் காட்டி, பேருந்தே ஆபத்தானது என்று வாதிடுவது எவ்வாறு முட்டாள்தனமானதோ, அதைப் போன்றதுதான் கம்யூனிசம் தோற்றுவிட்டது என்ற வாதமும்.

கம்யூனிசம் தோற்றுவிட்டது என்று ஊளையிட்டுக் கொண்டு ஓடிய ரஷிய, கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு முதலாளித்துவம் தந்த பரிசு — வறுமை, வேலையின்மை, கலாச்சார சீரழிவு, இனவெறி முதலானவைதான்! இதை வெகு விரைவிலே அனுபவ ரீதியாக உணர்ந்த ரஷிய மக்கள் செங்கொடி ஏந்தி லெனின் - ஸ்டாலின் உருவப்படங்களுடன் முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிராக தொடர்ந்து போராடத் தொடங்கிவிட்டார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வாசலிலேயே இடிமுழக்கமென பெரு நாட்டின் மார்க்சிய - லெனினிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையிலான புரட்சிப் போராட்டங்கள் முன்னேறி வருகின்றன.

உலகில் மீண்டும் நவம்பர்கள் தோன்றும்! ஏகாதிபத்தியங்களும் அவற்றின் எடுபிடி நாய்களும் வீழ்த்தப்படும்! செங்கொடிகள் உயர்ந்தோங்க கம்யூனிசமே வெல்லும்.

## 8-வது ஆண்டில் "புதிய ஜனநாயகம்"

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

புதிய ஜனநாயகம் ஏட்டிற்கு இந்த இதழோடு 7-வது ஆண்டு நிறைவெய்துகிறது. கடந்த 7 ஆண்டுகளில் நமது பத்திரிகை எதிர்கொண்ட இடர்பாடுகள் ஏராளம். அதிலும் குறிப்பாக, இவ்வாண்டில் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் அடக்குமுறை காரணமாக நமது இதழ் முறையாக வெளிவரவில்லை. இதழாசிரியர் மீதும் முகவர்கள் மீதும் பொய் வழக்குகள்; புதிய ஜனநாயகம் இதழை விற்பனை செய்யும் கடைக்காரர்களுக்கு போலீசின் மிரட்டல்; இதழ் விளம்பரம், சுவரொட்டிகளை ஒட்டிய வாசகத் தோழர்கள் கைது செய்யப்பட்டு பொய்வழக்குகள் — இத்தனை இடர்பாடுகளையும் உங்களது ஊக்கமான ஆதரவுடன் உறுதியான ஒத்துழைப்புடன் நாங்கள் தகர்த்தெறிந்து வருகிறோம்.

புதிய ஜனநாயகம் — பரபரப்பு - கிசுகிசு செய்திகளை வெளியிட்டு வாசகர்களைப் போதையூட்டி காசு பறிக்கும் வியாபார பத்திரிகை அல்ல. ஆட்சியாளர்களின் அதிக்கிரமங்களை, சமூகக் கொடுமைகளைச் சுட்டிக்காட்டிவிட்டு இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் துளியும் அக்கறை காட்டாமல் ஒதுங்கிக்கொள்ளும் 'நடுநிலை' பத்திரிகையுமல்ல. பரந்துபட்ட மக்களிடம் அரசியல் விழிப்புணர்ச்சியூட்டி அவர்களைப் போராட்டத்தில் ஈடுபடச் செய்யும் புரட்சிகர அரசியல் இயக்கத்தின் ஓர் அங்கம்தான் புதிய ஜனநாயகம். எனவேதான் எல்லா வகையான மக்கள் விரோத ஆட்சியாளர்களும் இதன் மீது குறிவைத்துத் தாக்குகிறார்கள்.

பாசிச இருள் சூழ்ந்துள்ள இன்றைய நிலையில் இம்மகத்தான கடமையை நிறைவேற்ற எமக்குத் தோள் கொடுங்கள். சந்தா, நன்கொடைகளைத் திரட்டி இதழ் வளர்ச்சிக்கு உதவுவதோடு, மேலும் அதிக அளவில் நமது இதழை மக்களிடம் கொண்டு சென்று புதிய, புரட்சிகர அரசியல் படையைக் கட்டியமைக்க உதவுங்கள்!

*புரட்சிகர வாழ்த்துக்களுடன்,*
*ஆசிரியர் குழு.*

படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஏழாம் ஆண்டு

23 - 24

அக். 16 — நவம். 15 '92

உள்நாடு:
தனி இதழ்: ரூ.2.50
ஆண்டு சந்தா: ரூ.60

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 15

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# பிச்சை தடுப்புச் சட்டம் விபரீதமானது, குரூரமானது, வக்கிரமானது.

இந்திய பாசிச ஆட்சியாளர்கள் இன்னொரு கொடிய கருப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கான ஏற்பாட்டில் இறங்கி விட்டனர். இது நாட்டின் சமூகவிரோத, பொருளாதாரக் கிரிமினல் குற்றவாளிகளுக்கு எதிராகவோ, அரசியல் போராளிகளுக்கு எதிராகவோ ஏவிவிடப்படுவதில்லை. இந்த ''நாகரிக'' சமூகத்தோடு சேர்ந்து மானத்தோடு வாழும் உரிமையைப் பறிகொடுத்துவிட்டு தாம் உயிர் வாழ்வதற்கே இந்தச் சமூகத்திடம் கையேந்தி நிற்கும் கோடிக்கணக்கான பிச்சைக்காரர்களுக்கு எதிராகக் கொண்டு வரப்படுகிறது. ''பிச்சைத் தடுப்புச் சட்டம்'' என்று இதற்குப் பெயர். முதல் கட்டமாக தலைநகர் டில்லியிலும் யூனியன் பிரதேசங்களிலும் இதை நிறைவேற்றுவதற்கான நகல் சட்டம் தயாரிக்கப்பட்டு கீழே சுற்றுக்கு விடப்பட்டிருக்கிறது. அங்கீகாரத்துக்காக விரைவில் நாடாளு மன்றத்தின் முன்பு வைக்கப்படும். அடுத்த கட்டமாக இது பிற பெருநகரங்களுக்கும் மாநிலங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

இந்தப் பிச்சைத் தடுப்புச் சட்டப்படி பிச்சை எடுப்பது குற்றமாக அறிவிக்கப்பட்டு தடை செய்யப் படும். இத் தடையை மீறுவோரைப் பிடித்துத் தண்டிப்பதற்கு எனத் தனிச்சிறப்பு நீதி மன்றங்கள் அமைக்கப்படும். பிடிபடும் பிச்சைக்காரர் தான் இனிப் பிச்சை எடுக்கப்போவதில்லை என்று பத்திரம் எழுதிக்கொடுத்தால், நீதிபதிக்கு அதில் நம்பிக்கை ஏற்பட்டால் முதன்முறை அவர் மன்னிக்கலாம். இல்லையானால் பிச்சைக்காரரின் உடல்நிலை, மனநிலை வயதைப் பரிசீலித்து 6 மாதம் முதல் 9 வருடம் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும். அத்தண்டனைக்குப் பிறகு மீண்டும் பிச்சை எடுத்துப் பிடிபட்டால் 5 ஆண்டுகள் வரை சிறை வைக்கப்படுவார். பிறரைப் பிச்சை எடுக்க வைப்பவர்கள் மேலும் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். தெருவிலே கலைக்கூத்து போன்ற நிகழ்ச்சிகள் நடத்திப் பிச்சை எடுப்பவர்களுக்கு ஏழு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு இந்த ஆட்சியாளர்கள் சொல்லும் காரணம் இதுதான்! நாட்டில் பிச்சை எடுப்பது அதிகரித்துவிட்டது; அரசு பல வளர்ச்சித் திட்டங்களை செயல்ப டுத்தினாலும், பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு திட்டங்களைக் கொண்டு வந்தாலும் பிச்சை எடுப் பதை ஒரு தொழிலாக சிலர் நடத்துவது பரவிவருகிறது; வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகளிடம் இந்தியாவைப் பற்றிய தவறான எண்ணம் ஏற்பட இது காரணமாக இருக்கிறது. ஆகவே பிச்சை எடுப்பதை ஒழிப்பதற்காக இந்த அதிரடி நடவடிக்கை அவசியமாக இருக்கிறது என்று நியாயப்படுத்து கிறார்கள்.

இந்த நாட்டுக்கு முதலாளித்துவம் வேண்டாம் - அது சுரண்டல் அமைப்பு முறை; கம்யூனிச சோசலிசமும் வேண்டாம் - அது ஒரு கட்சி சர்வாதிகார அமைப்பு முறை; ஆகவே சோசலிச பாணியிலான சமுதாயமாக ஜனநாயக சோசலிசம் அமைப்போம் என்று கூறி, அதை அரசியல் சட்டத்தில் பிரகடனம் செய்த இந்த பாசிச ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளினால் பிச்சை எடுப்பதை ஒழிக்க முடியவில்லை; அதிகரித்து வருகிறது என்றால், அது இந்த நாட்டுக்கு அவமானமாக இருக்கி றது என்றால் அதற்காகத் தண்டிக்கப்பட வேண்டிய சமூகவிரோத, தேசவிரோத குற்றவாளிகளே இந்த விபரீதமான, குரூரமான, வக்கிரமான சட்டத்தைக் கொண்டு வருபவர்கள்தான். பல்வேறு சமூக, பொருளாதாரக் காரணங்களால்தான் பிச்சைக்காரர்கள் உருவாக்கப்படுகிறார்கள். ஓட்டாண்டிகளா கும் விவசாயிகளும், நெசவாளிகள் போன்ற கைத்தொழிலாளர்களும், வேலையிழந்த ஆலைத் தொழிலாளர்களும், வேலைவாய்ப்பு மறுக்கப்பட்ட இளைஞர்களும், அனாதைகளாக்கப்பட்ட சிறு வர் சிறுமிகள், வயோதிகர்களும் பிச்சைக்காரர்களாக மாறுவதற்கு இந்தச் சுரண்டல், ஒடுக்குமுறை சமூக அமைப்பு ஒரு முக்கிய காரணமாக உள்ளது. இதிலே பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், மறுவாழ் வுத் திட்டங்கள் என்கிற பெயரில் பொது நிதியை ஏப்பம்விடும் ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் இன்னொரு முக்கிய காரணம்.

பிச்சை எடுப்பது அவமானகரமானது என்று தெரிந்தும், தெரியாமலும் கோடிக்கணக்கானோர் அப்படிச் செய்கிறார்கள் என்றால் அது நிர்பந்தமாக உள்ளது. அவர்களில் யாரும் அதை லாபம் தரும் தொழிலாகக் கருதினால் அவர்கள் இந்த ஆட்சியாளர்களின் அதிகாரிகளின் கூட்டாளிகளாகவே உள்ளனர். வாழ்விழந்தவர்களை சமூகவிரோத கிரிமினல் மஃபியா கும்பல்களாக மாற்றித் தனக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆட்டோ சங்கர்களை உருவாக்கி, வளர்த்துக் காத்து வந்தவர்கள் யார் என்று பார்த்தாலே இது புரியும். பிச்சை எடுப்பதால் நாட்டுக்கு அவமானம், அது குற்றம் என்றால் உலக நாடுகளிடம் பிச்சை எடுப்பதையே வாடிக்கையாகக் கொண்ட இந்த ஆட்சியாளர்களை என்ன செய்வது என்கிற கேள்வியும் எழுகிறது.

சட்டம் போட்டுக் கடும் நடவடிக்கை எடுப்பதால் கிரிமினல் குற்றமாகிய விபச்சாரத்தையே ஒழிக்க முடியவில்லை; அதையும் சட்டபூர்வமாக்கி விடலாம் என ஒரு பிரிவினர் சிபாரிசு செய்கை யில், பிச்சை தடுப்புச் சட்டத்தால் அதைக் குறைத்துவிடவோ, ஒழித்துவிடவோ முடியும் என்று யாரும் நம்பவில்லை. ஒரு குறிப்பிட்ட காலமே நீடித்திருந்தாலும் சோசலிச பொருளாதார அமைப்பில் மட்டும்தான் இத்தகைய சமூக அவலங்களை முற்றாக ஒழிக்கமுடிந்தது; செல்வம் கொழிப்பதாகக் கூறப்படும் ஏகாதிபத்திய நாடுகளில்கூட அவை பெருகி வருகின்றன என்பதை யாராலும் மறுக்க முடியாது. ''தடா'' சட்டத்தைப் போன்ற இந்த கொடிய, கருப்புச் சட்டத்தை அமுலாக்கும் அதிகாரத் தைப் பெறும் போலீசுத்துறை தனது கிரிமினல் பேராசையை விரிவுபடுத்திக் கொள்ளவே பயன்படும். பிச்சைக்காரர்களிடம் கூட லஞ்சம் வாங்கவும், பிச்சைக்காரிகளைக்கூட இழுத்துக் கொண்டு போய்க் கொட்டடி - கும்பல் கற்பழிப்பு நடத்தவும், பிச்சைக்காரர்கள் மத்தியிலும் ஒரு கிரிமினல் கும்பலை உருவாக்கிக் கொள்ளவுமே இது பயன்படும். வெட்கங்கெட்ட இந்த ஆட்சியாளர்கள் தமது கையாலா காத்தனத்தையும் பாசிச வக்கிரத்தையும் பிரகடனப்படுத்துவதே இந்தச் சட்டமாகும்.

படிப்பகம்

www.padippakam.com

## அரசின் மனித உரிமை கமிஷன்:

# பாலுக்குப் பூனை காவலா?

இடி அமீன் உகாண்டாவின் சர்வாதிகாரியாக இருந்தபோது, அதிபர் இடி அமீன் தனது சேவையைப் பாராட்டி பரிசு வழங்குவதாகக் கூறிக் கொண்டு தனக்குத்தானே பரிசுகள் வழங்கி பதக்கங்களைக் குத்திக் கொண்டான். இந்திய அரசு கொஞ்சம் பரவாயில்லை. நரசிம்மராவ் என்ற குடிமகன் பிரதமர் நரசிம்மராவுக்கு விடுத்த வேண்டுகோளின்படி, இந்திய அரசு மனித உரிமை பாதுகாப்புக் கமிஷனை அமைக்க அண்மையில் முடிவு செய்திருக்கிறது.

கடந்த செப்டம்பர் 14-ந் தேதியன்று உள்துறை அமைச்சகத்தின் சார்பில் மனித உரிமைகள் பாதுகாப்பு பற்றிய முதலமைச்சர்களின் மாநாடு கூட்டப்பட்டது. அதில் நாடெங்கும் தொடரும் மனித உரிமை மீறல் பற்றி விசாரிக்கவும், உரிய நடவடிக்கை எடுக்கவும் இந்திய அரசின் சார்பில் ஒரு கமிஷனை அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டது. மே.வங்க 'மார்க்சிஸ்டு' முதல்வர் ஜோதிபாசு உள்ளிட்டு ஐந்து மாநில முதல்வர்களும் மூன்று மத்திய அமைச்சர்களும் கமிஷன் நிறுவுவதை மேற்பார்வையிடுவார்கள் என்றும், அக்டோபர் மாத இறுதியில் இக்கமிஷன் தனது முதல் அறிக்கையை வெளியிடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. நவம்பர் மாதத்தில் தொடங்கும் பாராளுமன்ற கூட்டத் தொடரில் மனித உரிமைக் கமிஷன் மசோதாவை அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு ஏகமனதாக நிறைவேற்றுவது எனவும் இம்மாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கும் காட்டுமிராண்டி நாடுகளில் ஒன்றாக இந்தியா ஏற்கனவே அம்பலப்பட்டுப் போயுள்ளது. நாடெங்கும் பெருகிவரும் கொட்டடிக் கொலைகளும், உதிரத்தை உறையவைக்கும் மிருகத்தனமான சித்திரவதைகளும், போலீசு - ராணுவத்தின் கும்பல் கற்பழிப்புகளும் பாசிச இட்லருக்கே பாடம் சொல்லித் தருபவையாக உள்ளன. மனித உரிமையை வலியுறுத்தி போலீசின் அத்துமீறல் - அடக்குமுறையை எதிர்ப்போர் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்படுவதும் தாக்கப்படுவதும் வழமையாக நிகழ்பவை. அடிப்படை வசதிகோரி மக்கள் நடத்தும் மிகச் சாதாரண போராட்டங்கள்கூட போலீசு துப்பாக்கிச் சூட்டில் போய் முடிபவையாக உள்ளன. பாசிச முறையில் பயிற்றுவிக்கப்பட்ட போலீசு, ராணுவத்தைக் கொண்டு மனித உரிமைகளை மிருகத்தனமாக நசுக்கி வரும் இந்திய அரசு, இப்போது திடீரென மனித உரிமை மீது அக்கறை காட்டுவது ஏன்? அதிலும் மிக அவசரமாக மனித உரிமைக்கான கமிஷன் அமைக்கக் காரணம் என்ன?

அண்மைக்காலமாக, 'ஆம்னஸ்டி இன்டர்நேஷனல்', ஆசிய கவனிப்பு முதலான சர்வதேச மனித உரிமை - பொது மன்னிப்புக்கான அமைப்புகள், இந்தியாவில் தொடரும் மனித உரிமை மீறல் அட்டூழியங்களை அம்பலப்படுத்தி வருவதைத் தடுத்து நிறுத்தி வாயடைக்கச் செய்ய வேண்டியுள்ளது. மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியம் - பின்தங்கிய ஏழை நாடுகள் மீதான தமது பொருளாதார ஆதிக்கத்துக்கான ஒரு கருவியாக மனித உரிமை, ஜனநாயக உரிமை விவகாரத்தைக் கேடாகப் பயன்படுத்தி வருகின்றன. ஜனநாயக உரிமைகளை மதித்து நடக்கவில்லை என்று குற்றம் சாட்டி ஏழை நாடுகள் மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பது, பொருளாதார 'உதவி'களை நிறுத்தி வைப்பது முதலானவற்றை அண்மைக்காலமாகச் செயல்படுத்தி வருகின்றன.

கடந்த ஜூன் 26 அன்று அமெரிக்காவின் நாடாளுமன்றத்தில், பர்ட்டன் என்ற பிரதிநிதி கொண்டுவந்த மசோதாவின் மூலம் மனித உரிமை மீறலை முன்னிறுத்தி ஏழை நாடுகளுக்கான 240 கோடி டாலர் பொருளாதார 'உதவி' தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக இந்தியாவுக்கான அமெரிக்க 'உதவி' பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதாக இந்திய அதிகாரிகள் அங்கலாய்க்கின்றனர். அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரியான அபித் உசைன், ''மனித உரிமை மீறல் விவகாரத்தைக் காட்டி, உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பையும், தார்மீக பலத்தையும் சிதைக்க அமெரிக்கா தொடர்ந்து முயற்சித்து வருகிறது. இந்த இரும்புப் பிடியிலிருந்து நாம் தப்பித்தாக வேண்டும்'' என்று பீதியுடன் எச்சரிக்கிறார்.

**1987 ஆகஸ்ட் மாதத்தில் டெல்லி போலீசாரின் கொடூர சித்திரவதைக்குப் பின் குற்றுயிராகக் கிடக்கும் ராம்குமார் எனும் கூலித்தொழிலாளி. சர்வதேச பொதுமன்னிப்புக் கழகம் வெளியிட்டுள்ள புகைப்பட சாட்சி.**



இந்திய அரசு தப்பிக்க வழி கண்டுபிடித்துவிட்டது. அரசு சார்பில் மனித உரிமைக்கான கமிஷனை அமைத்து, உள்நாட்டு, வெளிநாட்டு மனித உரிமை அமைப்புகளின் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்று காட்டுவதுதான் அந்தவழி.

''இந்தியாவிலுள்ள பிரிவினைவாத - பயங்கரவாத சக்திகளின் பிரச்சார ஏஜென்சிகாகவே உள்நாட்டு, வெளிநாட்டு மனித உரிமை அமைப்புகள் செயல்படுகின்றன. பயங்கரவாதத்துக்கு எதிரான அரசின் நடவடிக்கைகளைப் பற்றி மக்களிடம் தவறான கருத்தைப் பரப்பி வருகின்றன. ஜனநாயக உரிமை என்ற பெயரில் இதை இனிமேலும் அனுமதிக்க முடியாது. பொய்ப் பிரச்சாரங்களை முறியடிக்கவும் அரசின் நியாயமான நடவடிக்கைகளை விளக்கவும் நமக்கு ஒரு அமைப்பு இன்று அவசர அவசிய தேவையாக உள்ளது'' என்கிறார் காங்கிரசின் அதிகாரபூர்வ செய்தி அளிப்பவரான வி.என். காட்கில்.

அமைப்பாக்கப்படும் மனித உரிமைக் கமிஷனை மேற்பார்வையிடும் உறுப்பினர்களில் ஆந்திர முதல்வரும் ஒருவர். போலீசுடன் மோதல் என்ற பெயரில் நிராயுதபாணியான நக்சல்பாரி புரட்சியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதை எதிர்த்து ஆந்திர அரசு மீது 42 வழக்குகள் இன்னமும் நீடிக்கின்றன. மற்றொருவர் மே.வங்க 'மார்க்சிஸ்டு' முதல்வர் ஜோதிபாசு. பெண்கள் மீதான பாலியல் வன்முறைக்கும், போலீசு குண்டர்களின் கும்பல் கற்பழிப்புக்கும் பேர்போன மாநிலம் என்று சர்வதேச பொதுமன்னிப்புக் கழகம் மே.வங்கத்தைக் கருப்புப் பட்டியலில் சேர்த்துள்ளது. இன்னொருவர் பீகாரின் முதல்வர் லல்லு பிரசாத் யாதவ். இந்தியாவிலேயே போலீசின் கொட்டடிக் கொலைகளுக்கும் காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைகளுக்கும் முன்னோடியான மாநிலம்தான் பீகார். தங்கள் ஆட்சியில் இத்தகைய கொடுமைகளுக்கு எதிராக ஒருசிறு துரும்பைக் கூட எடுத்துப் போடாத இத்தகைய முதல்வர்கள்தான் மனித உரிமைக் கமிஷன் அமைப்பதை மேற்பார்வையிடப் போகிறார்கள். இந்த லட்சணத்தில் அரசு நியமிக்கும் மனித உரிமைக்கமிஷனின் யோக்கியதையைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை.

எனவேதான் மனித உரிமைப் பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்ற முதல்வர்களும் - மந்திரிகளும் பயங்கரவாத தடுப்புச் சட்டம் (தடா), தேசிய பாதுகாப்புச் சட்டம் முதலான கொடிய கருப்புச் சட்டங்களை மறுபரி

படிப்பகம்

www.padippakam.com

சீலனை செய்யக்கூட முன்வரவில்லை. குறைந்தபட்சம், இச்சட்டங்களைக் கேடாகப் பயன்படுத்துவதைப் பற்றிக்கூட அவர்கள் வாய் திறக்கவில்லை. மனித உரிமைகளை மிருகத்தனமாக நசுக்கும் அரசு பயங்கரவாதத்தை நியாயப்படுத்துவதே அவர்கள் குறிக்கோளாக இருந்தது.

அடுத்து, இந்தக் கமிஷன் எவ்வாறு இயங்கும் என்பது இன்னுமொரு கேலிக் கூத்து. ''அரசுக்கு அப்பாற்பட்ட சுயேட்சையான அமைப்புகளைக் கொண்டு இக் கமிஷன் விசாரணையை நடத்தாது. மாறாக, மாநில போலீசு, மாநில புலனாய்வு அமைப்புகள் மற்றும் மத்திய புலனாய்வுத் துறை (CBI), ஆகியவற்றின் மூலமாகவே விசாரணைகளை நடத்தும்'' என்று உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. அதாவது, தற்போதுள்ள அரசு நிர்வாக எந்திரத்தைச் சார்ந்தே இக்கமிஷன் செயல்படும். சுருக்கமாகச் சொன்னால், எந்த போலீசின் மீது அத்துமீறல் - அடக்குமுறை பற்றிய குற்றச்சாட்டு வருகிறதோ, அந்த போலீசுத் துறையைக் கொண்டே விசாரணை நடத்தி மனித உரிமையை நிலைநாட்டப் போகிறார்களாம்! இத்தனை காலமும் இந்த முறையைச் செயல்படுத்தித் தோல்வி கண்ட பின்னரும், மீண்டும் அதே நடைமுறையை ஒரு கமிஷன் மூலம் செயல்படுத்தப் போவதாகக் கூறுவது கடைந்தெடுத்த அயோக்கியத்தனமாகும்.

மேலும், மனித உரிமை பற்றி தீடீர் கூப்பாடு போடும் காங்கிரசு காட்டுமிராண்டிகள் இத்தனைக்காலமும் அதை திட்டமிட்டே புறக்கணித்து வந்துள்ளனர் ஏகாதிபத்திய நாடுகள் வலியுறுத்தும் போலித்தனமான ஜனநாயக உரிமைகளைக் கூட அவர்கள் பின்பற்ற முன்வந்ததில்லை. ஐ.நா. மன்றத்தின் சார்பில் ஏகாதிபத்திய நாடுகள் நடத்திய மனித உரிமைக் காப்பு ஆலோசனை - பயற்சி மையத்தில் இந்திய அரசு இன்றுவரை பங்கேற்கவில்லை. இதுதவிர, காமன் வெல்த் நாடுகளின் செயலகத்தின் மூலம் துவக்கப்பட்டுள்ள மனித உரிமைக்காப்பு பட்டறையிலும் இந்தியா கலந்து கொள்ளவில்லை. மனித உரிமை பற்றிய அரிச்சுவடி கூடத் தெரியாத இந்திய ஆட்சியாளர்கள், மனித உரிமைக்கான கமிஷனை நிறுவி ஜனநாயகக் கூத்தாடுகிறார்கள் என்றால் — கேழ்வரகில் நெய் வடிகிறது என்றால் அதை நம்புவதற்கு இந்திய மக்கள் முட்டாள்கள் அல்ல.

காங்கிரசு பயங்கரவாதிகளின் ஆட்சியில் கமிஷன்களுக்கு எப்போதுமே பஞ்சமில்லை. நூற்றுக்கணக்கில் நிறுவப்பட்ட கமிஷன்களின் கதியைத் திருப்பிப் பார்த்தாலே அவற்றின் யோக்கியதை புரிந்துவிடும். தாழ்த்தப்பட்டோர் - பழங்குடியினர் நலனுக்காக ராம்தான் தலைமையில் நிறுவப்பட்ட கமிஷனும், மகளிர் நலனுக்காக முன்னாள் ஒரிசா முதல்வர் ஜே.பி.பட்நாயக்கின் மனைவி தலைமையிலான கமிஷனும் இன்றுவரை ஒருமண்ணும் செய்யவில்லை. பெண்கள், தாழ்த்தப்பட்டோர் மீதான அடக்குமுறையும் சுரண்டலும்தான் அதிகரித்துள்ளது. இந்த லட்சணத்தில் புதிதாக நிறுவப்படும் மனித உரிமைக் கமிஷனின் கதியைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை.



''இந்தியாவில் போலீசு அடக்குமுறை தீவிரமாகிவிட்டது. கொட்டடிக் கொலைகளைச் செய்த எந்த ஒரு போலீசுக்கும் இதுவரை தூக்கு தண்டனை வழங்கப்பட்டதில்லை. அதிகாரமில்லாத நீதித்துறை விசாரணைகளால் குற்றவாளிகளான போலீசைத் தண்டிக்கவும் முடிவதில்லை.''
— ஆந்திராவின் போலீசு இன்ஸ்பெக்டர் ஜெனரல் ரெவண்ணா சித்தைய்யாவின் ஒப்புதல் வாக்குமூலம்

மனித உரிமைக் கமிஷனை தானே நிறுவிக் கொள்வதன் மூலம் சர்வதேச அரங்கில் அம்பலப்பட்டுப் போயுள்ள இந்திய அரசு, அதை ஈடுகட்ட ஜனநாயக நாடகமாடுவதாக குறுக்கிச் சுருக்கிவிட முடியாது. முக்கியமாக, இரண்டு காரணங்களுக்காகவே அது இக்கமிஷனை நிறுவியுள்ளது. முதலாவதாக, நமது நாட்டிலுள்ள குடியுரிமை, ஜனநாயக உரிமைக்கான இயக்கங்களின் செயல்பாடுகளைத் தடுத்து நிறுத்துவது; பயங்கரவாத - பிரிவினைவாத சக்திகளுக்கு இவை வக்காலத்து வாங்குவதாகக் கூறி பழிதூற்றி தாக்குவது; அதன் மூலம் அரசு பயங்கரவாத அடக்குமுறைக்கு நியாயம் கற்பிப்பது என்பது இன்றைய ஆட்சியாளர்களுக்கு அவசரத் தேவையாக உள்ளது.

இரண்டாவதாக, பெருகிவரும் அரசியல் - பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக தமது ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள இன்றைய ஆட்சியாளர்களுக்கு பாசிச அடக்குமுறை ஒன்றே தீர்வாக உள்ளது. தேசிய ஒருமைப்பாடு கூச்சல் போட்டும், பிரிவினைவாத - பயங்கரவாதப் பீதியூட்டியும் இத்தகைய பாசிச அடக்குமுறையை சட்டபூர்வமாகவே ஏவும் போது அதை நியாயப்படுத்தவும், ஜனநாயக உரிமைகள் எதுவும் பறிக்கப்படவில்லை என்று மாய்மாலம் செய்யவும் அரசு சார்பாக ஓர் அமைப்பை நிறுவிக்கொள்வது அவர்களுக்கு மிக அவசியமாக உள்ளது. அதற்கான ஏற்பாடுதான் மனித உரிமைக் கமிஷன்!

தமிழகத்தில் பாசிச எம்.ஜி.ஆரின் ஆட்சியின் போது, மனித உரிமைகளை வலியுறுத்தி முன்னாள் நீதிபதி தார்குண்டே தலைமையில் மதுரையில் ஊர்வலம் நடந்த போது, தார்குண்டே உள்ளிட்டு மனித உரிமைக்கழகச் செயல்வீரர்களை போலீசார் மிருகத்தனமாகத் தாக்கினர். ஆந்திராவில் போலீசுடன் மோதல் என்ற பெயரில் நக்சல்பாரிப் புரட்சியாளர்கள் சுட்டுக் கொல்லப்படுவதை எதிர்த்த ஆந்திரப் பிரதேச சிவில் உரிமைக் கவுன்சில் தலைவரான டாக்டர் ராமநாதம் பட்டப்பகலில் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். போலீசாரின் ஊழலையும் அத்துமீறலையும் அம்பலப்படுத்திய ''உதயம்'' எனும் தெலுங்கு நாளேட்டின் நிருபரான குலாம் ரசூல் நக்சலைட் என்று முத்திரை குத்தப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுவரை காட்டுமிராண்டிப் போலீசாரின் இத்தகைய அட்டூழியங்களைப் பற்றி செய்திகளாவது வெளிவந்தன. இனி இப்படி செய்தி வெளியிடுவதுகூட தேச விரோதச் செயல், பயங்கரவாதிகளுக்கு வக்காலத்து வாங்கும் செயல் என்று தடை செய்யப்படும். அரசை விமர்சிக்கும் மனித உரிமை இயக்கங்கள் மீது தடையும் தாக்குதலும் ஏவப்படும். கேள்வி முறையின்றி அரசு பயங்கரவாதம் நாடெங்கும் கோரத்தாண்டவமாடும். அரசின் மனித உரிமைக் கமிஷன் இதற்கு நியாய விளக்கமளித்து அங்கீகரிக்கும்.

எனவே, மனித உரிமைக் கமிஷன் அமைக்கும் அரசின் மாய்மாலங்களைக் கண்டு ஜனநாயக உரிமைக்கான இயக்கங்களும் உழைக்கும் மக்களும் ஏமாந்துவிட முடியாது. அரசின் மோசடிகளை அம்பலப்படுத்தி படர்ந்துவரும் பாசிச அபாயத்திற்கெதிராக அணிதிரண்டு போராடாமல், ஜனநாயக உரிமைகளை மீட்கவோ, கட்டிக்காக்கவோ முடியாது.

□ *பாலன்*

படிப்பகம்

www.padippakam.com

# வெறிக்கூத்தாடும் தமிழகப் போலீசு

**மாஃபியா கும்பலின் தலைவி பார்ப்பன பாசிச ஜெயலலிதாவின் தலைமையின் கீழ் தமிழக போலீசின் திமிரும், அட்டூழியங்களும் வரம்பு கடந்து பெருகிவிட்டன.**

போலீசு அராஜகங்களுக்குப் பெயர்போன மாநிலம் பீகார் என்பது அனைத்திந்தியப் பத்திரிகைகளின் கணிப்பு. எண்ணிக்கையில் மட்டுமின்றி மக்கள் மீதான குரூரமான தாக்குதல்கள், வக்கிரமான சித்திரவதைகள் ஆகியவற்றிலும் பீகார் போலீசுக்கே முதலிடம். ஆனால் கடந்த ஓராண்டில் நாடு முழுவதும் நடந்த போலீசு அத்துமீறல்கள் பற்றிக் கணக்கெடுப்பு நடத்தினால் தமிழகம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அதிகாரத்தையும் ஆயுதபலத்தையும் ஒருங்கே கையில் வைத்திருக்கும் கிரிமினல் கும்பலான போலீசுக்கு தற்போது ஆட்சியாளர்களாக வாய்த்திருப்பது அ.தி.மு.க. எனும் பெயரிலான மாஃபியா கும்பல். இந்த மாஃபியா கும்பலின் தலைவி பார்ப்பன பாசிச ஜெயலலிதாவின் தலைமையின் கீழ் தமிழக போலீசின் திமிரும், அட்டூழியங்களும் வரம்பு கடந்து பெருகிவிட்டன. இது தற்செயல் நிகழ்ச்சி அல்ல. தொடர்ச்சியான லாக்-அப் கொலைகள், கற்பழிப்புகளுக்குப் பின்னரும் சொல்லளவில் கூட கண்டனம் தெரிவிக்க மறுக்கும் ஜெயலலிதாவின் ஆட்சி அப்பட்டமான போலீசு ஆட்சிதான் என்பதை வேறுயார் புரிந்து கொள்ளாவிட்டாலும், போலீசார் தெளிவாகவே புரிந்து வைத்துள்ளனர்.

விளைவு — சித்திரவதை, கொலை, கற்பழிப்பு, கொள்ளை ஆகியவற்றை காவல் நிலையத்தின் நான்கு சுவர்களுக்குள் பாதுகாப்பாக நடத்திக் கொண்டிருந்தவர்கள் இப்போது அவை அனைத்தையும் நடுவீதியில் நடத்திக் காட்டுகிறார்கள். கடந்த சில நாட்களில் நடைபெற்றுள்ள சம்பவங்கள் அதையே நிரூபிக்கின்றன.

★ செப்டம்பர் 23-ம் தேதியன்று தமிழக சட்டமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின்போது தன் தொகுதியில் கள்ளச் சாராயம் ஆறாக ஓடுவதாகக் குற்றம் சாட்டினார் திருத்துறைப்பூண்டி வலது கம்யூனிஸ்டு எம்.எல்.ஏ. பழனிசாமி. தொகுதி என்று பொதுவாகச் சொல்லக் கூடாதென்றும் எந்த ஊரென்று குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றும் அமைச்சர் பெருமக்கள் எகிறினர். பழனிசாமி ஊரைச் சொன்னவுடன் 'இவ்வளவு விவரம் தெரிந்திருந்தும் போலீசில் புகார் செய்யாதது ஏன்' என்று கிடுக்கிப்பிடி போட்டார் முத்துசாமி. போலீசில் சொல்லிப் பயனில்லாததால்தான் அவையில் சொல்வதாகக் கூறினார் பழனிசாமி. விவகாரம் அத்துடன் முடிந்தது.

வழக்கமாக அதிகார வர்க்கத்தைப் பற்றியோ, போலீசைப் பற்றியோ குறிப்பான புகார்கள் சட்டமன்றத்தில் எழுப்பப்பட்டால், அது பெரிதாகி வெடிக்குமுன் ஒப்புக்கு யாராவது ஒரு அலுவலரை மாற்றல் அல்லது தற்காலிக நீக்கம் செய்து பூசி மெழுகி விடுவதுதான் சட்டமன்ற ஜனநாயகத்தின் மரபு. பிரச்சினையைக் கிளப்பிய எதிர்க்கட்சியினரும் சட்டமன்ற விளையாட்டின் மரபுகளுக்குட்பட்ட பிரச்சினையை 'நாகரிகமாக' அத்தோடு கைகழுவிவிடுவர். ஆனால் பழனிசாமி விஷயத்தில் நடந்த கதையே வேறாக இருந்தது.

28-ம் தேதி மாலை எம்.எல்.ஏ. பழனிசாமி வீட்டிற்கு ஜீப்பில் வந்திறங்கிய போலீசு கும்பல் அவர் வீட்டிலேயே சாராய ரெய்டு நடத்தியுள்ளது. முன்னேற்பாடாக ஹரிகிருஷ்ணன் என்னும் கள்ளச்சாராய வியாபாரியிடம் சொல்லி எம்.எல்.ஏ. வீட்டின் கொல்லைப் புறத்தில் உள்ள ஒரு குழியில் சாராய பாக்கெட்டுகளைப் போட்டு வைக்கவும் போலீசு ஏற்பாடு செய்திருக்கிறது. இந்தத் திட்டம் நிறைவேறாததால் வெறும் சோதனை மற்றும் பழனிசாமி குடும்பத்தினரை அவமானப்படுத்துவதுடன் தனது பதில் நடவடிக்கையைப் போலீசு முடித்துக் கொண்டது.

போலீசால் சித்திரவதை செய்து கொல்லப்பட்ட காமாட்சி



கட்சிக்காரர்கள் மற்றும் பொதுமக்களின் போராட்டம் காரணமாக இந்த 'ரகசிய ரெய்டு' விவகாரம் அம்பலத்துக்கு வந்துவிட்டதால் பெயருக்கு ஒரு சப் இன்ஸ்பெக்டரையும் இரண்டு போலீசாரையும் மாற்றல் செய்துவிட்டு நடவடிக்கை எடுத்துவிட்டதாகக் கணக்கு காட்டிவிட்டது 'ஜெ'யின் காவல் துறை!

★ தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினத்தைச் சேர்ந்த கமலா என்ற இருபது வயது பெண்ணை கடத்திச் செல்ல முயன்ற போலீசார் பொதுமக்களின் தலையீட்டால் பின்வாங்க நேர்ந்தது. இரவு 9 மணியளவில் அதிராம்பட்டினம் சினிமாக் கொட்டகையொன்றில் முதல் காட்சி திரைப்படம் பார்த்துவிட்டு தியேட்டரை 'விட்டு வெளியே வந்து கொண்டிருந்தார் சாமிநாதன் என்பவரின் மனைவி கமலா. அப்போது சாராய போதையில் இருந்த மூன்று போலீசார் அப்பெண்ணை மறித்து பலவந்தமாக ஜீப்பில் ஏற்றியுள்ளனர். ஜீப்பில் ஏற மறுத்து தன்னை விட்டுவிடுமாறு போலீசின் கால்களில் விழுந்து கதறிய அந்தப் பெண்ணை காம வெறி பிடித்த மூன்று நாய்களும் மாறிமாறிக் காலால் உதைத்து மிதித்திருக்கின்றனர். படம் பார்த்துவிட்டு வெளியே வந்து கொண்டிருந்த சாமிநாதன், தன் மனைவியின் அலறலைக் கேட்டு ஓடி வந்து தலையிட்டபோது அவரையும் மிருகத்தனமாகத் தாக்கினர். தான் அந்த ஊர் எம்.எல்.ஏ வீட்டில் வேலை செய்பவர் என்றும் தானோ தனது மனைவியோ சந்தேகத்திற்குரிய நபர்களல்ல என்றும் சாமிநாதன் கதறியது எதையும் போலீஸ் காதில் வாங்கவில்லை. இவற்றையெல்லாம் காணப் பொறுக்காத இளைஞர்கள் சிலர் தலையிட்டபோது அவர்களுக்கும் அடி விழுந்தது. ஆத்திரமடைந்த மக்கள் போலீஸ் நிலையத்தை முற்றுகையிட்டு அடித்து நொறுக்கினர்.

இத்தனைக்கும் பிறகு ரெவினியூ மற்றும் போலீசு உயரதிகாரிகள் தலையிட்டுள்ளனர். குடிபோதையிலும் காமவெறியிலும் ஒரு பெண்ணை நடுவீதியில் வைத்துக் கடத்த முயன்ற போலீசு இப்போது தனது நடத்தைக்கு விளக்கம் சொல்கிறது. விபச்சாரத்தில் ஈடுபடும் பெண்களைக் கைது செய்ய தியேட்டருக்குச் சென்றதாகவும், அத்தகைய ஒரு பெண் கொடுத்த தகவலின் பேரில் கமலாவை கைது செய்ய முனைந்ததாகவும் நியாயம் கற்பிக்கிறது. ரவுடித்தனம் செய்த போலீசார் மீது இன்றுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

★ கூடலூர் - பந்தோபஸ்திற்காக பழனி போலீஸ் நிலையத்திலிருந்து வந்திருந்த கான்ஸ்டபிள் வெள்ளையத் தேவன் மாலை நேரத்தில் போலீசு மரபுப்படி போதையிலிருந்தார், கடைவீதியில் சென்று கொண்டிருந்த ஒரு பெண்ணைப்

படிப்பகம்

www.padippakam.com



# ஆபாசத்திற்கு எதிராக இளைஞர்கள் ஆவேசம்

மதுரை டி வி எஸ் நகரை அடுத்துள்ள கோவலன் நகருக்கு அருகில் உள்ளது முத்துப்பட்டி. இங்கு உள்ள ராஜா தியேட்டரில் நீண்ட காலமாகவே ஆபாசமான திரைப் படங்கள் திரையிடப்படுகின்றன. கடந்த அக்டோபரில் இங்கு ஒரு மலையாளப்படம் பார்த்துவிட்டு திரும்பியவர்கள் கோவலன் நகரைச் சேர்ந்த ஒரு பெண்ணிடம் ஆபாசமாக கேலி செய்து பேசியுள்ளார்கள். இதனால் ஆத்திரமுற்ற கோவலன் நகர் மக்கள் அவர்களைத் திட்டி அடித்து அனுப்பியுள்ளனர். தியேட்டர் உரிமையாளர் இதனை கேள்விப்பட்டு, அடியாள் கும்பலுடன் வந்து கோவலன் நகர் இளைஞர்கள் சிலரை தாக்கியுள்ளார். அத்துடன் போலீசிலும் அவ்விளைஞர்கள் மீது புகார் கொடுத்துள்ளார். போலீசும் விசுவாசமாக கோவலன் நகரைச் சேர்ந்த 4 இளைஞர்களை கைது செய்து கொண்டு சென்றது. இதனால் வெகுண்டெழுந்த கோவலன் நகர் பொதுமக்கள் ஆபாச திரைப்படம் காட்டுவதற்கு எதிராகவும் ரசிகர்கள் ஈடுபடும் ஆபாச சேட்டைகளுக்கு ஆதரவாக ரௌடித்தனத்தில் ஈடுபடும் ராஜா தியேட்டர் உரிமை யாளருக்கெதிராகவும், துணை நின்ற போலீசுக்கெதிராகவும், பிடித்துச் சென்ற இளைஞர்களை விடுதலை செய்யக் கோரியும் அக்டோபர் 11-ல் போலீஸ் நிலையம் முன்பு சாலையில் அமர்ந்து மறியலில் ஈடுபட்டனர். ஒரு மணிநேரம் போக்குவரத்து நின்றது. உடன் வந்த போலீசு உயர் அதிகாரிகள் பொதுமக்களை மிரட்டியும், சமரசமாகப் பேசியும் மறியலைக் கலைத்தனர்.

மேலும் அதே நாள் இரவு கோவலன் நகரில் துப்பாக்கி ஏந்திய போலீசாரை குவித்து, பஸ் மறியலில் ஈடுபட்டதற்காக பொதுமக்களை மிரட்டி, எச்சரித்துச் சென்றது போலீசு. இதனையடுத்து கோவலன் நகர் பொதுமக்கள் கலெக்டரிடம் மனு கொடுத்தும் அரசுத் தரப்பில் எந்த முடிவும் இல்லை. அடுத்த கட்ட போராட்டத்திற்கு கோவலன் நகர் பொதுமக்கள் தயாராகி வருகின்றனர். *பு.மா.இ.மு., மதுரை.*

பார்த்தவுடன் போதை தலைக்கேறி நடுவீதியிலேயே பலாத்காரம் செய்யத் தொடங்கினார். பீதியுற்ற அந்தப் பெண் கூச்சல் போடவே கடைவீதியே திரண்டு வந்து வெள்ளையத் தேவனை உரிய முறையில் கவனித்து ஆர்.டி.ஓ.விடம் ஒப்படைத்தது.

ஆர்.டி.ஓ. உள்ளூர் போலீசாரிடம் வெள்ளையத் தேவனை ஒப்படைத்தார். உள்ளூர் போலீசார் விசாரணையோ வழக்கோ இல்லாமல் மிகவும் பாதுகாப்பாக பழனி போலீசார் தங்கியிருந்த முகாமுக்கே வெள்ளையத் தேவனை அனுப்பி வைத்தனர். முகாமுக்குச் சென்று தனக்கு நேர்ந்த அவமானத்தை வெள்ளையத் தேவன் சொன்னவுடனே அங்கிருந்த 11 போலீசாரும் கையில் உருட்டுக் கட்டைகளுடன் பழிக்குப்பழி வாங்க கடைவீதியை நோக்கி புறப்பட்டனர்.

பள்ளியிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த ஒரு சிறுவன்மீது முதல் அடி விழுந்தது. பெண்கள், முதியவர்கள் என்று கண்ணில் பட்ட அனைவரையும் வெறித்தனமாகத் தாக்கியதுடன் கடைகளையும் நொறுக்கியது போலீசு கும்பல். படுகாயமடைந்த பொது மக்கள் பலர் மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டனர். போலீசு ரவுடிக் கும்பல் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியவுடன் பதினொரு பேரும் பெயருக்குக் கைது செய்யப்பட்டு உடனே ஜாமீனில் விடப்பட்டனர்.

*போலீசின் காமவெறித் தாக்குதலைக் கண்டித்து சாலை மறியல் செய்யும் கூடலூர் மக்கள்*



★ வாலாஜாபாத் - நகரையடுத்த கிராமம் ஒன்றில் சாராயம் விற்றுவந்தவர், குப்பன். சமீபத்தில் இவரது மனைவியை சாராயம் விற்றதாக போலீசு கைது செய்யவே அதிர்ச்சியடைந்த குப்பன் அத்தோடு இந்தத் தொழிலுக்குத் தலை முழுகினார். மாமூல் வரவு நின்று போனதால் ஆத்திரமடைந்த போலீசு மீண்டும் சாராயம் விற்குமாறு குப்பனைத் தொல்லை செய்தது. குப்பன் மறுக்கவே அவரை கிராமத்திலிருந்து நாயைப் போல அடித்து இழுத்துச் சென்றனர். கணவனை விடுவிக்க வந்த மனைவி காமாட்சியிடம் 2,500 ரூபாய் பணம் கொண்டு வராவிட்டால் கணவன் - மனைவி இருவரையும் குண்டர் சட்டத்தில் உள்ளே தள்ளிவிடுவோமென்று மிரட்டியிருக்கின்றனர். இரவு நேரமாகிவிட்டதால் கிராமத்திற்குத் திரும்பிச் செல்ல பேருந்து இல்லை. எனவே அருகில் உள்ள ஒரு வீட்டில் காமாட்சியைத் தங்க வைத்திருக்கிறது சதிகாரப் போலீசு கும்பல்.

மறுநாள் காலை கிராமத்துக்குப் புறப்பட்டுச் சென்ற காமாட்சி வீடு போய்ச் சேர்ந்த சிறிது நேரத்திலேயே இறந்து போனாள். அவள் வயிற்றிலிருந்த நான்கு மாதக் கரு சிதைந்து ரத்தப் பெருக்கால் சேலை முழுவதும் ரத்தச் சேறாகியிருந்தது. ஆத்திரம் கொண்ட மக்கள் வாலாஜாபாத் நகரில் கடையடைப்பும் ஊர்வலமும் நடத்தினர். சப்-இன்ஸ்பெக்டர் மணியழகன் மற்றும் போலீசார் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டனர்.

ஆனால் பிரேத பரிசோதனை அறிக்

படிப்பகம்

www.padippakam.com



ஜெயலலிதா கொடுக்கும் பதக்கங்களும் பாராட்டுக்களும் தமிழகப் போலீசின் கிரிமினல் நடவடிக்கைகளுக்கு 'டானிக்'

கையில் தில்லுமுல்லு செய்து காமாட்சி தூக்குப் போட்டுக் கொண்டு இறந்ததாக ஜோடித்திருக்கிறது போலீசு கும்பல். தற்காலிக நீக்கம் செய்யப்பட்ட போலீசார் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றனர்.

★ திருவல்லிக்கேணி போலீசு நிலையத்தைச் சேர்ந்த மகாலிங்கம் என்ற போலீசுக்காரர் செப். 28-ந் தேதியன்று எழும்பூரிலுள்ள ஒரு பிராந்திக் கடையில் வயிறுமுட்ட குடித்துவிட்டு காசு கொடுக்காமல் ஓடப் பார்த்தார். கடைக்காரர்கள் அவரைப் பிடித்துக் கொண்டதும் பணம் எடுத்து வருவதாகக் கூறி தப்பிச் சென்ற அவர், ஒரு ரௌடிக் கும்பலுடன் வந்து கடைக்காரர்களைத் தாக்கி கலவரத்தில் இறங்கினார். அருகிலுள்ள கடைக்காரர்கள் இதைத் தடுக்கவும் அவர்களது கடைகளும் அடித்து நொறுக்கப்பட்டன. தெருவில் சென்றவர்களுக்கெல்லாம் தரும அடி விழுந்தது.

★ கடந்த செப். 11-ந் தேதியன்று சேலம் பேருந்து நிலையத்தில் ஒரு வியாபாரியிடம் 'பிக்-பாக்கெட்' அடித்த திருடனை பொது மக்கள் கையும் களவுமாகப் பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்தனர். விசாரணையின் போது அத்திருடன், சேலம் - கிச்சிப்பாளையம் போலீசு நிலையத்தைச் சேர்ந்த தாமோதரன் எனும் கான்ஸ்டபிள் என்று தெரிய வந்தது. அப்போலீசுக்காரர் குடிபோதையில் தவறிழைத்து விட்டதாகக் கூறி அவரை விடுதலை செய்துவிட்டது, சேலம் போலீசு.

— இவை தமிழக போலீசின் 'ஒழுங்கு - கட்டுப்பாடு' உணர்வுக்கு அண்மைக்கால உதாரணங்கள்தான். சட்டபூர்வ கிரிமினல் கும்பலாக வளர்ந்துவிட்ட தமிழக போலீசு, அன்றாட வாழ்க்கையில் பொதுமக்களிடம் எவ்வாறு நடந்து கொள்கிறது என்பதைப் பட்டியல் போட்டால் பக்கங்கள் போதாது.

ஆனால் இலாகாபூர்வ கண்துடைப்பு நடவடிக்கை எடுக்காதது மட்டுமல்ல; வார்த்தையளவில் போலீசின் அட்டூழியங்களைக் கண்டிக்கக்கூட பாசிச ஜெயா தயாராக இல்லை. மாறாக, ''தமிழக போலீசார் உயிரைத் துச்சமாக மதித்துச் செயல்படுகிறார்கள். இக்கட்டான சூழ்நிலையிலும் தமது கடமையைச் சிறப்பாக செய்துள்ளார்கள்; நாட்டுக்காக அளப்பரிய தியாகம் செய்துள்ளார்கள்'' என்று அண்மையில் நடந்த அதிகாரிகள் கூட்டத்தில் புகழாரம் சூட்டுகிறார். போலீசாரின் சேவையைப் பாராட்டி கடந்த செப்டம்பர் மாதத்தில் திருச்சியில் கோடிக்கணக்கில் செலவிட்டு ஆடம்பர விழா நடத்தி, அண்ணா பதக்கங்கள் வழங்கி கௌரவித்துள்ளார். இதுதவிர போலீசாருக்கு கணக்கற்ற சலுகைகளும் சன்மானங்களும் வழங்க உத்திரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் பிரிவினைவாத சக்திகளையும், ஊடுருவ முயலும் புலிகளையும் துடைத்தொழிப்பதில் தமிழக போலீசார் மகத்தான சாதனை புரிந்துள்ளனர். அவர்களுக்கு நவீனரகத் துப்பாக்கிகளும் சாதனங்களும் இன்று அவசியமாக உள்ளது'' என்று கூடுதல் நிதி ஒதுக்கியதோடு மத்திய அரசிடமும் இதற்காக சிறப்பு நிதி ஒதுக்கக் கோரியுள்ளார். தமது அட்டூழியங்களைக் கண்டு கொள்ளாமல் பாசிச ஜெயா ஆதரித்துப் பாராட்டுவதைக் கண்ட தமிழக போலீசு அதிகார போதை தலைக்கேறி கள் குடித்த குரங்காக அண்மைக்காலமாக வெறியாட்டம் போட்டு வருகிறது.

இதுநாள் வரை மக்கள் போராட்டங்களின் போதும், போலீசு கொட்டடிக்குள்ளும் கடித்துக் குதறிய தமிழக போலீசு, இப்போது வீதிக்கே வந்து மக்கள் மீது பாயத் தொடங்கி விட்டது. போலீசு, மக்களைக் காப்பதற்கு அல்ல; போலீசிடமிருந்து மக்கள் தப்பித்து தம்மை தற்காத்துக் கொள்ள வேண்டும் என்கிற நிலைமைதான் உள்ளது. தமது அன்றாட வாழ்க்கையில் இதை அனுபவ ரீதியாக உணர்ந்து குமுறிக் கொண்டிருக்கும் உழைக்கும் மக்கள், இந்தக் காக்கிச் சட்டை காட்டுமிராண்டிகளுக்கு தகுந்த பாடம் புகட்டுவதைத் தவிர வேறுவழியில்லை.

○ *அஜித்*

## கட்டண உயர்வுக்கெதிராக போர்க்கொடி

மதுரை சட்டக்கல்லூரி மாணவர்கள் பல்கலைக் கழக கட்டண உயர்வினைக் கண்டித்து 12.10.92 முதல் பல வடிவங்களில் போராடி வருகின்றனர். விண்ணப்பப் படிவம் முதல் பட்டமளிப்பு சான்றிதழ் வரை அனைத்திற்கும் உரிய கட்டணத்தை இரண்டு மடங்கு மூன்று மடங்கு, 5 மடங்கு, 10 மடங்கு என்று உயர்த்தியிருக்கிறார்கள். பல்கலைக்கழக துணை வேந்தர் குத்தாலிங்கம், செனட் தீர்மானத்தை மீறி எதேச்சையாக கட்டணத்தை உயர்த்தியதோடு பேச்சு வார்த்தைக்குச் சென்ற மாணவர்களை ''வக்கு இல்லாதவன்லாம் ஏன்டா படிக்க வர்றீங்க?'' என்று இழிவுபடுத்தியும் உள்ளார்.

கல்லூரி அறையைப் பூட்டிக் கொண்டு ''சாகும்வரை சுயசிறையில் உண்ணாவிரதம்'' என்ற முறையில் போராடிய மாணவர்களை போலீசு கைது செய்து பின் விடுவித்தது. 14.10.92 அன்று கோரிப்பாளையத்தில் பஸ் மறியல் செய்தனர். மாணவ - மாணவிகளை கைது செய்த போலீசு இரவு வரை விடுவிக்காமல் வைத்திருந்ததோடு இழிவாகப் பேசி தரக்குறைவாக நடத்த முயன்றது. தங்களை இழிவுபடுத்திய துணைவேந்தரின் கொடும்பாவியையும் 14.10.92 அன்று மாணவர்கள் எரித்தனர். 15.10.92 அன்று கலெக்டர் ஆதிசேஷய்யாவை திடீரென 'கெரோ' செய்து எதிர்ப்பைக் காட்டினர். பிறகு அண்ணா ருந்து நிலையம் அருகில் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர்.

19-ந் தேதியன்று கல்லூரி முதல்வரை மாணவர்கள் 'கெரோ' செய்தனர். 25 பேர் கைதாகி விடுதலை செய்யப்பட்டனர். 21-ந் தேதியன்று மதுரை ரயில் நிலையத்தில் ரயில் மறியல் செய்து 15 பேர் கைதாகி பின்னர் விடுவிக்கப்பட்டனர். மாணவர்களின் தொடர்ச்சியான போர்க்குணமிக்க போராட்டத்தினால் பல்கலைக் கழகம் பணிந்து கட்டண உயர்வு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

சட்டக் கல்லூரி மாணவர்கள் அனைத்துக் கல்லூரி மாணவர்களிடமும் ஆதரவு கோரி பிரச்சாரம் செய்து வருகின்றனர். இதன் விளைவாக வ.உ.சி. போர்டு கல்லூரியும் இந்த போராட்டத்தில் இணைந்துள்ளது. மாணவர்களின் போராட்டத்திற்கு புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி ஆதரவு தெரிவித்து சுவரொட்டி இயக்கம் மேற்கொண்டது.

படிப்பகம்

www.padippakam.com





# மேலாதிக்கத்துக்கும் பாசிசத்துக்கும் மரண அடி கொடுப்போம்!

1992, அக்டோபர் 10, 11 தேதிகளில், மாநில அமைப்புக் கமிட்டி, இ.பொ.க. (மா—லெ) தனது 6-வது பிளீனத்தை நடத்தியது. மறைந்த நக்சல்பாரி புரட்சியாளரும் மாநில அமைப்புக் கமிட்டியின் தலைமையின் கீழ் செயல்பட்ட ஊழியருமான தோழர். ரங்கநாதன் பெயர் சூட்டப்பட்ட அரங்கத்தில், அவருக்கும் மக்களின் விடுதலைக்காகப் போராடி உயிர்நீத்த ஆயிரமாயிரம் தியாகிகளுக்கும் தனது வீரவணக்கத்தைச் செலுத்திய பின் பிளீனம் தொடங்கியது. தனது கடந்தகால வேலைகளைப் பரிசீலிக்கவும், அமைப்பை உற்சாகத்துடன் கொண்டு செல்லவும், புதிய மாநில அமைப்புக் கமிட்டியைத் தேர்ந்தெடுக்கவும், தமிழகம் முழுவதிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்ற இந்த பிளீனத்தில் உற்சாகத்துடனும், தோழமையுடனும், புரட்சிகர உணர்வுடனும் விவாதங்கள் நடைபெற்றன.

சர்வதேச அளவில் ரசிய சமூக ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து அமெரிக்க மேலாதிக்க வல்லரசு உலக முழுவதையும், தனது ஆதிக்கம் மற்றும் சுரண்டலின் பிடியில் கொண்டுவரவும், இரண்டாவது முகாமைச் சேர்ந்த பின்தங்கிய ஏழைநாடுகளை மறுகாலனியாக்கவும் செய்துவரும் வெறித்தனமான முயற்சிகளை இப்பிளீனம் எதிர்த்துப் போராட உறுதியேற்றது. அதேசமயத்தில் அமெரிக்காவின் உள்நாட்டுப் பொருளாதாரம் திவாலாகி வருவதையும், ஜப்பான் மற்றும் ஐரோப்பிய சமூக நாடுகள் குறிப்பாக ஜெர்மனி ஆகிய பொருளாதார மேல்நிலை வல்லரசுகளும், ரசிய இராணுவ மேல்நிலை வல்லரசும் அமெரிக்காவை எட்டிப்பிடிக்க போட்டிப் போடுவதையும் இப்பிளீனம் சுட்டிக்காட்டியது. தொகுப்பாகப் பார்க்குமிடத்து, இன்றைய ஒற்றைத்துருவ உலக அமைப்பில், அமெரிக்காவே உலக மக்களின் பிரதான எதிரியாக இருப்பதையும், அதை எதிர்த்து சர்வதேசப் பாட்டாளி வர்க்கமும் ஒடுக்கப்பட்ட இரண்டாம் உலக நாடுகளும் மக்களும் எதிர்த்துப் போராட வேண்டிய அவசியத்தையும் இப்பிளீனம் வலியுறுத்தியது.

உள்நாட்டில் காங்கிரசு பாசிச, இந்துமத வெறிப் பாசிசங்களை எதிர்த்து முறியடிப்பதையும், இந்தியாவை மறுகாலனியாக்குவதற்கு மேல்நிலை வல்லரசுகள், குறிப்பாக அமெரிக்கா செய்துவரும் முயற்சிகளை தடுத்து நிறுத்தவும் எதிர்த்துப் போராடவும் இப்பிளீனம் உறுதியேற்றது. படர்ந்து வரும் நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறைகள், தாழ்த்தப்பட்டவர்கள் மீதான கொலைவெறித் தாக்குதல்கள், விவசாயம் முழுவதையும் ஏகாதிபத்திய சங்கிலியுடன் பிணைக்க முயலும் மேல்நிலை வல்லரசுகளின் சதிகள் ஆகியவற்றை எதிர்த்து விவசாயிகளை அணிதிரட்ட இப்பிளீனம் முடிவெடுத்தது.

காங்கிரசு பாசிச, இந்து மதவெறி பாசிசங்களையும், பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலையும் எதிர்த்து இறுதிவரை போராடி முறியடிக்கக்கூடிய ஒரே கட்சியான இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) குழுக்களாக நீடிப்பதை சுட்டிக்காட்டிய இப்பிளீனம், அதை ஒன்றுபடுத்தவும், கடந்த கால தவறுகளினால் மக்களிடமிருந்து தனிமைப்பட்டிருக்கும் கட்சியை மக்களுடன் இணைக்கவும், ஒரு பெரும் அரசியல் சக்தியாக எழவும், பாடுபட இப்பிளீனம் உறுதியேற்றது. இதற்குத் தடையாக அமைப்பில் நிலவும் போக்குகளை முறியடிக்கவும், களையவுமான வழிமுறைகளை பிளீனம் விரிவாக மனம் திறந்து விவாதித்து தீர்வு கண்டது.

ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டைக் கறாராகப் பின்பற்றுவது, சுதந்திரமான ஜனநாயகபூர்வமான விவாதம், தேர்வு ஆகிய முறைகளை துவக்கம் முதலே கறாராகவும், நேர்மையாகவும் பின்பற்றி ஒழுகும் மாநில அமைப்புக் கமிட்டியின் இந்தப் பிளீனம், இத்தகைய கோட்பாடுகளைக் கறாராகப் பின்பற்றுவதன் மூலம் எத்தகைய பிரச்சினைக்குள்ளும் தீர்வு காணவியலும் என்பதை நிரூபித்துக் காட்டியதென்றால், அது மிகையல்ல.

11.10.92 இவண்,

***மாநில அமைப்புக் கமிட்டி,***
***இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மா—லெ).***
***தமிழ்நாடு.***

## பு.ஜ. முகவர் கைது:
## மீண்டும் தாக்குதல்!

ஜெயலலிதாவை பார்ப்பனீய வேள்வியிலிருந்து எழுந்து வரும் பூதமாக சித்தரித்து அட்டைப்படம் போட்டமைக்காகவும், பத்திரிக்கைகள் மீது தாக்குதல் தொடுத்த 'ஜெ'யின் பாசிச நடவடிக்கைகளில் ஒன்றாகவும் புதிய ஜனநாயகத்தின் மீது சில மாதங்களுக்கு முன்பு மதுரை போலீசு வழக்கு போட்டதை அறிவோம். புதிய ஜனநாயக ஆசிரியருக்கும் மதுரை முகவர் கணேசனுக்கும், கைது செய்ய முடியாத வண்ணம் முன் ஜாமீன் எடுக்கப்பட்டது. இது பொய் வழக்கு, ரத்து செய்ய வேண்டும் என்று கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டு, மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று தடை உத்தரவு வாங்கியுள்ளோம். ஆனால், சட்டத்தையும், நீதிமன்ற அதிகாரத்தையும் கேலிக்கூத்தாக்கிவிட்டு மதுரை போலீசு மீண்டும் தோழர் கணேசனை அதே தேசத்துரோக வழக்கின் கீழ் கைது செய்தது.

மதுரை - பெரியார் பேருந்து நிலையத்தில் உள்ள ஒரு புத்தகக் கடைக்காரரை புதிய ஜனநாயகம் விற்கக் கூடாது என போலீசு தொடர்ந்து மிரட்டி வந்தது. கடைக்காரர் முகவரிடம் முறையிட, நமது முகவர் தோழர் கணேசன் தனது முகவரியைக் கொடுத்து, "போலீசு மிரட்டும் பட்சத்தில் எனது விலாசத்தைக் கொடுங்கள்" என்று கூறியுள்ளார். அம்முகவரியைக் கொண்டு, 25.9.92 அன்று கணேசன் வீட்டிற்கு வந்து அவரை அழைத்துச் சென்று விசாரித்துப் பின் விட்டது மதுரை திடீர் நகர் போலீசு. மறுநாளும் அவ்வாறே செய்தது. மீண்டும் 27-ந் தேதி கணேசனை அழைத்துச் சென்று 124அ, 155, 156, 159 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து சிறையிலடைத்தது.

போலீசின் அராஜகத்தையும் அடக்கு முறையையும் கண்டித்தும் தோழரை விடுதலை செய்யக்கோரியும் மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி ஆகிய தோழமை அமைப்புகள் இணைந்து, பிரசார சுவரொட்டி வாயிலாக இயக்கம் எடுத்தன.

ஐந்து நாட்கள் கழித்து தோழரை நிபந்தனை ஜாமீன் வாயிலாகத்தான் வெளியே எடுக்க முடிந்தது. மதுரை போலீசின் சட்டமீறல் - அத்துமீறலுக்கு எதிராக புதிய ஜனநாயகம் சார்பாக சென்னையில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

—ஆசிரியர் குழு

www.padippakam.com

## உரவிலையேற்றம்: விவசாயிகளுக்குப் பேரிடி!

# அமெரிக்கா கோலெடுத்தால் ஆட்டம் போடும் குல்லாய்கள்

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 100 நாட்களில் விலைவாசியைக் குறைப்போம் என்று வாக்களித்த காங்கிரசுக் கயவாளிகள், அடுத்தடுத்து விலையேற்றம் செய்து மக்களை வாட்டியது போதாதென்று இப்போது உரவிலையேற்றத்தைத் தீவிரமாக்கி விவசாயிகளின் வயிற்றிலடித்துள்ளனர். இத்துரோகிகளின் எஜமானர்களான உலக வங்கி - ஐ.எம்.எப்.பின் கட்டளைப்படி, உரத்திற்கான மானியம் திடீரென வெட்டப்பட்டதன் விளைவாக, உரவிலைகள் ஆகாயத்துக்கு உயர்ந்து இந்திய விவசாயமே நாசமாக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் 25-ம் தேதியன்று உரத்திற்கான மானியத்தை நிறுத்துவதாகவும், உரவிலைக் கட்டுப்பாட்டை தளர்த்துவதாகவும் மத்திய அரசு அறிவித்தது. கடந்த பத்தாண்டுகளாக உற்பத்திச் செலவு அதிகரித்த போதிலும் விலை உயர்வு செய்யாததை ஆட்சேபித்து உர ஆலைகள் அரசிடம் முறையிட்டதன் பேரில் கூட்டுப் பாராளுமன்றக் கமிட்டியை நிறுவி அதன் பரிந்துரையின் பேரில் இந்த முடிவை எடுத்துள்ளதாக உர அமைச்சர் சிந்தா மோகன் தெரிவித்தார். இதன்படி மணிச்சத்து, சாம்பல் சத்து அடங்கிய உரங்களை (பாஸ்பேட், பொட்டாஷ்) யும் அவை உள்ளடங்கிய கூட்டு உரங்களையும் மட்டுமே விலைக் கட்டுப்பாட்டிலிருந்து நீக்கியுள்ளதாகவும், விவசாயிகளின் நலன் கருதி அவர்கள் அதிகமாகப் பயன்படுத்தும் தழைச்சத்து உரங்களின் (யூரியா) விலையை 10% குறைத்துள்ளதாகவும் மத்திய அரசு அறிவித்தது.

இவ்வாறு உர ஆலைகளின் கொள்ளை லாபத்துக்கும், பெருவியாபாரிகளின் பகற்கொள்ளைக்கும் மத்திய அரசு பச்சைக் கொடி காட்டியதைத் தொடர்ந்து உரவிலைகள் தாறுமாறாக உயரத் தொடங்கின. கூடவே, உரங்களை ஆலையிலிருந்து சரக்கு ரயிலில் எடுத்துச் செல்ல இதுவரை தரப்பட்ட சலுகைக் கட்டணமும் ரத்து செய்யப்பட்டதால், விவசாயிகள் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு உரவிலைகள் உயர்ந்தன. டி.ஏ.பி. எனப்படும் அடியுரம் ஒரு மூட்டை ரூ.245-லிருந்து ரூ.450 ஆக விலை ஏறியது. 90 ரூபாய்க்கு விற்ற பொட்டாஷ் 350 ரூபாயாக அதிகரித்தது. இதேபோல யூரியா போன்ற உரங்களும், கலப்பு உரங்களும் 100% விலை உயர்ந்தன.

உர விலைக் கட்டுப்பாட்டை மத்திய அரசு நீக்கிய போது, ஆகஸ்ட் 25-ம் தேதிக்கு முன்னர் அனுப்பப்பட்ட சரக்குகளை பழைய விலைக்கே விற்க வேண்டுமென்று தனியார் உர வியாபாரிகளை எச்சரித்திருந்தது. ஆனால் எந்த உர வியாபாரியும் இதை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. பழைய சரக்குகளைப் பதுக்கி செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கி அநியாய நிலைக்கு விற்று கொள்ளை லாபமடித்தனர். இதைத் தடுக்க வேண்டிய வேளாண்மை அதிகாரிகளோ கையூட்டுப் பெற்றுக் கொண்டு இந்த அநியாயத்தை அங்கீகரித்தனர்.

மறுபுறம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உரத்தை வாங்கவும் வழியில்லை. விவசாய கூட்டுறவு வங்கியில் உறுப்பினராக இருக்கும் விவசாயிகளுக்கு மட்டுமே இந்த வாய்ப்பு உள்ளது. அங்கேயும் ஆயிரத்தெட்டு தில்லுமுல்லுகள். அவற்றிலிருந்து தப்பிவிட்டாலும்கூட, ஒரு ஏக்கர் நிலத்துக்கு ஒரே ஒரு மூட்டை டி.ஏ.பி.தான் கொடுக்கப்படுகிறது. இதனால் தனியார் உர வியாபாரிகளிடம் அதிக விலை கொடுத்து உரங்களை வாங்கவேண்டிய நிர்பந்தத்துக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளார்கள். ஏழை, நடுத்தர விவசாயிகளோ இந்த விலையேற்றத் தாக்குதலால் தலையில் துண்டைப் போட்டுக் கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளார்கள்.

> "உர விலையேற்றத்தால் இனிமேல் பயிருக்கு எங்களால் உரம் போட முடியாது. இந்த வருடம் காவிரியில் தண்ணீர் வந்ததாலும், பருவ மழை பெய்ததாலும் நம்பிக்கையோடு நெல் விதைத்தோம். உரவிலை எங்கள் தலையில் இடியாக விழுந்து எங்கள் நம்பிக்கையே பொய்த்துப் போய்விட்டது" என்கிறார் ஒரு தஞ்சை விவசாயி.



"உர விலையேற்றத்தால் இனிமேல் பயிருக்கு எங்களால் உரம் போட முடியாது. இந்த வருஷம் காவிரியில் தண்ணீர் வந்ததாலும், பருவ மழை பெய்ததாலும் நம்பிக்கையோடு நெல் விதைத்தோம். உரவிலை எங்கள் தலையில் இடியாக விழுந்து எங்கள் நம்பிக்கையே பொய்த்துப் போய்விட்டது" என்கிறார் ஒரு தஞ்சை விவசாயி. "அரிசி விலையை ஏற்றிவிட்டு உப்பு விலையைக் குறைத்துவிட்டேன் என்பதாக அரசின் முடிவு பைத்தியக்காரத்தனமாக இருக்கிறது. சமச் சீராக உரங்களைப் போடாமல் யூரியாவை மட்டும் போட்டால் பயிர் வளருமா? முக்கியமாக கடலைக்கு கந்தகச் சத்து கொண்ட சூப்பர் பாஸ்பேட் போட்டால் தான் விளைச்சலைப் பார்க்கமுடியும். ஆனால் சூப்பர் பாஸ்பேட் விலையோ எட்டாத உயரத்துக்குப் போய்விட்டது. இனிமேல் மானாவாரியில் கூட எங்களால் கடலையை பயிர் செய்ய முடியாமல் போய்விட்டது" என்கிறார் ஒரு தென்னாற்காடு மாவட்ட விவசாயி.

இந்த விலையேற்றத் தாக்குதலால் உரக் கொள்முதல் 25-லிருந்து 30% குறைந்துவிடும் என்று அரசே ஒப்புக்கொள்கிறது. உரிய அளவு உரமிட முடியாமல் போவதால் இவ்வாண்டு உணவு உற்பத்தி குறைந்துவிடும்; இதனால் உணவுப் பஞ்சம் பற்றிப் பரவும் என்று பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாத நிலை உருவாகிவிட்டால் நடுத்தர விவசாயிகள் ஓட்டாண்டிகளாகி விடுவர். கூலி, ஏழை விவசாயிகள் பிழைக்க வழியின்றி பஞ்சை பராரிகளாக நகரங்களை நோக்கி ஓடுவர். விவசாயம் நாசமாக்கப்பட்டு இந்தியா இன்னுமொரு எத்தியோப்பியாவாக மாறிவிடும் என்று விவசாய நிபுணர்கள் கவலை தெரிவிக்கின்றனர். ஆனால் இந்திய அரசோ விவசாயியின் கையை வெட்டி அவருக்கே சூப்பு வைத்து கொடுப்பதைப் போல, உர மானியக் குறைப்பினால் கிடைக்கும் 3,500 கோடி ரூபாயை கிராமப்புற மேம்பாட்டுக்குச் செலவிடப் போவதாகப் பித்தலாட்டம் செய்கிறது.

விவசாயின் உடலைக் கத்தியால் கீறி உப்பையும் மிளகாயையும் சேர்த்து தடவியது போல, இந்திய அரசு ஒருபுறம் உரம், பெட்ரோல், டீசல் விலைகளை ஏற்றிவிட்டு மறுபுறம் விவசாய விளைபொருட்களுக்கான கொள்முதல் விலையைக் கூட்டித்தர பிடிவாதமாக மறுக்கிறது. அதேசமயம் அதிகவிலை கொடுத்து மேலைநாடுகளிடமிருந்து உணவு தானியங்களை இறக்குமதி செய்யும் அநியாயத்தை மேற்கொண்டு வரு

படிப்பகம்

www.padippakam.com

கிறது. உதாரணமாக, இந்திய கோதுமைக்கு கொடுக்கப்படும் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு 280 ரூபாய். இதை உயர்த்த மறுக்கும் அரசு அதே சமயம் கனடாவிலிருந்து ஒரு குவிண்டாலுக்கு 526 ரூபாய் கொடுத்து இறக்குமதி செய்ய முடிவு செய்துள்ளது. இதுதவிர விவசாயத்திற்கு வரி விதிக்கவும் உத்தேசித்துள்ளது.

ஐ.எம்.எப். - உலக வங்கியின் கட்டளைக்கு கோலெடுத்தால் ஆடும் குரங்காக மாறிவிட்ட ராவ் அரசுக்கு எதிராகக் குமுறும் விவசாயிகள் நாடெங்கும் சிறியதும் பெரியதுமான தன்னெழுச்சியான போராட்டங்களை நடத்தி வருகின்றனர். உ.பி. மாநிலத்தில் விவசாயிகள் தமது கால்நடைகளுடன் வந்து ஆர்ப்பாட்ட பேரணி நடத்தினர். கர்நாடக விவசாயிகள் ராவ் அரசை பதவி விலகக் கோரி தர்ணா, பொதுக்கூட்டங்களை நடத்தியுள்ளனர். தஞ்சை மாவட்ட விவசாயிகளோ அன்றாடம் ஒரு ஊரில் ஊர்வலங்களை நடத்தி தமது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

காங்கிரசு ஆட்சியாளர்கள் மீதான விவசாயிகளின் அதிருப்தியையும் ஆத்திரத்தையும் கண்ட எதிர்க்கட்சிகள் தவிர்க்கவியலாமல் இப்போராட்டத்தை ஆதரித்து தலைமையேற்கவும் முன்வந்துள்ளன. மேலை நாட்டிலிருந்து அதிக விலைக்கு கோதுமை இறக்குமதி செய்வதை எதிர்த்து துறைமுகங்களில் மறியல் போராட்டம் நடத்தப்போவதாக வி.பி.சிங் அறிவித்துள்ளார். தேவிலால், ஹெக்டே முதலானோர் கர்நாடகத்தில் விவசாயப் பேரணியில் பங்கேற்று, ராவ் அரசை பதவியிலிருந்து நீக்கப் போராட்டம் நடத்த அறைகூவல் விடுத்துள்ளனர். போலிக்கம்யூனிஸ்டுகளும் தேசிய முன்னணிக் கட்சிகளும் நவம்பர் மாதத்தில் கடையடைப்புப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளன.

ஆனால் ஒரு பிரச்சினை முன்னுக்கு வரும்போது போராட்டத்தை நடத்துவதும் பின்னர் வேறொரு பிரச்சினை வரும்போது அதைக் கைவிட்டு ஓடுவதும்தான் எதிர்க்கட்சிகளின் வாடிக்கையாக உள்ளது. காவிரிநீர் விவகாரம், பட்ஜெட் - விலையேற்றம், நலிவடைந்த அரசுத்துறை ஆலைகளை மூடி தொழிலாளர்களை வெளியேற்றுவது முதலானவற்றுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அண்மைக் காலமாக நடத்திய போராட்டங்கள் இதையே நிரூபிக்கின்றன. தற்போதைய உர விலையேற்ற எதிர்ப்புப் போராட்டமும் இதே வழியில் ஒரு கட்டத்துக்குப் பிறகு பின்னுக்குத் தள்ளப்படும் அபாயமும் உள்ளது.

எனவே, மக்கள் போராட்டங்களை ஒருங்கிணைத்து தொடர்ச்சியான விடாப்பிடியான போராட்டத்தை நடத்த வக்கற்ற இக்கட்சிகளை விவசாயிகள் விழிப்புடனிருந்து அம்பலப்படுத்தி தனிமைப்படுத்த வேண்டும். உரவிலை எதிர்ப்புப்போராட்டத்தை மக்கள்விரோத காங்கிரசுக்கும் அதன் எஜமானர்களான ஏகாதிபத்தியங்களுக்கும் எதிரான போராட்டமாக விரிவுபடுத்தி முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

● குமார்

## உரவிலையேற்றத்தைக் கண்டித்த விவசாயிகளுக்கு சிறைக்கம்பி

உர விலையேற்றத்தைக் கண்டித்து உசிலை வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி, பகுதியில் முதல்கட்டமாக பரவலாக சுவரொட்டி ஒட்டியது. அடுத்தக்கட்டமாக 7.10.92 அன்று நரசிம்மராவ், ஜெயலலிதா கொடும்பாவிகளை ஊர்வலமாக எடுத்துச் சென்று தூக்கிலிடுவதற்கு திட்டமிட்டு 20 ஊர்களில் தெருமுனைப் பிரச்சாரம் மேற்கொண்டு ஆதரவு திரட்டியது. ஆனால் கடைசி நேரத்தில் போலீசு ஊர்வலத்தை அனுமதிக்காமல் வி.வி.மு. வினரை கைது செய்தது. கைதான குருசாமி, சிவகாமு, திருப்பதி, பாண்டி, திசைகருணன் ஆகிய முன்னணியாளர்கள் மீது மூன்று பிரிவின் கீழ் வழக்கு போட்டு, சிறையிலடைத்தது. கைதைக் கண்டித்தும் சுவரொட்டி ஒட்டப்பட்டது. நிபந்தனை பிணையில் பிறகு வி.வி.மு.-வினர் வெளிவந்தனர். இப்போராட்டம் பகுதி மக்களிடையே அங்கீகாரத்தையும் ஆதரவையும் பெற்றுத் தந்தது.

**தகவல்: வி.வி.மு., உசிலை வட்டம்.**

## முதல்வரின் ஆணவத்தால் மாணவர் உயிர் பலி!

*திருச்சியிலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிறுவனத்தில் (ITI) ஏழை நெசவாளியின் மகன் சுதாகர் எனும் மாணவர், இக்கல்வியாண்டில் கடைசல் (TURNER) பிரிவில் இரண்டாம் ஆண்டு படித்து வந்தார். சென்ற வருடம் அவருக்கு கல்லூரி விடுதியில் இடம் கிடைக்காததால் வார்டனின் வாய்மொழி அனுமதியுடன் விடுதியில் தங்கி படித்து வந்தார். இந்த ஆண்டு விடுதிக்கு முறையாக விண்ணப்பித்து அதற்கான நேர்காணலுக்கு 4.9.92 அன்று சென்றார். இப்பயிற்சிக்கல்லூரியின் துணை இயக்குநராகவும் முதல்வராகவும் பணியாற்றும் சேக் அகமது, சுதாகருக்கு இம்முறையும் விடுதியில் இடம் கொடுக்காததுடன் சென்ற முறை அனுமதியின்றி விடுதியில் தங்கியிருந்ததாக குற்றம் சாட்டியதுடன் ''ஓசியில் படிக்கணும்னு நினைக்கிறியாடா? போய் மூட்டைத் தூக்குடா'' என கேவலப்படுத்தி பேசினார். இதனால் மனமுடைந்த சுதாகர் நடந்ததை சக மாணவர்களிடம் கூறி வருத்தப்பட்டார். அன்று மாலையே ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்துகொண்டார்.*

*முதல்வர் சேக் அகமதுவின் அதிகாரத்திமிர்ப் போக்கைக் கண்டித்து நடவடிக்கை எடுக்கக்கோரி கல்லூரி மாணவர்கள் வகுப்புகளை புறக்கணித்தனர். பலநாள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு ஊர்வலமாகச் சென்று மனு கொடுத்தனர். வாயைக் கட்டிக் கொண்டு ஊர்வலம், உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம் என பல வடிவங்களில் போராடினர். அதிகாரிகளின் வாக்குறுதி, விசாரணை நாடகம் எதையும் நம்பாமல் நடவடிக்கை எடுக்கக் கேட்டு போராட்டத்தைத் தொடர்ந்தார்கள்.*

*இதற்கிடையில் முதல்வர், சுதாகரின் பெற்றோரைக் கூப்பிட்டு, அவர்கள் தன்மீது மேல் நடவடிக்கை எடுக்காமல் இருக்க நீலிக் கண்ணீர் வடித்தார். விடுதியை காலவரையரையின்றி மூட எடுத்த முயற்சியையும் போராட்டத்தையும் உடைக்க மாணவர்களின் பெற்றோரை மிரட்ட எடுத்த முயற்சியையும் மாணவர்கள் அம்பலப்படுத்தி முறியடித்தனர்.*

*மாணவர்கள் பஸ் மறியல் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்தவுடன் அரண்டுபோன அதிகாரிகள் ''20 நாட்களில் முதல்வர்மீது நடவடிக்கை எடுப்பதாக எழுதிக் கொடுத்தனர். எனவே, மாணவர்கள் போராட்டத்தைக் கைவிட்டு வகுப்புகளுக்குச் சென்றனர். இப்போராட்டத்திற்கு ஆதரவாக புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியினர் தட்டி வாயிலாக பிரச்சாரம் மேற்கொண்டனர்.*

*— தகவல்: பு.மா.இ.மு., திருச்சி.*

படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

பீகாரில் சீதாமாரி என்ற சிறுநகரத்தில் துர்க்கைப் பூசை ஊர்வலம் என்ற சாக்கில் பஜ்ராங் தளமும் மகாவீர (அனுமார்) அகாதா என்ற அமைப்பும் மதக் கலவரத்தைத் தொடங்கி அரசியல் ஆதாயம் தேடமுயன்றன. அக்டோபர் 6 அன்று ஊர்வலத்திற்கு நிர்வாகம் அனுமதித்த பாதையை வேண்டுமென்றே நிராகரித்து முஸ்லீம்கள் குடியிருப்பு, மகுதி இடம் பெற்றுள்ள பாதையை மேற்கொண்ட போது எதிர்ப்பு வரவே கலவரம் தொடங்கியது. பின்னர் அருகிலுள்ள ரிகா பகுதிக்கும் பரவியது. 14 கிராமங்களில் கலவரம் பரவி 852 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. 1.2 கோடி ரூபாய் சொத்துக்கள் நாசமாயின. 46 பேர் கொல்லப்பட்டு, 100 பேர் படுகாயமுற்றனர். இதுவரை நகரங்களில் மட்டுமே விநாயகர் சதுர்த்தி, துர்க்கை ஊர்வலம் நடத்தி கலவரத்தை மூட்டிய இந்துமத வெறியர்கள் இப்போது கிராமப்புறங்களிலும் தமது கைவரிசையைக் காட்டத் தொட்ங்கிவிட்டனர்.

பெரு — பாசிசக் கும்பல் ஒன்றினால் ஆளப்படும் தென் அமெரிக்க கண்டத்து நாடாகும். இங்கு கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு பிரிவான 'ஷைனிங் பாத்' ('ஒளிரும் பாதை') என்ற மார்க்சிய — லெனினிய குழு. ஆயுதந்தாங்கிய, கொரில்லா போராட்டத்தைத் தலைமையேற்று நடத்துகிறது. இக்குழுவின் தலைவர் கோன்சாலோ (உண்மைப் பெயர்: அபிமேல் கஸ்மான் ரேனோசோ) 1970-களில் தத்துவப் பேராசிரியராக இருந்தபோதும், பின்னர் தலைமறைவாக இருந்தும் இயக்கத்தை வழி நடத்தி வருபவர். தலைநகர் லிமாவில் கடந்த செப்டம்பர் 12-ல் பெரு நாட்டு போலீசால் கோன்சாலோ கைது செய்யப்பட்டார். பெருவின் புரட்சிகர கம்யூனிச இயக்கத்திற்கு இதுவொரு முக்கிய இழப்பு. எனினும் புரட்சிகரமான மார்க்சிய — லெனினிய — மாசேதுங் சிந்தனையை ஏற்றுச் செயல்படும் இக்குழு நிச்சயமாக இயக்த்தை முன்னெடுத்துச் செல்லும். உலக முழுவதுமுள்ள புரட்சியாளர்கள் கோன்சாலோ விடுதலைக்கு குரல் கொடுக்க வேண்டும். இந்தியப் பத்திரிக்கைகளில், பார்ப்பன ''இந்து'' ஏட்டின் என்.ராம் கோன்சாலோ அவர்களை விடுதலைப் புலி பிரபாகரனுடன் ஒப்பிட்டும், இக்குழுவை வன்முறைக் கலகக் கும்பல் - பெருமளவு உயிர் மற்றும் பொருட்சேதங்களை உருவாக்கிய தீவிரவாதக்குழு என்றும் குறிப்பிட்டு ஏகாதிபத்தியங்களின் கம்யூனிச விரோத வக்கிரத்தையே கக்கியுள்ளார். பெரு நாட்டின் புரட்சிகர இயக்கத்தின் வளர்ச்சி கோன்சாலோ - கைதுக்கு தக்க பதில் சொல்லும். ராம் போன்ற ஏகாதிபத்திய தாசர்களின் முகத்திலும் கரிபூசும்!

மத்தியப் பிரதேசத்தில் ஆட்சிக்கு வந்த இரண்டரை ஆண்டுகளில் பி.ஜே.பி. அரசு ஆர்.எஸ்.எஸ். குடும்பத்தைச் சேர்ந்த அமைப்புகளுக்கு ரூ. 70 கோடி பெறுமான சுமார் 200 ஏக்கர் நகர்ப்புற நிலங்களை இலவசமாக அல்லது அற்பவிலைக்கு அளித்துள்ளது. கட்சிப் பணிகள், சமூக சேவை, விடுதி, கலைப்பொருட்களின் கூடம், பள்ளிகள் போன்றவற்றின் பெயரில் நிலங்களைப் பெற்று ரியல் எஸ்டேட் வியாபாரத்திற்கு மறைமுகமாக பயன்படுத்தி கோடி கோடியாக கொள்ளையடிக்க இறங்கியுள்ளன ஆர்.எஸ்.எஸ். அமைப்புகள்.

ரூ. 1.5 கோடி மதிப்புள்ள, போபால் அரோரா, காலனி பகுதியில் 1.5 ஏக்கர் நிலத்தை கட்சி கட்டிடங்களுக்காக என்று பாரதீய ஜனதா இலவசமாகப் பெற்று, எழும்பும் 4 மாடி கட்டிடத்தின் தரைப்பகுதியை கடைகளுக்கு ஏலம் விட்டுள்ளது. அகில பாரதீய வித்யா பரிசத், பாரதீய மஸ்தூர் சங்கம், ஷ்ராம் சாதனா கேந்திரம் ஆகியவை ஒரு ரூபாய் செலுத்தி ஒரு கோடி ரூபாய் பெறுமான போபால் ஜவஹர் சௌக் பகுதியிலுள்ள ஒரு ஏக்கர் நிலத்தைப் பெற்றுள்ளன. தீனதயாள் ஆராய்ச்சி நிறுவனம் 30 ஏக்கர் சாத்னா பகுதி நிலத்தை (பெறுமானம் ரூ. 23 லட்சம்) இலவசமாக பெற்றது. தமிழகத்தில் டான்சி நிலத்தை சுருட்டிக் கொள்ள ஜெயா; ம.பி.யில் அரசு நிலத்தை அபகரிக்க பட்வா! என்னே பார்ப்பன கும்பலின் ஒற்றுமை!

உத்திரப் பிரதேசத்தில் லக்னோ மாவட்டச் சிறையிலிருந்து நான்கு காலிஸ்தானி போராளிகள் கடந்த ஆகஸ்ட் 20-ம் தேதியன்று தப்பிவிட்டனர். ஜெலர் சிரீவத்சவாவை போலீசார் கைது செய்து சித்திரவதை செய்தனர். ரூ. 10 லட்சத்திற்காக தப்பிச் செல்ல ஏற்பாடு செய்ததாக ஒப்புக் கொள்ளுமாறு மிரட்டினர். ஆனால், சிரீவத்சவா நீதிபதிக்கு முன்னர் போலீசு தன்னை மிருகத்தனமாகச் சித்திரவதை செய்து மிரட்டியதை அம்பலப்படுத்திவிட்டார். இறுதியில் அவரது மனைவி, மகள் இருவரையும் அழைத்து கும்பலாக கற்பழிப்பு செய்யப் போவதாக மிரட்டவே பயந்து அவர்கள் சொன்னதை ஒப்புக் கொண்டதாக தெரிவித்தார். இச்செய்தி வெளிவந்ததும் ஜெய்லரை பிடித்து பொய்வழக்கு போட்டிருப்பதை கண்டித்து 1,000 பேருக்கும் மேலான சிறைக் கைதிகள் 3 நாட்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். உத்தமர்களாக நாடகமாடும் போலீசார் தப்பிச் சென்றவர்களை பிடிப்பதில் எந்த முன்னேற்றத்தையும் காட்டவில்லை. சிரீவத்சவா கையூட்டாக பெற்றதாகக் கூறிய ரூ. 10 லட்சத்தையும் மீட்கவும் முயலவில்லை. எப்படியிருக்கிறது ராம ராஜ்ஜிய போலீசாரின் யோக்கியதை?

தென்னாப்பிரிக்காவில் கறுப்பின மக்களின் உரிமைகளுக்காகப் போராடி வரும் ஆப்பிரிக்க தேசிய காங்கிரசு வெள்ளை நிறவெறி அரசுடன் பேச்சுவார்த்தையை நிறுத்திக் கொண்டதையடுத்து பல்லாயிரக்கணக்கானோரைத் திரட்டி மக்கள் இயக்கங்களை நடத்தி வருகிறது. செப்டம்பரில் பிஷோ மாநிலத்தில் கிட்டதட்ட 50,000 பேர் சிஸ்கி என்னும் நகரைக் கடக்கும் போது ஒரு விளையாட்டரங்கத்தில் கூடினர். முள்வேலி போட்டு நிர்வாகம் சாலையைத் தடுத்திருந்தது. இவ்வேலியை நோக்கி முன்னேறிச் சென்ற போது 28 பேர் சுட்டுத் தள்ளப்பட்டனர். 200-க்கும் மேலானோர் காயமுற்றனர். இது அம்மாநிலத்தில் கறுப்பின நிர்வாகத்தின் தலைவராக உள்ள பிரிகேடியர் ஔபா கோசோ என்ற கைக்கூலியின், திட்டமிட்ட வன்செயலாகும். கறுப்பினத்தில் தமது அடிவருடிகளைக் கொண்டே கறப்பின மக்களைக் கொன்றுவிட்டு, தமது அரசாங்கத்திற்கு எந்த சம்பந்தமும் இல்லை என்கிறார் வெள்ளை நிறவெறி அதிபர் டி கிளெர்க். உலகமெங்கும் பிஷோ படுகொலையைக் கண்டித்து கண்டனக் குரல்கள் ஒலித்தபோது, முன்பு மாண்டேலாவுக்கு பாரத ரத்னா விருது வழங்கிய இந்தியா மௌனம் சாதித்தது. ஒருவேளை இதுவும் உலக வங்கியின் கட்டளையாக

வீரமரணமடைந்த பெண் கொரில்லாப் போராளிக்கு சிவப்பஞ்சலி செலுத்தும் பெரு நாட்டு மார்க்சிய - லெனினிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கோன்சாலோ.



படிப்பகம்

www.padippakam.com

இருக்குமோ?

பஞ்சாப் தலைநகர் சண்டிகாரின் புறநகர்ப் பகுதியில் ஒரு நர்சரித் தோட்டம். நள்ளிரவில் முகமூடி அணிந்து இருவர் துப்பாக்கியுடன் நுழைந்தனர். தோட்டக்காரர் சாம்பாலின் நெஞ்சில் ஒருவன் துப்பாக்கியை அழுத்த மற்றொருவனோ அவர் துணைவி குசுமா தேவியின் மேல் பாய்ந்தான். ராம்பால் அவரது கவனத்தை தந்திரமாக திருப்பி கடப்பாரை எடுத்து ஒரேயடியில் அவனை சாய்த்தார். அடுத்தவனையும் கடப்பாரையால் கவனிக்க அவனும் வீழ்ந்தான். ஆத்திரம்தீர அடித்ததில் இருவரும் பிணமாயினர். போலீசுக்கு செய்தி அனுப்பினார். இறந்தவர்கள் தீவிரவாதிகள் எனக்கு தூகலித்தது போலீசு. ராம்பாலின் துணிவைப் பாராட்டி பரிசுக்கும் வாக்களித்தது.

செய்தி பரவியதும் பிணங்களைப் பார்க்க வந்தவர்களில் மத்திய ரிசர்வ் போலீசைச் சேர்ந்த ஒருவருக்கு பார்த்த முகங்களாகத் தோன்றின. சரி பார்த்தலில் கொலையுண்டது இருவரும் ரிசர் போலீசுப் படையைச் சேர்ந்தோர் என தெரிந்தது. பிடித்தது சனி ராம்பாலுக்கு. பரிசளிப்பு வாக்குறுதிகளோ மிரட்டல்களாகின. ராம்பாலையும் குசுமா தேவியையும் கைது செய்து சித்திரவதையைத். தொடங்கியது போலீசு. மக்களை காக்க வந்த ரிசர்வ் போலீசார் கற்பழிப்பு குற்றத்திற்காக கொலையுண்டனர் என்றால், இப்படையின் மதிப்பு, போலீசாரின் தார்மீக ஊக்கம் என்னவாகும்? — இருவரின் குடும்பங்களுக்கு கிடைக்கும் சலுகைகள் என்ன ஆவது என்று அதிகாரிகள் யோசித்தனர். பொய்களுக்கு ராம்பால் - குசுமாவை தயாராக்க சித்திரவதைகளை நடத்தினர். இறந்த ஒருவனுடன் குசுமா தகாத உறவு வைத்திருந்ததாகவும், ஏற்பட்ட குடும்பப் பிரச்சினையை தீர்த்து வைக்க இருவரும் வந்ததாகவும், ராம்பாலுடன் தகராறு ஏற்பட்டதில் ராம்பால் கொலை செய்தாக வைத்து அவரை மட்டும் சிறையில் தொடர்ந்து சித்திரவதை செய்து கொண்டு குசுமாவை விடுவித்தனர்.

ராம்பாலின் நண்பரான இன்னொரு தோட்டத் தொழிலாளி சண்டிகார் சமாஜ்வாதி ஜனதா கட்சித் தலைவர் ஹர்மோகன் தாவனை அணுகி, அவர்மூலம் பஞ்சாப் கவர்கரிடம் முறையிட்டார். இதன் பின்னர் தனது இளம் மனைவியை காப்பாற்றுவதற்காக ராம்பால் கொலைகளைப் புரிந்ததாக வழக்கு இன்னொரு பிரிவுக்கு மாற்றப்பட்டது. பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட ராம்பாலை பெருமளவில் மக்கள் கூடியிருந்து வரவேண்டு போலீசார் முகத்தில் கரி பூசியுள்ளனர்.

இங்கிலாந்தில் வாழும் கிரஞ்சித் அலுவாலியா பஞ்சாபில் பிறந்தார். இவர் தீபக் அலுவாலியாவை 1979-ல் மணந்தார். ஆனால் அப்போதிருந்து 10 வருட மணவாழ்க்கையில் கணவரால் சொல்லொன்னா துன்பங்களுக்கு ஆளானார். பெல்டால் அடிப்பது, கை நிறைய கொத்து முடியை பிய்த்து எடுப்பது, கற்பழிப்பது, விரலை உடைத்தது, சுடு வெந்நீரில் அழுத்துவது, கார் ஏற்றி கொலை செய்ய முயன்றது, ஸ்குரு டிரைவரால் கண்களை நோண்டப் போவதாக மிரட்டியது என்றவாறு இருந்தது தீபக்கின் வன்முறை.

கிரஞ்சித் குடும்பத்திலிருந்து ஓடிப் போக முயன்றார். இதைத் தடுக்குமாறு நீதி மன்றங்களை நாடினார். தற்கொலைக்கும் ஒரு முறை முயன்றார். கூடவே வாழ்ந்த தீபக் குடும்பத்தினரோ அல்லது கிரஞ்சித் உடன் பிறந்தோரோ உதவி செய்ய முன்வரவில்லை. குடும்ப கௌரவத்திற்காக அமைதியாகப் பொறுத்துக் கொள்ளும்படி அறிவுரை கூறினர்.

1989-ல் ஒருநாள், தீபக் சூடேறிய இரும்பை, கிரஞ்சித் முகத்தில் அழுத்தினார் - மறுநாள் பணம் கொண்டு வரும்படி, தாங்கமுடியாத மனக் கொதிப்புக்கு உள்ளான கிரஞ்சித், தீபக் தூங்கும்போது பெட்ரோல் ஊற்றில தீ வைத்துவிட்டார். தீபக் இறந்தார். இங்கிலாந்து நீதி மன்றம் கிரஞ்சித்திற்கு ஆயுள்தண்டனை தீர்ப்பளித்தது. ஆனால் சௌத் ஆல் கறுப்பின சகோதரிகள் என்ற ஒரு அமைப்பு கிரஞ்சித்தின் வழக்கை மறுபடி விசாரிக்க இயக்கம் நடத்தியது. கொலை செய்த போது மிகவும் மோசமாக நடத்தப் பட்டு மனமுடைந்து அவர் எதையும் செய்யும் மனநிலையில் இருந்ததை பற்றிய உளவியல் நிபுணரின் அறிக்கைகளை நீதி மன்றத்திற்கு அளித்தது. பத்தாண்டுகளில் கிரஞ்சித்திற்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை நீதிபதி விசாரிக் கோரியது. மக்களிடையே இவற்றை இயக்கமாகக் கொண்டு சென்றது. 1992 செப்டம்பர் 25 அன்று இங்கிலாந்து நீதிமன்றம் மறுவிசாரணை செய்து, கிரஞ்சித்தை விடுதலை செய்தது. மேலை நாடானாலும் உரிமைக்காக போராடினால்தான் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நியாயம் கிடைக்கிறது.

மேற்கு வங்கத் தலைநகர் கல்கத்தாவில் செப்டம்பர் 22 நள்ளிரவில், நேஹார் பானு என்ற நடை பாதைவாசியான பெண்ணை, 6 போலீசார்கள் வேலில் இழுத்துச் சென்று, போலீஸ் நிலையத்திலேயே கதற கதற கற்பழித்தனர். அதிகாலை அப்பெண்ணை வீதியில் எறிந்துவிட்டு போய்விட்டனர். செப். 23 அன்று ஆளும் கட்சி அறைகவியிருந்த கடையடைப்பில் இது அரவமின்றிப் போய்விடும் என இறுமாந்திருந்தனர். பின்னர் அதே போலீஸ் நிலையத்தின் மேலதிகாரியிடம் கண்ணீரும் இரத்தக் கறைகளுமாக இருந்த நேஹார் பானு முறையிட்டதைத் தொடர்ந்து போலீஸ் கயவாளிகள் கைதாகினர். அன்று மாலையே இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மறுநாள் நகரத்தின் பல்வேறு இடங்களிலும் மக்கள் கொந்தளித்தெழுந்து சாலைத் தடுப்புகள் அமைத்து இரு பேருந்துகளை எரித்தனர்; பலபேருந்துகள் டிராம் வண்டிகள் சேதமடைந்தன. செப். 24 அன்று பிற்பகலில் கைதான போலீசார் கோர்ட்டுக்குக் கொண்டு வரப்பட்டபோது 2,000 பேர் காறி உமிழ்ந்து ஏசினர்; அவர்கள் இரத்தத்தைக் கோரினர். பல்வேறு அரசியல் கட்சிகள் — பெண்கள் அமைப்புகளின் கண்டனம் மற்றும் பேரணிகளுடன் முதல்வர் ஜோதிபாசுவை பதவி விலகக் கோரி இயக்கம் நடத்தின.

ஜோதிபர்சுவோ கடந்த 15 ஆண்டுகளில் இது முதல் சம்பவம்; எங்கோ எப்போதோ நடப்பதாகும்; இதிலிருந்து பொது முடிவுக்கு வரக்கூடாது என்றார். ஆனால் பத்திரிக்கைகளோ, கடந்த இரு வருடங்களில் நடந்த போலீசின் 4 கற்பழிப்பு சம்பவங்களை ஆதாரத்துடன் அம்பலப்படுத்தின. தமிழகத்தில் அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் கொலை - கற்பழிப்பு, வாச்சாத்தி வனத்துறை அதிகாரிகளின் தாக்குதல் — கற்பழிப்பு கொடுமைகளுக்கு எதிராக இயக்கங்கள் எடுக்கும் இதே போலி கம்யூனிஸ்டுகள், தாம் ஆளும் கட்சியாக உள்ள மேற்கு வங்கத்திலோ போலீசாரின் அட்டூழியத்திற்கு வக்காலத்து வாங்குகிறார்கள். என்ன செய்வது? "மார்க்சிஸ்டுகள்" ஆட்சியில் போலீசாரின் அத்துமீறல் மாமியார் உடைத்த மண்குடமாயிற்றே!



கும்பல் கற்பழிப்பில் ஈடுபட்ட காக்கிச் சட்டை கயவாளிகளுக்கு துடப்பக்கட்டையால் தரும அடி. கல்கத்தா மகளிர் அமைப்பினர் நடத்திய நூதன போராட்டம்.

படிப்பகம்

www.padippakam.com

# தன்னுரிமை தேசத்துரோகமல்ல ஜனநாயக உரிமையே!

**பா.ம.க. வின் தன்னுரிமைத் தீர்மானம் தமிழக அரசியலில் ஒரு புயலைக் கிளப்பிவிட்டு ஓய்ந்துள்ளது. இதில் 'தமிழினத் தலைவர்', 'தமிழர் தளபதி', போலிக் கம்யூனிஸ்டுகள், வி.பி.சிங்., 'தமிழினப் போராளி' ராமதாசு ஆகியோர் என்ன நிலைப்பாடு எடுத்தார்கள், எப்படி அனுகினார்கள் என்று பார்ப்போம்.**

பாட்டாளி மக்கள் கட்சியின் ''தமிழர் வாழ்வுரிமை மாநாடு'' தமிழக அரசியலில் ஒரு புயலைக் கிளப்பிவிட்டு ஓய்ந்துள்ளது. திராவிடக் கட்சிகளின் கடந்தகால முழக்கமான தன்னுரிமையை பா.ம.க. இம்மாநாட்டில் தீர்மானமாக நிறைவேற்றியது. செப்டம்பர் 10,11,12 ஆகிய மூன்று நாட்கள் நடந்த நிகழ்ச்சியில் - பேச்சுகளில் எல்லாம் தன்னுரிமை முழக்கமும் புலி ஆதரவு கோஷங்களுமே இருந்தன. பா.ம.க. நடத்திய ஊர்வலத்திலோ பிரபாகரன், சிவராசன், தாணுவின் படங்கள் எடுத்துச் செல்லப்பட்டதோடு அவர்களை வாழ்த்தி கோஷங்களும் போடப்பட்டன. இவற்றை ஆளும் வர்க்க ஊதுகுழல்களால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

''தன்னுரிமை தீர்மானம் பிரிவினைவாதமாகும்; தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளை ஆதரிப்பது தேசத் துரோகமாகும்'' என்று தினமலர், சோ, சுப்ரமணியசாமி முதலான பார்ப்பன கும்பலும் காங்கிரசும் சேர்ந்து கூச்சலிட்டன. அதுவும் குறிப்பாக ஜெயலலிதாவை பதவியிலிருந்து இறக்குவதே எனது தேசியக்கடமை என தமிழகம் வந்து இறங்கிய சாமிக்கு இது நல்ல வாய்ப்பாகி விட்டது. ஏற்கனவே, ஜெயலலிதாவிற்கும் புலிகளுக்கும் ரகசிய தொடர்பு இருப்பதாக ஒரு அறிக்கை வெளியிட்டிருந்த சுப்ரமணியசாமி, அதற்கு ஆதாரமாக இதை முன்வைத்து ''புலி ஆதரவாளர்களும், பிரிவினைவாதிகளும் மீண்டும் தமிழகத்தில் தலை தூக்க ஜெயலலிதா அனுமதித்துள்ளார்'' எனக் குற்றம் சாட்டினர்.

ஜெயலலிதாவை எதிர்த்து வந்த மூப்பனார் கோஷ்டியோ இன்னொருபுறம் நெருக்கடி கொடுத்தது. ராஜீவ் நினைவு நாள் விழாவை ஜெயலலிதா புறக்கணித்ததும், ராஜீவ் சாவு அனுதாப அலையாலோ காங்கிரசு கூட்டணியாலோ நாங்கள் ஜெயிக்கவில்லை என்ற அ.தி.மு.க.வினரின் பேச்சுக்களும்- ஏற்கனவே காங்கிரசுக்காரர்களைக் கொதிப்படையச் செய்திருந்தது. இத்துடன் ராஜீவை கொன்றவர்களின் ஆதரவு பிரச்சாரத்தை ஜெயலலிதா அனுமதித்துவிட்ட குற்றச்சாட்டும் சேரவே மூப்பனார் கோஷ்டி ''டில்லியில் சொல்லி ஆட்சியைக் கலைப்போம்'' என்றெல்லாம் சரமாரியாகத் தாக்கியது.

•'தினமலர்' கும்பலோ பொய்யையே செய்தியாக்கி தனது வக்கிர புத்தியை வெளிக்காட்டியது. ''மாநாட்டில் தமிழர் மீட்பு படை, மக்கள் உரிமைக் கழகம் போன்ற பிரிவினைவாத பிரச்சார அமைப்புகள் பங்கு கொண்டன'' என்றும் ''ஊர்வலத்தில் 'காலிஸ்தான் ஜிந்தாபாத்' என்று கோஷமிட்டனர்'' என்றும் ''தீவிரவாத பயிற்சி பெற்ற விடுதலைப் புலிகளும் புலிகளிடம் பயிற்சி பெற்ற 100 பேரும் பா.ம.க. ஊர்வலத்தில் ஊடுருவி கலந்து கொண்டனர்.'' என்றும் விஷத்தைக் கக்கியது 'தினமலர்'!

இத்தகைய உசுப்பலுக்குப்பின் தேசத்துரோக, பிரிவினை சக்திகளுக்கு தமிழகத்தில் சிறிதும் இடமில்லையென கொக்கரித்துக் கொண்டு பாய்ந்தார் ஜெயலலிதா. 'ஜெ'யின் விசுவாச நாய்களும் அவ்வாறே குரைத்துக் கொண்டு சுறுசுறுப்பாகின. பா.ம.க. தலைவர்கள் ராமதாசு, பண்ருட்டி ராமச்சந்திரன் மற்றும் மாநாட்டில் 'தீவிரமாகப்' பேசியதாகக் கூறி சுப.வீரபாண்டியன், பெ. மணியரசன், தியாகு, நெடுமாறன் முதலானோர் கைது செய்யப்பட்டனர். இதில் ராமதாசு, பண்ருட்டி மற்றும் சிலர் உடன் பிணையில் வெளிவந்தார்கள். இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத 'ஜெ' கும்பல், போலீசுத் துறை மீது ஏறவே போலீசு அதிகாரிகள் மீண்டும் ராமதாசை கைது செய்வதற்கு தமது கைவரிசையைக் காட்டினர். ராமதாசு குழுவினருக்கு பிணை கொடுத்த சென்னை கூடுதல் தலைமை பெருநகர நீதிமன்ற பொறுப்பு நீதிபதி டி.வி.சுப்ரமணியத்தை மிரட்டி விடுப்பில் வீட்டுக்கனுப்பி விட்டு, அதற்குப் பதிலாக அவரிடத்தில் நீதிபதி கந்தசாமி பாண்டியனை அமர்த்தி ராமதாசு குழுவினருக்கு கொடுக்கப்பட்ட பிணையை ரத்து செய்து அவர்களை கைது செய்தது சி.பி-சி.ஐ.டி போலீசு. ''124 (ஏ) பிரிவின் கீழ் (தேசத்துரோக குற்றம்) கைது செய்யப்பட்டவர்களை பிணையில் விடும் அதிகாரம் இந்த பெருநகர நீதிபதிக்கு கிடையாது; அமர்வு நீதிமன்ற நீதிபதிக்கே உண்டு'' என கைதுக்கு விளக்கமளித்தார், ஜெயலலிதா. ஆனால் ராமதாசு குழுவினருக்கு மீண்டும் ஜாமீன் கொடுத்த உயர்நீதிமன்ற நீதிபதி எஸ். ஜனார்த்தனன், தமது தீர்ப்பில் ''ஜாமீனை ரத்து செய்து கைது செய்தது, சி.பி-சி.ஐ.டி. போலீசு டி.எஸ்.பி.யால் திட்டமிட்டு அவசர அரசரமாக செய்யப்பட்ட வேலை'' என ஒத்துக்கொண்டு 'ஜெ' கும்பல் மூஞ்சியில் கரியை பூசினார்.

ராமதாசு கைதுக்குப்பின் ஒவ்வொரு முறையும் குறிப்பாக சேலம், தர்மபுரி, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் சாலை மறியலும், பேருந்துகள் மற்றும் ரயில் நிலையம் தாக்கப்பட்ட - கொளுத்தப்பட்ட சம்பவங்களும் நடந்தன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையென பா.ம.க. தொண்டர்கள் ஆயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டனர். பல கிராமங்களில் புகுந்து பா.ம.க. தொண்டர்களின் வீட்டையும் பொருட்களையும் குடும்பத்தினரையும் போலீசு காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கியது. பா.ம.க. அல்லாதவர்களும்கூட தாக்கப்பட்டனர்.

ஆனாலும், மறுபுறம் ''ஜெயலலிதா ஆட்சி செயலிழந்துவிட்டது; மீண்டும் பிரிவினைவாத - தீவிரவாத சக்திகள், புலிகள் தமிழகத்தில் தலை தூக்கிவிட்டனர்'' என்ற கூச்சல் ஓயவில்லை; அதிகரித்தது. காங்கிரசுக்காரர்கள் குறிப்பாக வாழப்பாடி கோஷ்டியினர் ராமதாசு, வி.பி.சிங். கொடும்பாவிகளை கொளுத்தியெல்லாம் ஆட்டம் போட்டனர். பா.ம.க.வை தடை செய்யக்கோரி கவர்னரிடம் மனுகொடுத்தனர். சுப்ரமணியசாமியோ ''ஜெயா - புலிகளின் ரகசிய உறவுக்கு ஆதாரங்கள் இருப்பதாகவும், கவர்னரிடம் கொடுத்து நடவடிக்கை எடுக்கப்போவதாகவும்'' பீதியை கிளப்பிக்கொண்டே இருந்தார். ''விஷத்தைப் பரவ விடக்கூடாது; ஒடுக்குவதற்கு தயக்கமே கூடாது'' என 'சோ' மற்றும் ஆர்.எஸ்.எஸ். கும்பல் தட்டிக்கொடுத்தன. ஒட்டுமொத்தமாக அனைவரும் பா.ம.க.வை ''பிரிவினைவாத - வன்முறை அமைப்பு'' என முத்திரைக் குத்தி தடைசெய்ய வேண்டும் என்று ஓங்கி ஒலித்தனர்.

எனவே ஜெயா கும்பலுக்கு தாம் புலிகள், பிரிவினைவாத - தீவிரவாத சக்திகளை ஒடுக்குவதில் முன்புபோலவே(?) தற்போதும் கடமை தவறாமல் இருப்பதாக காட்டிக் கொள்ளவேண்டிய நிர்பந்தமும், தான் இன்னும் டெல்லி எஜமானர்களின் விசுவாசி தான் என்பதை காட்டவேண்டிய நிர்பந்தமும் எழுந்தது. மேடைதோறும் ஜெயலலிதா ''பிரிவினைவாத - தீவிரவாத சக்திகளுக்கும் புலிகளுக்கும்'' எதிராக முழங்கினார்; சூளுரைத்தார். ராமதாசை பிணையில் விடுவித்த உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்போவதாக அறிவித்தார். (கவனிக்க, ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி விவகாரத்தில் சாராய உடையாருக்கு தாரைவார்த்த உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக உச்ச நீதிமன்றம் செல்ல பலத்த கோரிக்கை எழும்பியும் சாக்குக் கூறி செல்ல மறுத்தார்கள்.) ''பிரிவினைவாதத்தைக் கொள்கையாகவும் வன்முறையை நடைமுறையாகவும் கொண்டுள்ள பா.ம.க.வைத் தடை செய்யவேண்டும்'' எனக் கோரி மத்திய அரசுக்கு ஓலை அனுப்பினார், ஜெயலலிதா.

படிப்பகம்

www.padippakam.com



மதுரை எஸ்.ஐ. கொலையில் புலிபீதியூட்டி விசாரணை என்ற பெயரில் கூடல் நகர் அகதிகள் முகாமில் அகதிகளை வாட்டும் தேவாரம்.

இதன் தொடர்ச்சியாக ஒருபடி மேலே
ாய் புலிபீதி அரசியலை திட்டமிட்டே
த்தினார் ஜெயலலிதா. தமிழகத்தின் கேடி
ரௌடிகளின் கொலை, கொள்ளை,
த்தலையெல்லாம் புலிகள் செய்ததாக சித்
த்து பீதியூட்டினார்கள். நாகை - கீவளூர்
நகே டிரைவரை அடித்து போட்டுவிட்டு
க்சியை கடத்திய நான்குபேர் புலிகள்;
ாவது இலங்கையைச் சேர்ந்தவர்கள்
ால் இருந்தனர் என்றார்கள். கோடியக்
அருகே 4 லட்சம் மதிப்புடைய 19
ாட்டார் எஞ்சின்களை முள்ளுக்கடியிலி
து கைப்பற்றியது போலீசு. புலிகள் கடத்
தற்காக இருந்தவை இவை எனக் கூறி
லையோர பாதுகாப்பு நடவடிக்கைகளை
ரப்படுத்தினர். இதேபோல் கோடியக்
மிராசுதார் சண்முகம் (ராஜீவ் கொலை
க்கில் தற்கொலை செய்து கொண்டதாக
ாலீசால் ஜோடிக்கப்பட்ட விசாரணைக்
ி) கும்பல் மீண்டும் புலிகளுக்கு
ாருட்களை கடத்துவதாகவும் கடலில்
னாமல் போகும் மீனவர்களை எல்லாம்
கள் கடத்தியதாக பழி போட்டும் பீதி
டி நடவடிக்கையை அதிகரித்தார்கள்.
னால் எல்லையோர கிராம மக்களும்
வர்களுமே 'தேடுதல் வேட்டை' என்ற
றயில் தொல்லைக்கும் தாக்குதலுக்கும்
ளானார்கள். இதற்கு சிகரம் வைத்தாற்
ால் மதுரை எஸ்.ஐ. கொலையில் புலி
ூட்டி மூக்குடைபட்டு நிற்கிறது 'ஜெ'
பல்.

மதுரையில் மா∴பியா ரௌடிக் கும்பல்

களுக்கிடையிலான மோதல்கள் சில உயர் மட்ட போலீசு அதிகாரிகளின் பின்னணியோடு அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன. போலீசின் கட்டுப்பாட்டை மீறிப் போன (அதாவது செல்லப்பிள்ளையாக இல்லாமல் போவது) சில மா∴பியா கும்பலுக்கும் போலீசுக்கும் இடையே மோதல்கள் நடப்பது உண்டு. மதுரை கூடல்நகர் அகதிகள் முகாம் அருகே போதை மருந்து - கள்ளச்சாராயம் கடத்தும் ஒரு ரௌடிக்கும்பலால் சமய நல்லூர் சப் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணசாமி சுட்டுக் கொல்லப்பட்டதும் இதில் ஒன்றுதான். ஆனால் இக்கொலையை செய்தது புலிகள்தான் என திட்டவட்டமாக கூறி செய்தியைப் பரடப்பியது, அரசும் பத்திரிக்கைகளும். முதலமைச்சர் என்ற பொறுப்பைக்கூட உணராமல் ஜெயாவும் நிருபிக்கப்

> அடக்குமுறையின் தொடர்ச்சியாக ஒருபடி மேலேபோய் புலிபீதி அரசியலை திட்டமிட்டே நடத்தினார் ஜெயலலிதா. தமிழகத்தின் கேடிகள், ரௌடிகளின் கொலை, கொள்ளை, கடத்தலையெல்லாம் புலிகள் செய்ததாக சித்தரித்துப் பீதியூட்டினார்கள்.

படிப்பகம்

பட்ட உண்மை போலக் கொலை செய்த புலிகளை சும்மா விடமாட்டேன் என விட்டேத்தியாக அறிக்கை வெளியிட்டார். இதே போல் அமைச்சர்களும் உயர் போலீசு அதிகாரிகளும் கூடசேர்ந்து குரைத்தார்கள். பலமாக பலவித கற்பனை கதை புனைந்து தேடுதல் வேட்டை நடத்தினார்கள். கொலையாளிகள் புலிகளல்ல - சமூகவிரோத ரௌடிக் கும்பல் என்று ஆதாரங்கள் வெளிவந்ததும் முடங்கிப்போனார்கள். இச் சம்பவத்தில் கூடல் நகர் முகாமின் அகதிகள் மற்றும் தமிழகத்தில் உள்ள பிற முகாம் அகதிகள் விசாரணை வதைக்கும் தாக்குதலுக்கும் உள்ளானதுதான் மிச்சம்!

இதுவன்றி தமிழகத்தில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவங்களுடன், சந்தனக்கட்டை வீரப்பனுடன், நக்சல்பாரிகளுடனும் புலிகளைத் தொடர்பு படுத்தி ஆயுதங்களும் பயிற்சியும் வழங்குவதாக அடிக்கடி பீதி கிளப்பி வருகிறது பார்ப்பன ஜெயா கும்பல்.

இத்தருணத்தில் சட்டசபை கூடியதால் இப்பிரச்சனையை மேலும் பரபரப்புக்கு உள்ளாக்கினார்கள். முரசொலி செல்வத்தை கூண்டில் ஏற்றிய பிரச்சனையைக் காட்டிலும் பா.ம.க. மீதான தடை பற்றிய பிரச்சனையை முன்னுக்கு நிறுத்தி கூச்சலிட்டது அ.தி.மு.க. கும்பல். பா.ம.க., எம்.எல்.ஏ., பண்ருட்டி ராமச்சந்திரனை திணறடிக்கச் செய்து இறுதியில் ''பா.ம.க., புலிகளை ஆதரிக்கிறது; பிரிவினைவாத - தேசத்துரோகிகளின் ஆதரவு கட்சிதான்'' என்று ஜெயலலிதாவே பிரச்சா

www.padippakam.com

ரத்தை செய்து விட்டு பா.ம.கவினர் ரயில்வே அதிகாரியை வெட்டியதையும் காரணம் காட்டி பா.ம.க.வை தடைசெய்ய மத்திய அரசுக்கு ஓலை அனுப்புவதாக சட்ட சபையில் அறிவித்தார். பிறகு மத்திய அமைச்சர்கள் ஜேக்கப், சவானின் பேட்டிக ளைத் திரித்து ''பா.ம.க. தடைசெய்யப்படும் - மத்திய மந்திரி தகவல்'' என போட்டு ஆத்ம திருப்தியடைந்தது ஜெயா-காங்கிரசு கும்பல்!

பா.ம.க. தலைவர்களும் புலி ஆதரவு கோஷங்கள் போட்டது பற்றியும் சிவராசன், தாணு, பிரபாகரன் படம் எடுத்து வந்தது பற்றியும் எங்களுக்குத் தெரியாது என்றும் பா.ம.க. ஊர்வலத்தில் பிறர் புகுந்து அவ் வாறு செய்திருக்கலாம் என்றும் அறிக்கை விட்டு காரியவாத பல்டி அடித்தார்கள். பா.ம.க தடை கோரிக்கைக்கு எதிராக ஆட் சேபனை தெரிவித்து சட்டரீதியாக சில வாதங்களை வைத்து டிரிப்யூனலுக்கு மனு தாக்கல் செய்தார்கள். அதே சமயம் தன்னு ரிமை கோரிக்கையை திரும்பப் பெறாமல் தக்க விளக்கமளித்து வருகிறது பா.ம.க.

தன்னுரிமை, அதாவது பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை ஓர் அடிப்படையான ஜனநாயக உரி மையாகும். இன்னும் விரிவாகச் சொன் னால் தமிழ்நாடு, இந்தியாவில் உள்ள பிற தேசிய இனங்களோடு இணைந்து இருப் பதா அல்லது பிரிந்து இருப்பதா என்பதை தமிழக மக்கள் எப்பொழுதும் தீர்மானித்து நடைமுறைப்படுத்திக் கொள்ளலாம் என் பதே அதன் அர்த்தம். தன்னுரிமை வேறு; தனிநாடு கோரிக்கை வேறு. ஆனால் தன்னு ரிமையையே பிரிவினைவாதம் அதாவது தனிநாடு கோரிக்கை எனத் திரித்து, அதை முன்வைப்பதே தேசத்துரோகம் என சித்த ரிக்கிறது, பாசிச ஜெயா மற்றும் 'சோ', சுப்ரம ணியசாமி, காங்கிரசு, ஆர்.எஸ்.எஸ். கும் பல். ஆளும் வர்க்கங்களின் ஊதுகுழல்க ளாக உள்ள எல்லா பத்திரிக்கைகளும், வானொலி மற்றும் வானொளியும் இக்கும்ப லின் பிரச்சாரத்தையே ஊதிப்பெருக்குகின் றன. அதிகாரத்திலிருக்கும் பாசிச ஜெயா கும்பலோ தன்னுரிமையை முன்வைப்பவர் கள் மீது பாய்ந்து குதறுகிறது. ஜெயா கும்ப லின் நடவடிக்கை அப்பட்டமான, மூர்க்கத்த னமான அடக்குமுறைக்கான முன்னோட் டமே.

இந்த அடிப்படையில் மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் — இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடு தலை முன்னணி போன்ற புரட்சிகர அமைப் புகள் பிரச்சாரம் மேற்கொண்டன. ராமதாசு மற்றும் மாநாட்டில் கலந்துகொண்ட பேச்சா ளர்களைக் கைது செய்ததைக் கண்டித்தும், அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகளை திரும்பப்பெறக் கோரியும், தன்னுரிமை தேசத்துரோகமல்ல; அடிப்படை ஜனநாயக உரிமையே; தன்னுரிமைக்கு தளராது போரா டுவோம் என்றும் அவ்வமைப்புகளின் சுவ ரொட்டிகளில் வாசகங்கள் காணப்பட்டன. 'தமிழினத் தலைவர்', 'தமிழர் தளபதி', போலி கம்யூனிஸ்டுகள் மற்றும் வி.பி.சிங் இதில் என்ன நிலைப்பாடு எடுத்தார்கள், எப்



**கைதாகி விடுதலையான பா.ம.க. தலைவர்கள்; திட்டமிட்டு நடந்த கைது, நீதிபதி மூலமே அம்பலமாகி மூக்குடைபட்டது ஜெ கும்பல்.**

படி அணுகினார்கள் என்றும் ஏன் 'தமிழினப் போராளி' ராமதாசின் பா.ம.க. வைத்த நிலைப்பாடையுமே சற்றே பார்ப்போம்.

ராமதாசு கைதுக்கு கருணாநிதி கண்ட னம் தெரிவிக்கவில்லை. ராமதாசை ஜெயல லிதா கைது செய்தது, தனது வஞ்ச லாவண் யங்களிலிருந்து மக்களை திசை திருப்பவே என்று மட்டுமே தமிழினத் தலைவர் கூறியுள் ளார். தன்னுரிமையை தி.மு.க. ஆதரிக்க வில்லை; மாநில சுயாட்சிதான் கேட்கிறது என் சுயவிளக்கம் அளித்தார். அதாவது அடக்குமுறையிலும் சுரண்டலிலும் மாநில ஆளும் கட்சிக்குக் கொஞ்சம் அதிகப் பங்கு கேட்பதுதான் மாநில சுயாட்சி. முதலில் திரா விட நாடு கோரிக்கையை வைத்து 1962 பிரிவினைத் தடைச் சட்ட மிரட்டலைக் கண்டு அஞ்சி அதைக் கைவிட்டு 'மாநில சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி' கோரிக் கையை வைத்து இதையும் அவ்வப்போது ஓட்டுப் பொருக்குவதற்காக மட்டுமே பயன் படுத்திக் கொண்டு கழுதை தேய்ந்து கட்டெ றும்பு ஆன கதையாகிவிட்டது, தி.மு.க.- வின் நிலை. இதனால் வீரியமிழந்து நிற்கி

> ஆளும் வர்க்கக் கும்பல்
> தேசத்துரோகம்,
> பிரிவினைவாதம் என்று
> தன்னுரிமையைச்
> சொல்லிவிட்ட பின் அதற்கு
> ஆதரவாக பேசுவதே பூணூல்
> கம்யூனிஸ்டுகளின்
> நாட்டுப்பற்று!

றது தி.மு.க. ''தி.மு.க முன்பு முன்வைத் கோரிக்கையையே இன்று பா.ம.க. வைத் தி.மு.க.க்காரர்களை தம்பக்கம் இழுக்க பார்க்கிறது; இது நடக்காது'' என அலறு றார்கள், தி.மு.க. தலைவர்கள்.

திராவிடர் கழகத்தின் 'தமிழர் தளபதி வீரமணி, தன்னுரிமை பற்றி வாயே திறக் வில்லை. ஜெயலலிதாவின் காலடியில் த மானத்தோடு தலையையும் அடகு வைத் விட்ட வீரமணியின் காதில் தன்னுரிமை வார்த்தை விழாது, விழுந்தாலும், வாய் றக்க முடியாது. பாவம், பெரியார் கொள்ை களை விட்டும் விற்றும் சொத்தில் மட்டு 'சொர்க்கம்' - தேடும் புண்ணியவான தொலையட்டும் விட்டுவிடுவோம்!

வலது, இடது போலிக் கம்யூனிஸ் கள் ராமதாசு கைதைப் பொறுத்தவரை மெ னமாக இருந்து சம்மதம் என்றனர். அதேச யம் தன்னுரிமையை கடுமையாக எதிர்க்கி றனர். 'மார்க்சிஸ்டு'கள் பத்திரிக்கைகள், பி சுரங்கள், தட்டிகள் வாயிலாக இதற்கெ பிரச்சார இயக்கமே எடுத்தார்கள். ''ப மான மாநில அரசுகள், பலமான மத்தி அரசு(?) என்ற வகையில் அரசியல் சட்ட திருத்தப்பட வேண்டுமென நாட்டிலுள் இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திக போராடி வருகின்றன. ஆனால் பாட்டா மக்கள் கட்சி தலைவர்கள் இந்த மாநாட்டி முன்வைத்த கொள்கைகள் தன்னுரிமை, சு நிர்ணய உரிமை என்ற பெயரில் நாட்ை துண்டாடும் நிலைக்கு இழுத்துச் செல்லு பிரிவினை முழக்கத்தைத்தான் முன்வை தார்கள்'' என்கிறது, சி.பி.எம். இதே காம லைக் கண்ணோடு பிற இந்திய தேசி இனங்களின் போராட்டத்தை பார்ப்பதா தான் ''அமெரிக்க ஏகாதிபத்தியத்தி

www.padippakam.com

காரப்பற்களை பஞ்சாபிலும், காஷ்மீரி ம், அசாமிலும் நம்நாட்டின் இதரப் பகுதிக லும் நடைபெறும் பிரிவினைவாத நடவ க்கைகளில் பார்க்க முடிகிறது'' எனப் படித்தனமாக விளக்கமளிக்கிறார்கள். தசிய சுயநிர்ணய உரிமைப் பற்றி லெனின், டாலின் எடுத்த நிலைப்பாடுகளை எல் ாம் பாராளுமன்றவாதக் குப்பையில் கடா விட்ட பூணூல் கம்யூனிஸ்டுகளிடம் வேறு தையும் எதிர்பார்க்க முடியாதுதான். ளும் வர்க்க கும்பல் தேசத்துரோகம், பிரி னைவாதம் என்று ஒன்றை சொல்லிவிட்ட ன், அதற்கு ஆதரவாகப் பேசி தமது நாட் ப்பற்றுக்கு நற்சான்றிதழ் பெறுவதுதான் ப்போதும் இடது, வலதுகளின் வாடிக்கை ன்பது இந்த விசயத்திலும் நிரூபிக்கப்பட்டி க்கிறது.

ராமதாசு கைதுக்குப்பின், பா.ம.க. நாட்டில் கலந்துகொண்ட வி.பி.சிங் பற் ப சர்ச்சை கிளம்பியது. அதுவரை வாய்மூ பிருந்த போலிக்கம்யூனிஸ்டுகள் உட்பட ல்லோரும் ராமதாசு கைதுக்குப் பின்னரே .பி.சிங்., மாநாட்டில் கலந்து கொண்டது வறு என கண்டித்து அறிக்கை வெளியிட்ட ர். போதாதற்கு கொடும்பாவியெல்லாம் காளுத்தி தமிழகத்தில் காங்கிரசுக்காரர்கள் ட்டம் போடவே மிரண்டுபோனார் வி.பி. ங்.. ஜனதாதளக் கட்சிக்குள்ளிருந்தும் தசிய முன்னணி — இடதுசாரி கட்சிக்காரர் ரிடமிருந்தும் வந்த பலத்த எதிர்ப்பை சரி ட்ட ''தமிழக ஜனதாதளத்தினரும் தி.மு.க. ரர்களும் தவறான தகவல் தந்துவிட்டனர்; .ம.க.-வினரும் ஏமாற்றிவிட்டனர்; பிரி னைவாத தீர்மானம் எல்லாம் போடுவ க முன்னரே தெரிந்திருந்தால் கலந்து காண்டிருக்கவே மாட்டேன்'' என்று பல்டி டித்தார். உண்மை என்னவென்றால் வி.பி. ங்கைக் கொண்டு பிரபல்யம் அடையலாம் ன்ற நோக்கத்தில் பா.ம.க.-வினரும், .ம.க.-வைக் கொண்டு அரசியல் ஆதா ந்திற்கு முகாந்திரம் தேடலாம் என்ற நோக் தில் வி.பி.சிங்கும் கணக்குப்போட்டார் ர் என்பதுதான்.

தேசிய இனப்பிரச்சினை என்பது ஜன யகப் பிரச்சினையும்கூட. பரந்துபட்ட மக் ர், குறிப்பாக விவசாயிகள் நிலமும் ஜனநா கமும் பெறுவதும் தன்னுரிமையும் ணைந்தே உள்ளன. ஆனால், தன்னுரிமை பசும் பா.ம.க. மற்றும் தமிழின உணர்வு ழுக்கள் எவையும் தமது அமைப்பிற்குள் னநாயகம் வழங்குவதில்லை. குறிப்பாக .ம.க-வில் ராமதாசு வைத்ததுதான் சட் ம்; அவரது சர்வாதிகாரம்தான் கட்சியில் ள்ளது. திராவிடர் கட்சிகள் போல தனிந துதி, தலைவருக்கு பட்டங்கள் சூட்டு து, என (மாலை போடுவது, காலில் விழு தை மட்டுமே விளம்பரத்திற்காக ராம சு அனுமதிப்பதில்லை) அனைத்து பழக் கங்களும், படாடோபங்களும் பா.ம.க.- ல் இருக்கின்றன. 'தமிழினப் போராளி' ன்று ராமதாசே தனக்கு பெயர் சூட்டிக் காண்டது முதல் தனது முகத்தையே பத்தி கை, பிரசுரம், சுவரொட்டிதோறும் பாட்டு விளம்பரப்படுத்திக் கொள்வது, ர்வலம் — ஆர்ப்பாட்டம் — மேடைப் ச்சுக்களில் மூச்சுக்கு முன்னூறு முறை ராம

> தேசிய இனப் பிரச்சினை என்பது ஜனநாயகப் பிரச்சினையுங்கூட ஆனால், தன்னுரிமை பேசும் பா.ம.க. மற்றும் தமிழின உணர்வு குழுக்கள் எவையும் தமது அமைப்பிற்குள் ஜனநாயகம் வழங்குவதில்லை. குறிப்பாக பா.ம.க.வில் ராமதாசு வைத்ததுதான் சட்டம்; அவரது சர்வாதிகாரம்தான் கட்சியிலுள்ளது. ஜனநாயகத்தையும் சுயமரியாதையும் வழங்காத பா.ம.க. தன்னுரிமை பேசுவது சுயமுரண்பாடானது.

தாசு துதி பாடுவது, ராமதாசு வாழ்க கோஷம் போடுவது வரை இதற்கு உதார ணங்கள். இவை பண்பாட்டு ரீதியில் மக் களை இழிவுபடுத்துபவையே. தனது அமைப்பிற்குள்ளேயே ஜனநாயகத்தையும் சுயமரியாதையையும் வழங்காத பா.ம.க. தன்னுரிமை பேசுவது சுயமுரண்டானது. இத் தகைய முரண்பாடு ராமதாசுக்கு பலமுறை நெருக்கடியும் கொடுத்திருக்கிறது. இவற்றில் ஒன்றுதான் 'ஜெ'யின் கட்அவுட் கலாச்சா ரத்தை தீவிரமாக எதிர்த்த ராமதாசுக்கே விளக்குகளால் அவரது கட்சிக்காரர்கள் கட்-அவுட் செய்து மாநாட்டு பொதுக்கூட்டத் திடலில் வைத்ததும் அதைப்பார்த்ததும் ராம தாசு அணைக்கச் சொல்ல நேர்ந்ததும் ஆகும். இதைப்போல மாநாட்டுத் திடலில் ராமதாசு பெயரைச் சொன்னாலே கைதட்டிக் கொண்டிருந்ததையும் மேடையிலேயே கண் டிக்கவேண்டிய அவசியமும் ஏற்பட்டது.

மேலும் தன்னுரிமையை இன்றைய அரசியல் சட்ட வரம்புக்குள், அமைதியான முறையில் - ஆயுதப் போராட்டமின்றி அடைய முடியாது; ஏகாதிபத்திய தரகு முத லாளித்துவக் கும்பலை எதிர்க்காமலும் அடைய முடியாது. ஆனால், இதற்கு முரண் பாடான சட்டபூர்வ - பாராளுமன்றப் பாதை யில் ஆட்சியைப் பிடிக்க அலைந்து மக்களை ஏய்த்து வருகிறது, பா.ம.க. இதனால்தான் பண்ருட்டியும் ராமதாசும் புலி ஆதரவு விச யத்தில் மழுப்பவும், ப்ல்டியடிக்கவும், சட்ட பூர்வ முறைகளுக்குட்பட்டு பேசுவதற்கு முயன்றதுமான நிலை ஏற்பட்டது. நெருக்க டிகள் முற்றும் போது - தீவிரமாகும்போது பா.ம.க தன்னுரிமை கோரிக்கையில் ஊன்றி நிற்கும் என்று சொல்லமுடியாது. இதற்கு ஏற்ப தி.மு.க.-வைப்போல பா.ம.க. தலை மையும் சமரசவாத தன்மை கொண்டதாகத் தான் உள்ளது. நாளடைவில் முழுக்கப் பிழைப்புவாதக் கட்சியாக சீரழியும் அபாய மும் உள்ளது.

முன்பு பெரியார் காலத்தில் திராவிட இயக்கத்துக்கு எப்படி கம்யூனிச - சோசலிச தமிழின தீவிரவாதக் கருத்துடையவர்கள் ஒருபுறமும் அதற்கு எதிரான தேசியவாத முதலாளித்துவதாதக் கருத்துடையவர்கள் மறுபுறமும் நெருக்கடி கொடுத்துக் கொண்டி ருந்தார்களோ அதே நிலைதான் இன்று பா.ம.க.-விலும் நிலவுகிறது. தனித்தமிழ் நாடு மற்றும் புலி ஆதரவாளர்கள், இடது சாரி சிந்தனையாளர்கள் - பற்றுக் கொண்ட வர்கள் ஒருபுறமும், மறுபுறம் பண்ருட்டி ராமச்சந்திரன், நெல்லிக்குப்பம் கிருஷ்ண மூர்த்தி முதலானோர் தன்னுரிமை மற்றும் புலி ஆதரவை எதிர்த்தும் தீவிர நடவடிக்கை - போராட்டங்களை எதிர்த்தும் வருகின்ற னர். ஜனநாயகமும் இக்கோரிக்கைகளுக் கேற்ற அமைப்பு வடிவமும் கீழிருந்து கட் டப்படாததாலும் திராவிடக் கட்சிகள் கொள் கையை விட்டு விலகி இன்று தேய்ந்து நிற் கின்றன. அதே அம்சம் கொண்ட பா.ம.க.-வும், தான் தீர்மானித்த தன்னுரிமை கோரிக் கையில் ஊன்றி நிற்பதற்கான அடிப்படை யில்லாது உள்ளது.

பா.ம.க. மற்றும் தமிழின உணர்வு குழுக்கள் இப்படி சட்ட வாதத்தில் மூழ்கி தன் னுரிமை கேட்டுக் கொண்டிருக்கிற அதே நேரத்தில், இவற்றையெல்லாம் சவத்தன மான போராட்டங்கள் என சாடிவிட்டு பெரு கிவரும் தேசிய இன ஒடுக்குமுறையால் வெறுப்புற்று தனித்தமிழ்நாடு கோரிய ஆயு தப் போராட்டமே தீர்வு என சில சாகச வேலைகளில் சிலர் ஈடுபடுகின்றனர். முன்பு தமிழரசனின் செயல்களும் தற்போது தமிழர சன் ஆதரவாளர்களின் குண்டு வெடிப்பு சம் பவங்களும் அவ்விடங்களில் தனித்தமிழ் நாடு, தனி ஈழக் கோரிக்கைகள், பிரபாகரன், தமிழரசன் துதிகளடங்கிய சுவரொட்டிகள் கிடப்பதும் இதற்கு உதாரணங்கள். அண்மை யில்கூட டால்மியாபுரம் அருகே ரயில் பாதை குண்டு வெடிப்பு சம்பவம் நடந்துள் ளது. மக்களுக்கு பாதிப்பில்லாத வகையில் இத்தகைய சம்பவங்கள் மூலம் எங்களது கொள்கையைப் பிரச்சாரம் செய்து மக்க ளைத் திரட்டுகிறோம் என அக்குழுவினர் வாதிடுகின்றனர். ஆனால், இச்சம்பவங் களை ஆளும் வர்க்கங்கள் அவதூறு பிரச்சா ரம், கொடிய அடக்குமுறைக்கு முகாந்திரங்க ளாக்கி தமது பெருந் தேசியவாதம், தேசப் பற்று - ஒற்றுமை, தேசிய ஒடுக்குமுறையே சரி என நியாயப்படுத்தியும் கொள்கின்ற னர். இதனால் பீதியடையும் மக்கள், ஆளும் வர்க்கத்தின் பிரச்சாரத்திற்கு பலியாகி, ஒடுக் குமுறைக்கு அஞ்சி அவர்கள் பக்கம் ஆதர வாக திரளுவதில்தான் போய் முடியும்.

எனவே தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராக, ஒவ்வொரு தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்காக மக்கள் திரள் - ஆயுதப் போராட்டப் பாதையில் ஊன்றி நிற் பதே சரியானது; அதுவே தன்னுரிமையைப் பெற்றுத்தரும். சட்டவாதமோ, தனிநபர் சாகச வாதமோ தீர்வாகாது என்பதால் இவற் றிற்கு எதிராக தமிழக மக்கள் விழிப்புடனி ருந்து முறியடிக்க வேண்டும். ■ ராசு

படிப்பகம்

www.padippakam.com

● *இப்பொழுது போலிக் கம்யூனிஸ்டுகள் (சி.பி.எம்) கியூபா அதிபரான "ஃபிடல் காஸ்டிரோவை"யும் அவரது புரட்சியையும் புகழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அவர் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை - எதிர்க்கின்ற காரணத்திலா, அல்லது அவர் ஒரு "கம்யூனிச" புரட்சியாளரா? தெளிவுபடுத்தவும்.*

*— எம்.பூர்ணச் சந்திரன், நெல்லூர்.*




★ இந்த இரண்டுமே காரணமில்ல. அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் சமரச சரணடைவுக் கொள்கையைப் பின்பற்றிய குருச்சேவ், கோர்பச்சேவ், தெங்சியாவோபிங் ஆகியோர்களையும்தான் சி.பி.எம். கட்சி புகழ்ந்து ஆதரித்தது. அவர் ஒரு "கம்யூனிசப்" புரட்சியாளரும் அல்ல. லிபியாவின் மும்மர் கடாஃபியைப் போன்ற முதலாளித்துவ சாகசவாதப் புரட்சியாளர்தான். இந்த அடிப்படையிலும் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் தொங்குசதை நாடு என்கிற முறையில் அதன் ஆதிக்க - ஆக்கிரமிப்புகளுக்கான கூலிப்படையாகவும் "புரட்சி"யை ஏற்றுமதி செய்தவர்தான். இவர்கள் ஆஃப்கான், அங்கோலா போன்ற நாடுகளில் ஏற்படுத்திய 'புரட்சி'க்கும் 'சோசலிச'த்துக்கும் சி.பி.எம். ஆதரவு தெரிவித்துத் துதிபாடியது. அந்நாடுகளில் நேர்ந்த கதியை இப்போது பார்க்கிறோம். மற்றபடி சி.பி.எம். காஸ்டிரோவை ஆதரிப்பதற்கு வேறொரு காரணம் உண்டு. ருஷ்யாவைப் பார், சீனாவைப் பார், வங்கத்தைப் பார் என்று எதையாவது காட்டித்தான் அதன் அணிகளை ஏமாற்றி வைத்திருக்கிறது. கம்யூனிச முத்திரை கொண்ட "ஏதாவது" ஒன்று அதற்குத் தேவையாக இருக்கிறது. அதற்காகவும், அது பிடித்துத் தொங்குவதற்குத் தகுந்த இன்னொரு போலிக் கம்யூனிச அமைப்புத் தேவை என்பதற்கும்தான் இந்தப் புகழ்ச்சி.

● *அண்மையில் கியூபா நாட்டு மக்களுக்கு, உதவி செய்கிறோம் என்று சொல்லி சில மாணவர்கள் வசூல் செய்தார்கள். அமெரிக்கா, கியூபா மீது பொருளாதாரத் தடை விதித்துள்ளது. நரசிம்மராவ் அரசும் அதனை மறைமுகமாக ஆதரிக்கின்றது. இந்நிலையில் உலகில் உள்ள அமெரிக்க எதிர்ப்பாளர்கள் (கம்யூனிசக் கட்சிக்காரர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளும் போலிகள்) கியூபா நாட்டிற்கு அரிசி, இதர உதவிகள் செய்வது ஒரு வகையில் அமெரிக்க எதிர்ப்பைக் காட்டுகிறது அல்லவா? அமெரிக்காவிற்கு எதிராக, உலக நாடுகளை திருத்த பிரச்சாரமாக இருக்காதா? இது பற்றி உங்கள் நிலை என்ன?*

*— சிவா, போடி*

★ ஈராக்குக்கு அடுத்து அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தாக்குதலுக்குக் குறிவைக்கப்பட்டுள்ள நாடுகள் லிபியா, வட கொரியா, கியூபா ஆகியவை. இந்த நாடுகள் தேசிய சுதந்திரத்தைக் "காத்து"க் கொள்வதற்காக அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நடத்தும் போராட்டங்களை ஆதரிப்பது சரிதான். ஆனால் கியூபா மக்களுக்கு உதவி என்கிற பெயரில் சி.பி.எம். நடத்தும் "குடும்பத்துக்கு ஒரு பிடி அரிசி" இயக்கம் ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியல் இயக்கம் என்று கருத முடியாது. தொழிலாளர்களை புரட்சிகர அரசியல் இயக்கத்துக்கு அணிதிரட்டுவதற்கு பதில் பொருளாதாரவாதத்துக்குள் தள்ளி எப்படிச் சீரழிக்கிறதோ அதே போன்ற ஒரு சாதாரண மனிதாபிமான இயக்கமாகவேதான் இதையும் சி.பி.எம். நடத்துகிறது. இந்தியாவில் மைய அரசு கூட்டரசு ஆட்சியைப் பின்பற்ற வேண்டும்; அதற்காக மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரம் தரவேண்டும்
என்கிற கோரிக்கை நீர்த்துப்போ
கச் செய்தது சி.பி.எம். அதை
யும்விட கீழேபோய மேற்கு
வங்க அரசிடம் மைய அரசு ஓ
வஞ்சனையுடன் நடந்து
கொண்டு பக்ரேஸ்வர் மின் திட்
டத்துக்கு நிதி தர மறுக்கிறது
என்று குற்றஞ்சாட்டிய போதும்
அதற்காக மத்திய அரசை எதிர்த்
துப் போராடவில்லை; மக்களி
டம் நன்கொடை வசூலித்தும்
நட்சத்திரக் கலைவிழா நடத்தி
யும் நிதி திரட்டும் வேலையில்
இறங்கியது. (அதையும் இப்
போது கிடப்பில் போட்டுவிட்
டது வேறு விசயம்) இப்படித்
தான் ஏகாதிபத்திய எதிர்ப்புப்
போராட்டங்களை தன்னார்வக்
குழுக்களின் மனிதாபிமான
இயக்கமாக மாற்றுகிறது சி.பி.
எம். மேலும் கியூபாவுக்கு எதி
ராக விதித்துள்ள பொருளா
தாரத் தடை அமெரிக்காவுக்கும் அதன் கூட்டாளி, அடிவருடி நாடு
ளுக்கும்தான் பொருந்தும். கியூபா விரும்பினால், முடிந்தால் வே
நாடுகளுடன் பொருளாதார உறவு வைத்துக் கொள்ளத் தடை
கிடையாது. ஈராக்குக்கு எதிராக ஐ.நா. சபை விதித்துள்ளதை
போன்றோ, ஈழத்துக்கு எதிராக இலங்கை பாசிச அரசு விதித்திருப்
தைப் போன்றோ கியூபாவுக்குத் தடை விதிக்கப்பட்டு அதாவ
முற்றுகைத் தடை கிடையாது. அப்படி இருந்தும் ஈழத்தமிழருக்
எதிரான தடையை மறைமுகமாக ஆதரிக்கிறது சி.பி.எம்; ஈரா
குக்கு எதிரான தடையை மீறும்படி தனது சகோதரக் கட்சிக
ஆளும் கியூபா, சீனா, வடகொரியாவையும் சி.பி.எம். கோ
வில்லை; தடையை மீறும்படி கோரி பிற நாடுகளை, குறிப்பா
இந்திய அரசை எதிர்க்கவில்லை. மனிதாபிமானம் என்று பார்த்தா
கூட ஆஃபிரிக்காவின் சோமாலியா, எத்தியோப்பியா ஆகிய சி.பி
எம். அங்கீகாரம் பெற்ற முன்னாள் சோசலிச நாடுகளில் பல லட்ச
மக்கள் பட்டினியால் செத்து மடிவதற்கு எதிராகவும் அக்கட்
எதுவும் செய்யவில்லை. ஆகவே கியூபா மக்களுக்கு உதவி என்ப
ஒரு கட்சிப் பிரச்சாரம்தான்.

● *காஷ்மீர் பிரச்சினையில் சிம்லா ஒப்பந்தம் என்ப*
*என்ன? அதன் 6-வது அம்சத்தின் முக்கியத்துவம் என்*
*அந்த அடிப்படையில் பேச்சுவார்த்தை துவங்குவதா*
*இந்தியா - பாகிஸ்தான் அரசுகள் கூறியுள்ளதே, இதை*
*பற்றி தங்கள் கருத்து என்ன?*

*— சுக்தேவ், திருச்*

★ 1971 ஆம் ஆண்டு, அப்போது இந்தியப் பிரதமராக இருந்
இந்திரா காந்தியும், பாக். பிரதமராக இருந்த ஜுல்பிகார் அ
புட்டோவும் சிம்லா மாநாட்டில் கூடிக் கையெழுத்தானதே சிம்ல
ஒப்பந்தம். இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கிடை
லான காஷ்மீர் உட்பட எல்லா விவகாரங்களையும் இருதரப்பு
பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக் கொள்வோம் என்பதுதா
அந்த ஒப்பந்தத்தின் 6-வது அம்சத்தின் முக்கியத்துவம். இந்
ஒப்பந்தத்தை வைத்து இப்போது இருநாடுகளுமே வெறும் அர
தந்திர நாடகமாடி இருநாட்டு மக்களையும், ஏன், உலக மக்கள
யுமே ஏய்க்கப் பார்க்கின்றன. இவ்விரு நாட்டுத் தலைவர்களு
உலகின் வேறுபிற நாட்டுத் தலைவர்களைச் சந்தித்துப் பேசு
போதெல்லாம் ஒரு அறிக்கை விடுகிறார்கள். அதன்படி காஷ்மீ
விவகாரத்தில் தமது நிலையை வேறு நாட்டுத் தலைவர்கள் ஆதரிப்
தாக உரிமை பாராட்டிக் கொள்கிறார்கள். ஆனால் அந்த அறிக்
யில் சிம்லா ஒப்பந்த அடிப்படையில் இருதரப்பும் பேசித் தீர்த்து
கொள்ள வேண்டும் என்றுதான் இருக்கும். யாரையும் ஆதரிப்பதா
இருக்காது. அதேசமயம் சிம்லா ஒப்பந்தத்தைக் கூட அமுலாக்கு
தில் இரண்டு நாடுகளுமே அக்கறையின்றி மீறுகின்றன என்பதுதா
உண்மை. சிம்லா ஒப்பந்தத்துக்கு மாறாக காஷ்மீர் விவகாரத்



படிப்பகம்

www.padippakam.com

முத்தரப்பு மற்றும் பலதரப்பு நாடுகள் பங்கேற்கும் உலக அரங்கில் எழுப்புவற்குத் தொடர்ந்து பாகிஸ்தான் முயலுகிறது. இந்தியாவோ, அதைக் கடுமையாக எதிர்த்திடும் போதே, ''காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி, அதன் மீது பேச்சுவார்த்தை நடத்துவதற்கு எதுவும் கிடையாது; காஷ்மீர் ஒரு உள்நாட்டு விவகாரம்'' என்று கூறி இருதரப்புப் பேச்சுவார்த்தையிலும் காஷ்மீர் பிரச்சினையை எழுப்பவிடாமல் தடுக்கிறது. அப்படியானால் சிம்லா ஒப்பந்தத்தின் 6-வது அம்சத்தில் பேசித் தீர்க்கவேண்டிய இருதரப்புப் பிரச்சினைகளில் காஷ்மீரையும் சேர்ப்பதற்கு இந்தியா ஏன் ஒப்புக் கொண்டது?

நம்மைப் பொருத்தவரை சிம்லா ஒப்பந்தமே அநீதியானது; மோசடியானது. ங்கதேசப் போரில் ஒரு லட்சத்துக்கும் மேலான பாக். போர்க் கைதிகளையும் மேற்கே பாக்.கின் கணிசமான பிரதேசத்தையும் பிடித்து வைத்துக் கொண்டு அவர்களுக்கு ஈடாகப் போடப்பட்ட ஒப்பந்தம். அதைவிட முக்கியமாக காஷ்மீர் விவகாரம் என்பது இந்தியா - பாக் ஆகிய இருதரப்புப் பிரச்சினையாகவும் இவற்றுக்குள் பேசித் தீர்ப்பதுவும் அல்ல; காஷ்மீர் தேசிய இன மக்களின் சுயநிர்ணய உரிமைப் பிரச்சினை. ஆகவே காஷ்மீரை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இருதரப்புமே காஷ்மீர் தேசிய இனத்துடன் தீர்த்துக் கொள்ளவேண்டிய பிரச்சினை. இதில் எந்தவொரு முடிவையும் ஏற்கவும் நிராகரிக்கவும், தீர்மானிக்கவும் காஷ்மீரி இன மக்களுக்குத்தான் முழு உரிமை இருக்க வேண்டும்.

● *''பார்ப்பான்'' என்னும் சொற்பதத்தால், வர்க்கங்களுக்கப்பாற்பட்டு வகைப்படுத்தும்போது, பிரதான முரண்பாட்டைக் கையாளுகின்றோம் என்று நீங்கள் கருதிடினும் கூட, அடிப்படை முரண்பாடான வர்க்க முரண்பாட்டைக் கையாளும்போது கணிசமான அளவு போராட்டத்தைப் பாதிக்காதா?*

*— தேவராஜா, பிரான்ஸ்*

★ ''பார்ப்பான்'' என்கிற சொற்பதம் வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டு வகைப்படுத்துவதும் இல்லை; பிரதானமான வர்க்கப் போராட்டத்தை அது பாதிப்பதோ, அதிலிருந்து விலகிச் செல்லுவதுமோ இல்லை. நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான புதிய ஜனநாயகப் புரட்சி என்னும் வர்க்கப் போராட்டத்தில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். நிலப்பிரபுத்துவத்தின் சமூக, பண்பாட்டு ஒடுக்குமுறை அமைப்பாக சாதியம் நிலவுகிறது. ஆகவே வர்க்கப் போராட்டத்தின் ஒரு பகுதியாக சாதிய ஒழிப்புப் போராட்டமும் நடத்த வேண்டியிருக்கிறது. இந்தச் சாதிய அமைப்பே பார்ப்பன - சனாதன வருணாசிரம தர்மத்தின் அடிப்படையிலானதுதான். சனாதன தர்மம்தான் இந்து தர்மம் என்றும் அதை அரசு அமைப்பாக - ''இந்துராஷ்டிரம்'' — பகிரங்கப் பிரகடனம் செய்து நிலைநாட்ட வேண்டும் என்றும் ஆர்.எஸ்.எஸ். இந்துமதவெறி பாசிச கும்பல் முயன்றுவருகிறது. இதே நோக்கத்தைத்தான் காங்கிரசு மற்றும் பாசிச ஜெயா தலைமையிலான பார்ப்பன கும்பலும் ஏற்று அமுலாக்கி வருகிறது. இந்தப் பாசிசக் கூட்டின் தலைமையாகவும், மூளையாகவும் இருந்து இயக்கி வருவது பார்ப்பன சாதியினர்தாம். சனாதன - தர்மத்தால் ஏற்கனவே ஆதாயம் அடைந்து வந்த பார்ப்பன சாதியே பிரதானமாக அதைக் காத்து வரவும், பல்வேறு நிர்பந்தங்களினால் அழிந்து வரும்

> *காஷ்மீர் விவகாரம் என்பது இந்தியா - பாக். ஆகிய இருதரப்புப் பிரச்சினையாகவும் இவற்றுக்குள் பேசித் தீர்ப்பதுவும் அல்ல; காஷ்மீர் தேசிய இன மக்களின் சுயநிர்ணய உரிமைப் பிரச்சினை. இதில் எந்தவொரு முடிவையும் ஏற்கவும் நிராகரிக்கவும், தீர்மானிக்கவும் காஷ்மீரி இன மக்களுக்குத்தான் முழு உரிமை இருக்க வேண்டும்.*

தன் அம்சங்களைப் புதுப்பித்து, மீட்கவும் பாடுபட்டு வருகிறது. துமட்டுமல்ல தேசிய இனப்போராட்டங்களையும் வர்க்கப் பாராட்டங்களையும் ஒடுக்குவதற்காக பிரிவினைவாத - தீவிர த பீதியூட்டி பாசிச ஒடுக்குமுறையை ஏவிவிடுவதில் அரசு பங்கரவாதத்தின் உந்து சக்தியாகவும் இருந்து வருகிறது. இதனால் இந்தப் போராட்டங்களின் முக்கிய எதிரியாக பார்ப்பன - பாசிச கும்பல் முன்நிற்கிறது. ஆகவே, அச்சொற்பதம் சரியானதும் அவசியமானதும் ஆகிறது.

> *அந்தப் பகுதிக்குள் புகுந்தோம். ''வீடு காலி'' என்கிற போர்டு'' பெரிதாகக் கண்ணில் பட்டது. தரகன் - கிரகன் என்று அலைய வேண்டியதில்லை. இங்கே ''போர்டே'' போட்டு விடுகிறார்கள் என்று மகிழ்ச்சியோடு நெருங்கிய நண்பர் அதிர்ச்சியோடு திரும்பினார். ''பிராமணர்கள் மட்டும் அணுகவும்'' என்று அந்தப் போர்டிலேயே ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்ததுதான் காரணம்.*

● *பார்ப்பன ஜெயா கும்பல் என்று சொல்கிறார்களே பார்ப்பான் என்பது சாதியாக இருக்கும்போது நாம் ஏன் சாதியைப் பற்றி பேசுகிறோம்?*

*— வி.பாலு, அதிரை.*

★ ''சாதிக் கண்ணோட்டம் ஒழிக்கப்பட வேண்டியது; எந்த வகையிலும் அதற்கு ஊக்கமளித்துவிடக் கூடாது'' என்கிற உணர்வு வாசகரின் கேள்வியில் புதைந்திருப்பது தெரிகிறது. நாம் அதை மதிக்கிறோம்; அதையே விரும்புகிறோம். ஆனால் பார்ப்பன சாதியின் உணர்வு எத்தகையது என்பதற்கு ஒரு உதாரணத்தை இங்கே பார்ப்போம்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஈழத்து நண்பர் சென்னையில் குடியேற வந்தார். இங்கேயே தங்கி ஏதாவது தொழில் செய்ய வேண்டும், பிள்ளைகளைப் படிக்க வைக்கவேண்டும் என்று விரும்பினார். அவருடைய தம்பிமார் இருவர் மேலைநாடுகளில் நல்ல வேலை பார்ப்பதால் நிறையவே பணம் அனுப்பி வந்தனர். அதனால் தனது வசதி - தேவை - தகுதிக்கு ஏற்ப ஏதாவது ஒரு மேல்தட்டு நடுத்தரப் பகுதியில் வீடு பார்த்துத் தரும்படி கேட்டார். சென்னையில் தியாகராய நகர் - மாம்பலம் பகுதியாக இருந்தால் பொருத்தமாக இருக்கும் என்றார். அந்தப் பகுதிக்குள் புகுந்தோம். ''வீடு காலி'' என்கிற ''போர்டு'' பெரிதாகக் கண்ணில் பட்டது. தரகன் - கிரகன் என்று அழைய வேண்டியதில்லை, இங்கே ''போர்டே'' போட்டு விடுகிறார்கள் என்று மகிழ்ச்சியோடு நெருங்கிய நண்பர் அதிர்ச்சியோடு திரும்பினார். ''பிராமணர்கள் மட்டும் அணுகவும்'' என்று அந்தப் போர்டிலேயே - ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்ததுதான் காரணம். ''50 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்நாட்டில் பகுத்தறிவு, சுயமரியாதை இயக்கம் நடந்திருக்கிறது. சென்னை போன்ற நகரங்களில் தெரு - சாலைப் பெயர்களில்கூட சாதிப்பெயர் அகற்றப்பட்டிருக்கிறது. இருந்தும் இப்படியா?'' என்று ஈழத்து நண்பர் அதிசயித்தார். சென்னையில் மட்டுமல்ல டில்லி, பம்பாய், கல்கத்தா, பெங்களூர் போன்ற பெருநகரங்களிலும் கூட தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் தனி அக்கிரகாரங்கள் அமைத்துக் கொண்டு வாழ்கிறார்கள் என்பதைக் கேட்டு அவர் மேலும் அதிர்ச்சி தெரிவித்தார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? மற்றபிற மேல் சாதிகளும் கூட சாதி பாராட்டுகின்றனர்; ஆனால் பார்ப்பனர்களைப் போல இவ்வளவு பகிரங்கமாகவும் வக்கிரமாகவும் துணிவாகவும் அதைச் செய்வதில்லை; மற்றபிற மேல் சாதிக்காரர்களின் கடந்த 2, 3 தலைமுறையினர் தமது பெயரில் சாதிப் பெயரைச் சேர்த்துக் கொள்வது வழக்கொழிந்து வருகிறது. ஆனால், பார்ப்பன இளைஞர்களும், வழக்கத்துக்கு மாறாக பார்ப்பனப் பெண்களும்கூட தமது பெயருடன் சாதிப் பெயரைச் சேர்த்துக் கொள்வது அதிகரித்து வருவதைப் பார்க்கிறோம். அதேபோல சென்னை தி.நகர், மயிலை போன்ற பகுதிகளில் மடிசார், பஞ்சகச்சம் ஆகிய உடைகள் ஆயத்தநிலை (ரெடிமேட்) கடைகளில் தைத்து வைக்கப்பட்டு, வாங்கி பார்ப்பன சிறுவர் - சிறுமிகளுக்கு அணிவித்து மகிழ்வதையும், பண்டிகைகளில் வழக்கொழிந்துபோன பார்ப்பன பழக்கங்கள், முறைகள் அதிகரித்து வருவதையும் பார்க்கிறோம். ஆகவே, நமது நாட்டில் சாதி, மத, அரசியல் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டத்தில் பார்ப்பன எதிர்ப்பு தவிர்க்க முடியாததாகிறது. ■

படிப்பகம்

www.padippakam.com

# வங்கி - பங்குச் சந்தை மோசடி மறைந்துள்ள இரகசியங்கள்

# ஏப்பம் விடப்பட்டது பொதுத்துறை

பங்குச் சந்தை - வங்கி மோசடிகள் பற்றிய இத்தொடரில் இதுவரை இரண்டு பகுதிகளைப் பிரசுரித்தோம். அவற்றில் முதல் பகுதியில் பங்குச் சந்தை என்றால் என்ன? அது எப்படி உருவாக்கப்பட்டு இயக்கப்படுகிறது? இதன் மூலம் ''பொது மக்க''ளிடம் இருந்து பங்குத் தொகையாகவும், நிதி நிறுவனங்களிடம் இருந்து கடன், மானியம் மற்றும் கூட்டுப் பங்கு முதலீடாகவும் தரகு அதிகார முதலாளிகள் தமது சொந்த தொழில் வர்த்தகக் கழகங்களுக்கு எப்படி நிதி மூலதனம் திரட்டுகிறார்கள்? என்பதைச் சுருக்கமாக விளக்கினோம். இந்தப் பங்குச் சந்தையில் முதலீடு செய்யும் பல ''அப்பாவி'' பங்குதாரர்களை கொள்ளையிடுவதற்காக ''வெளியில் இருந்து'' ஏராளமான முதலீட்டை திடீர் என்று கொண்டுவந்து கொட்டி செயற்கையாக பங்குகளின் மதிப்பை விண்ணைமுட்டும் அளவுக்கு ஏற்றிவிட்டு, பிறகு திடீரென்று பங்குகளை விற்று, அவற்றின் மதிப்பில் வீழ்ச்சி ஏற்படுத்தி அந்த ''அப்பாவி'' பங்குதாரர்களுக்குப் பெருத்த நட்டம் ஏற்படுத்தி பல ஆயிரம் கோடி ரூபாய் அளவு பங்குச் சந்தைத் தரகர்களும், அரசு - வங்கி அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் எப்படிக் கொள்ளையிட்டனர் என்பதையும் முதல் பகுதியிலேயே விளக்கினோம்.

இரண்டாவது பகுதியில், மேற்படி மோசடிக்காக ''வெளியில் இருந்து'' திடீர் என்று கொண்டுவந்து அந்தப் பகற்கொள்ளைக்காரர்கள் கொட்டிய நிதி மூலதனமே கூட அவர்களுடையது அல்ல. அரசுடமை வங்கி மற்றும் பிற நிதி நிறுவனங்களில் இருந்து பல ஆயிரம் கோடி ரூபாய்களை பல முறைகேடுகள் மூலம் கடத்திக் கொண்டுவந்து கொட்டியே மேற்படி மோசடிகளைச் செய்தனர் என்பதைப் பார்த்தோம். பலகோடி சாதாரண மக்களிடம் உள்ள மிகச் சொற்பமான நிதியையும்கூட ஒன்றுதிரட்டி இவ்வாறு பங்குச் சந்தைச் சூதாடிகளின் காலடியில் கொட்டப்பட்டதையும், வங்கிகளின் சாதாரண சட்டப்படியான வேலையே பெரும் தரகு அதிகாரவர்க்க முதலாளிகளுக்கு நிதி மூலதனம் திரட்டித் தருவதுதான் என்பதையும் அந்தப் பகுதியில் பார்த்தோம்.

''பங்குச் சந்தை - வங்கி மோசடிகள்'' என்ற இத்தொடரின் இந்த மூன்றாவது பகுதியில் இன்னும் மூன்று வகைகளில் நடந்த பகற்கொள்ளை மோசடிகளைப் பார்க்கப் போகிறோம். அதாவது மேற்படி பகற்கொள்ளையின் வசதிக்காக அரசுடமை வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்களின் நிதி மூலதனம் மட்டும் போதாதென்று மக்களுக்குச் சேவை செய்வதாகக் கூறப்படும் பல ''பொதுத்துறை'' நிறுவனங்களின் உபரி நிதியையும், உபரி இல்லை என்றால் ''பொதுத் துறை'' நிறுவனங்களின் பெயரால் கடன் பெற்றும் அத்தொகையையும் அரசுடமை மற்றும் வெளி நாட்டு வங்கிகளில் முதலீடு செய்யும்படி தூண்டிவிடப்பட்டன; பின்னர் அத்தொகைகளும் கூட பங்குச் சந்தைத் தரகர்களின் சூதாட்டத்திற்குத் தரப்பட்டன. அடுத்து இந்த அரசு பின்பற்றும் பொருளாதாரத் தாராளமயமாக்குதலின் ஒரு பகுதியாக பல ''பொதுத் துறை'' நிறுவனங்களைத் தனியார் மயமாக்கினர்; அதன்படி அந்நிறுவன பங்குகளைப் பொதுச் சந்தையில் விற்பதற்குப் பதில் இரண்டு பங்குத் தரகுக் கம்பெனிகள் மூலம் குறைந்த விலைக்கு, இரகசியமாக விற்று பங்குச் சந்தைத் தரகர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு வங்கி அதிகாரிகள், அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகளே ''பொதுத் துறை'' நிறுவனங்களின் உடமையாளர்கள் ஆகிவிட்டனர். அதோடு இந்தப் பங்குச் சந்தை - வங்கி மோசடியில் முக்கிய ஈடுபாடு கொண்டு எவ்வாறு அந்நிய வங்கிகள் கொள்ளை லாபம் அடித்து தமது சொந்த நாடுகளுக்கு இரகசியமாகக் கடத்திக் கொண்டு போயினர் என்பதையும் இந்தப் பகுதியில் பார்ப்போம்.

தொடர்ந்து இன்னொரு உண்மையையும் நாம் கூர்ந்து நோக்க வேண்டும். உலகிலேயே மிகப் பெரிய பங்குச் சந்தை - வங்கி மோசடிகளில் ஒன்றான இதில் சம்பந்தப்பட்டுள்ளவர்களை தனி நபர்களாகவோ, அவர்களது தொழில் - வர்க்கப் பின்னணியையோ மட்டும் பார்த்தால் போதாது. இவர்கள், பார்ப்பன, குறிப்பாக தமிழ் நாட்டுப் பார்ப்பன, பனியா, மார்வாரி - ஜெயின் ஆகிய ஒரு சில குறுகிய சமூக - சாதிப் பிரிவினர்; இவர்கள் பெரும்பாலும் இரத்த உறவு கொண்ட குடும்ப பின்னணி உள்ளவர்கள். இவர்கள் தமது சுய ஆதாயம் கருதியே வேறுபிற சமூக - சாதிப் பிரிவுகளைச் சேர்ந்த தனி நபர்களைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டுள்ளனர். இவர்கள் இந்த நாட்டின் அரசியல் அதிகாரத்தை நீண்ட காலமாகவே பங்கு போட்டுக் கொண்டுள்ளனர். எனவேதான் இவ்வளவு பெரிய மோசடியையும் இன்னமும் மூடிமறைத்திட முயன்று ஓரளவு வெற்றியும் பெற்று வருகிறார்கள். இவை எல்லாம் எப்படி நடக்கிறது என்பதையும் பிறகு பார்ப்போம்.

நேரு - இந்திரா பரம்பரையினர் பீற்றிக் கொண்ட காங்கிரசின் ''ஜனநாயக சோசலிச''க் கொள்கையின்படி பல பொதுத்துறை தொழில், வர்த்தக, நிதி நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆளும் தரகு அதிகார முதலாளிகள், நிலப்பிரபுக்களின் நலன்களுக்காக அவர்களால் நிதி திரட்டித் தனியே நடத்த முடியாத திட்டங்களை அமுலாக்குவதற்கானவைதான் இந்தப் பொதுத்துறை நிறுவனங்கள் என்பதே உண்மை. இவை ஆளும் கட்சி மந்திரிகள், தலைவர்கள், பிரமுகர்களும் அதிகாரிகளும் ஆண்டு அனுபவிக்கும், அதிகாரவர்க்க முதலாளிகளால் நிர்வகிக்கும் நிறுவனங்களாகவே உள்ளன. இந்தப் பொதுத்துறை நிறுவனங்களில் பலவும் எந்த நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டனவோ அவற்றுக்கு மாறாக, விதிமுறைகள் - கட்டுப்பாடுகளுக்கு எதிராக பங்குச் சந்தைச் சூதாட்டத்துக்கு தமது நிதியில் பெரும்பங்கை முதலீடு செய்துள்ளது இப்போது அம்பலமாகியிருக்கிறது. இதற்காக வழக்கமாக மந்திரிகளும், அதிகாரிகளும் அடிக்கும் கொள்ளையைவிடப் பலமடங்கு லஞ்சம் வாங்கியிருக்கிறார்கள். இங்கே சில சான்றுகளைப் பார்ப்போம்.

மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு மின் திட்டங்களுக்கு நிதி மூலதனம் திரட்டித் தருவதற்காக (எரி) சக்தி நிதிக் கழகம் என்று ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் மின்வெட்டு - மின் நெருக்கடி நிரந்தரமாகவே உள்ளது. புதிய மின் திட்டங்களுக்குப் போதிய நிதியில்லை என்று கைவிரிக்கப்படுகிறது. நிதிப் பற்றாக்குறையையே காரணம் காட்டித் தனியார் மின் உற்பத்தித் திட்டங்கள் அனுமதிக்கப்படுகின்றன. நிதிக்காக பணக்கார உலக நாடுகளிடம் மத்திய, மாநில அரசுகள் கையேந்திப் போகின்றன. ஆனால் மத்திய மந்திரியின் ஆதிக்கத்தில் உள்ள (எரி) சக்தி நிதிக் கழகத்துக்கு ஒதுக்கப்பட்[illegible] முழுமையாக மின்திட்டங்களுக்கு விநியோகிப்பதில்லை. 1990 ஆம் ஆண்டு அந்நிதிக் கழகம் விநியோகிப்பதற்கான இலக்கு 2,000 கோடி ரூபாய். ஆனால், 859 கோடி ரூபாய்தான். அதாவது 43 சதவிகிதமே மாநில அரசுக்குக் கடனாக விநியோகித்தது. அதேபோல 1991-92 ஆம் ஆண்டு (எரி) சக்தி நிதிக் கழகத்தின் நிதி விநியோக இலக்கு 1,500 கோடி ரூபாய். ஆனால் அக்கழகம் 920 கோடி ரூபாயை, அதாவது 61 சதவீதத்தைத்தான் மின்திட்டங்களுக்காகத் தந்தது.

இதனால் அக்கழகத்திடம் ஏராளமான நிதி ''உபரி''யாக இருந்தது. பல்வேறு மின் திட்டங்களுக்கு கடன் கேட்டு மாநிலங்களின் மின்வாரியங்களிடம் இருந்து 86 மனுக்கள் வந்தன. ஆனால் அவற்றுக்குக் கடன் தராமல் அதே சமயம் ''உபரி'' என்று மோசடியாக வைத்திருந்த தொகையை அரசுடமையான ''யுகோ'' வங்கியிலும், அமெரிக்காவின் சிட்டி வங்கியிலும் உள்ள பங்குச் சந்தை முதலீடுப் பிரிவுகளில் போட்டு வைத்தது. இது போதாது என்று உயர்ந்த வட்டி

படிப்பகம்

www.padippakam.com

ரும் கடன் பத்திரங்களை விற்று ''பொதுமக் ''ளிடம் இருந்து 300 கோடி ரூபாய்க்கு மலதனம் திரட்டியது; ஆனால் அதையும் ன்திட்டங்களுக்குத் தராது பங்குச் சந்தை தலீடுக்காக வங்கிகளில் போட்டது.

அதேபோல தேசிய அனல் மின்சக்திக் ழகம் 800 கோடி ரூபாய்க்கு கடன் பத்திரங் ளை விற்று மூலதனம் திரட்டியது. அதை ம் ''யூகோ'' வங்கி மற்றும் சிட்டி வங்கி பான்று பங்குச்சந்தை - வங்கி மோசடிக ல் சிக்கியுள்ள ஃபேர்குரோத் நிதிச் சேவை றுவனம் மற்றும் ஆந்திரா வங்கி நிதிச் சேவைப் பிரிவு ஆகியவற்றில் போட்டு வத்தது.

இதையும் ஏற்கனவே உள்ள அனைத்து திமுறைகளுக்கு மாறாகவே மேற்கண்ட ரு கழகங்களும் செய்தன. அதாவது ''உப நிதி இருந்தால் அதை 90 நாட்களுக்கான த்திரவாத நிதிவைப்பில்தான் போட்டு பக்க வேண்டும். வங்கிகளின் முதலீட்டுப் ரிவுகளிலோ, அன்றாட தேவைப் பண கையிலோ, கடன் பத்திரங்களுக்கு ஈடா வா நீண்டகாலத் திட்டத்தின் கீழ் போடக் டாது. இப்படிப் போடுவதால் வாடிக்கை ளர்தான் லாப - நட்டங்களுக்குப் பொறுப் ற்க வேண்டும் என்பதாலேயே இந்த றைகளுக்குத் தடைவிதிக்கப்பட்டது. த விதிமுறைக்கு மாறாகவே மேற்படி கி. நிதி நிறுவனங்களில் ''உபரி'' நிதி டப்பட்டது. அந்த நிதி நேரடியாகப் பங் சந்தை சூதாட்டத்திற்கு கடத்திக் ண்டு போய் இறுதியில் திரும்பப் பெற யாமலேயே போய்விட்டது. இதனால் ) சக்தி நிதிக் கழகத்தின் காப்பகத்தில் ட்டு வைக்கப்பட்டிருந்த தமிழக மின்வா பணம் ரூ. 6 கோடியும் கூட ஏப்பம் ப்பட்டுவிட்டது.

எரி சக்தித் துறை அதிகாரிகளும் மந் கல்பனாத்ராயும் அறிந்தே இதைச் செய் ள். ''சும்மா உபரி''யாக கிடந்த கையை லாபம் ஈட்டும் நோக்கத்துடன் டு செய்ததாக இப்போது இவர்கள் கூறு கள். உண்மை என்னவென்றால் பங் ந்தை சூதாட்டம் உச்ச நிலையில் இருந் து பங்குச் சந்தையில் 624 சதவீதம் ம் ஈட்டும் வாய்ப்பிருந்தது. அதிகபட் 20 சதவீதம் வட்டி தருவதாகக் கூறி த் துறை நிதியை எடுத்து 624 சதவீதம் தரக்கூடிய பங்குச் சந்தையில் போட் ள். இந்த மிகையான லாபம் தரகர்கள், - அரசு அதிகாரிகள் முதல் மந்திரிகள் பங்கு போட்டுக் கொண்டார்கள். பங் ந்தை - வங்கி மோசடி அம்பலமான பங்குகளின் மதிப்பு திடீர் வீழ்ச்சி ந்தது. தங்களுக்குப் பெரும் நட்டம் வதைத் தடுப்பதற்காக தரகர்களுக்கு மாக நிதி தேவைப்பட்டது. ஆகவே த் துறை நிறுவனங்களுக்கு 32 சதவீ ரை வட்டி கொடுப்பதாகக் கூறி வங்கி றுவன பங்கு முதலீட்டில் போடும்படி னர். இதற்காகவும் வங்கி — அரசு ரிகள், மந்திரிக்கு கமிஷன் தரப்பட் தனால் பங்குச் சந்தை - வங்கி மோச அம்பலமாகிய பிறகும்கூட, முதலீட் ாகை திரும்பாது என்று தெரிந்ததும்



அரசுத்துறை நிறுவனங்களின் நிதியை எடுத்து பங்குச் சந்தையில் சூதாடி ஏப்பம்விட்ட மத்திய எரிசக்தித்துறை மந்திரி கல்பனாத்ராய்; இரசாயன மற்றும் உர மந்திரி சிந்தாமோகன்.

இந்த முறைகேடும் மோசடியும் தொடர்ந்திருக்கிறது. இந்தவகையில் (எரி) சக்தி நிதிக் கழகத்தின் 300 கோடி ரூபாய் முதலீட்டுக்கு மட்டும் 8 கோடி ரூபாய் லஞ்சம் கைமாறி இருக்கிறது.

மத்திய மந்திரி டாக்டர் சிந்தாமோகன் அதிகாரத்தில் உள்ள இரசாயன மற்றும் உர அமைச்சகத்துக்குக் கீழ் வரும் ''கிரிப்கோ'' நிறுவனத்தின் பணி நாட்டின் விவசாயக் கூட்டுறவு இயக்கத்தை ஆதரித்து, ஊக்குவிப்பதும், விவசாய உள்ளீட்டுப் பொருட்கள் மலிவாகக் கிடைக்கச் செய்வதும்தான். நிதிப்பற்றாக் குறையைக் காரணம் காட்டி உரமானியங்களை வெட்டி உரவிலையை ஏற்றுகிறது அரசு; அதற்காகவாவது இந்த ''கிரிப்கோ''வின் ''உபரி'' நிதியை வழங்கியிருக்கலாம். இந்த ''கிரிப்கோ'' நிறுவனமே அரசுக்கு தர வேண்டிய 90 கோடிரூபாய் கடனுக்காக 11.75 சதவீத வட்டி செலுத்தி வருகிறது. அந்தக் கடனையாவது அடைத்திருக்கலாம்; அல்லது அதன் நோக்கத்திற்கேற்ப நாட்டின் கூட்டுறவு வங்கிகளிலாவது முதலீடு செய்திருக்கலாம். இதற்கெல்லாம் மாறாக ''கிரிப்கோ'' தனது 172 கோடி ரூபாய் உபரி நிதியை பங்குச் சந்தைச் சூதாட்டத்தில் ''முதலீடு'' செய்தது. அதுவும் பங்குச் சந்தை - வங்கி மோசடி அம்பலமான பிறகு அதில் சம்பந்தப்பட்ட வங்கிகள் மூலமாகவே இதைச் செய்துள்ளது.

''கிரிப்கோ'' நிர்வாக வாரியத்தின் முடிவுப்படி அது தனது ''உபரி'' நிதியை அரசுடமை வங்கிகளில் மட்டுமே முதலீடு செய்திருக்க வேண்டும். அதற்கு மாறாக ஆந்திரா வங்கி, கனரா வங்கி ஆகியவற்றின் நிதிச் சேவை நிறுவனங்களிலும் பாங்க் ஆஃப் அமெரிக்கா மற்றும் ஹாங்காங் வங்கியிலும் போட்டு அதன் மூலம் பங்குச் சந்தை சூதாட்டத்திற்கு கொடுக்கப்பட்டது. இதனால் 4 சதவீதம் ''கமிசன்'' அடித்தார்கள்.

இந்த முறைகேடும் மோசடியும் மந்திரியின் ஈடுபாடு இல்லாமல் நடந்திருக்க முடியாது. எனவேதான் இதில் குற்றம் செய்ததாக இடைநீக்கம் செய்யப்பட்டிருந்த ராஷ்டீரிய இரசாயன - உர நிறுவன நிர்வாக இயக்கு

நர் வெங்கடேசன் ''கிரிப்கோ'' நிர்வாக இயக்குநர் நசீம் அகமது. தேசிய உர ஆலைகள் நிர்வாக இயக்குநர் எஸ்.என்.ஜெயின் ஆகியோர் மீதான் சி.பி.ஐ. வழக்கு முடிவதற்கு முன்பாகவே அவர்களை மந்திரி சிந்தாமோகன் மீண்டும் பதவியில் அமர்த்திவிட்டார். ''கிரிப்கோ''வுக்கு நிர்வாக இயக்குநர் இப்போது யாரும் கிடையாது. அதைப் பயன்படுத்தி மந்திரியே அதிகார முறைகேடுகளில் ஈடுபடுகிறார்.

எரி சக்தி மற்றும் இரசாயன - உர அமைச்சகப் பொதுத்துறை நிறுவனங்களைப் போலவே பங்குச் சந்தைச் சூதாட்டத்துக்கு நிதி கொடுத்து ஊழல் செய்துள்ளன, மந்திரி சங்கரானந்தின் பொறுப்பில் உள்ள எண்ணெய், இயற்கைவாயு கமிசன் மற்றும் எண்ணெய்த் தொழில் வளர்ச்சி வாரியம் ஆகியன. ஆண்டுக்கு 2.3 தடவை பெட்ரோலியப் பொருட்களின் விலையேற்றிப் பகற்கொள்ளையடித்தது அரசு. ஆனால் அதை மக்களுக்கு உபயோகமான தொழில்கள் - பணிகளில் முதலீடு செய்யவில்லை. கடந்த ஆறு மாதங்களில் மட்டும் ஏறக்குறைய 430 கோடி ரூபாய் அளவுக்கு கனரா வங்கி, சிண்டிக்கேட் வங்கி மற்றும் ஃபேர்குரோத் நிதிச் சேவைகளின் மூலம் பங்குச் சந்தை சூதாட்டத்தில் போட்டது.

இதில் இரண்டு முக்கியமான அம்சங்களைக் கவனிக்க வேண்டும். பாசிச ராஜீவ் கும்பலின் போஃபார்ஸ் பீரங்கி பேர ஊழலை மூடிமறைப்பதற்கு நாடாளுமன்றக் கூட்டுக் குழுத் தலைவராக இருந்து சேவை செய்தவர்தான் இந்த ஊழல் மந்திரி சங்கரானந்த். அடுத்து இவரது மகன் பெரும் அதிகாரியாக உள்ள கனரா வங்கி நிதிச் சேவை நிறுவனத்தில்தான் அதிகத் தொகை போடும்படி செய்தார். இப்போது ''எனக்கொன்றும் தெரியாது அதிகாரியின் சிபாரிசுபடி நடந்து கொண்டேன்'' என்று புளுகுகிறார். ஆனால் இவரே கைப்பட எழுதி ஒப்புதலிட்ட ஆவணமே சிக்கியிருக்கிறது.

குவாலியார் முன்னாள் அரசு வாரிசும், பெரும் தரகு முதலாளியும் மத்திய மந்திரியு

படிப்பகம்

www.padippakam.com

ஏர் - இந்தியா, இந்தியன் - ஏர்லைன்ஸ் வாயுதூத் ஆகிய நிறுவனங்கள் இவையும் பங்குச் சந்தை சூதாட்டத்திற்கு நிதி முதலீடு - மோசடி செய்துள்ளன. இவற்றில் முதலிரண்டு மட்டும் 175 கோடி ரூபாய்வரை பங்குச் சந்தைச் சூதாட்டத்திற்காக சிட்டி வங்கி, இந்திய அரசு வங்கி மூலதன நிதிச் சந்தைப் பிரிவு ஆகியவற்றில் போட்டன.

வாயுதூத் நிறுவனம் ஏற்கனவே நட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. இருந்தபோதும் அது 20 கோடி ரூபாய் அளவு மற்ற இரு விமானப் போக்குவரத்து நிறுவனங்களிடம் இருந்து கடன்வாங்கி அமெரிக்காவின் கிரிண்லேஸ் மற்றும் இங்கிலாந்தின் ஸ்டாண்டர்டு சாட்டர்டு ஆகிய வங்கிகள் மூலமாக பங்குச் சந்தை சூதாட்டத்தில் போட்டது.

இந்த மூன்று விமானப் போக்குவரத்து நிறுவனங்களும் இதற்காக மத்திய அரசிடம் அனுமதி கோரியிருந்ததாகவும் பதில் ஏதும் வராததால் அரசு சம்மதம் தெரிவித்துவிட்டதாகக் கருதி முதலீடு செய்ததாகக் கூறுகின்றன. அதோடு இந்தத் தவறுக்கு காரணம் ஏர்-இந்தியாவின் முன்னாள் நிதி இயக்குநரும் தற்காலிக சேர்மனுமான எஸ்.ஆர்.குப்தாவின் மீது பழி போடுகின்றன. அவர் சிபாரிசுப்படிதான் முதலீடு செய்யப்பட்டதாகக் கூறுகின்றன. ஆனால் அந்த குப்தா பதவி ஓய்வு பெற்ற பின்னரும் இந்த முறைகேடும் மோசடியும் நடந்துள்ளது.

இரயில்வே அமைச்சர் ஜாபர் ஷெரீப்பின் கீழ் உள்ள பல தொழில் நிறுவனங்களும், நிதிக் கழகங்களும் கூட இப்படிச் செய்திருப்பதாக செய்திகள் வருகின்றன. அகில இந்திய காங்கிரசுக் கமிட்டி உறுப்பினரும் தொழில் அதிபருமான சதுர்வேதியின் மூலம் இதேமாதிரியான முறைகேடு, மோசடி, லஞ்ச ஊழல் செய்ததாக மத்திய விவசாய மந்திரி பலராம் ஜாக்கர் மற்றும் நாடாளுமன்ற விவகார மந்திரி குலாம் நபி ஆசாத் ஆகியோரின் பெயரும் அடிபடுகின்றன.

★ ★ ★

அரசின் புதிய பொருளாதாரக் கொள்கை, தாராளமயமாக்கலின் கீழ் பொதுத்துறை தொழில், நிதி, வர்த்தக நிறுவனங்களைத் தனியார் மயமாக்குவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. நிர்வாகத்திறமை குறைவு காரணமாக பொதுத்துறையில் ஏராளமாக நட்டம் ஏற்படுவதாகவும், பொருளாதார வளர்ச்சியில் தனியார் முன்முயற்சியைக் கட்டவிழ்த்துவிட இவ்வாறு செய்வதாகவும் அறிவித்தனர்.

இதற்காக திட்டக் கமிசன் உறுப்பினரான வி.கிருஷ்ணமூர்த்தியின் தலைமையில் பொதுத்துறை நிறுவனங்களின் முதலீட்டு விலக்கத்துக்கான வழிமுறைகள் - விதிமுறைகளை வகுக்கும் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. ஆனால் தமிழ்நாட்டுப் பார்ப்பனராகிய இந்தக் கிருஷ்ணமூர்த்திதான் பங்குச் சந்தை - வங்கி மோசடிகளின் மூளைகளில் ஒன்றாக இருந்திருக்கிறார்.

தனியார்மயமாக்குவது, முதலீட்டு விலக்கம் என்கிற பெயரில் பல பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளையும் ஒரு சில பங்குச் சந்தைத் தரகர்களும், அரசு -



**மோசடி மகார்ராஜா: விமானப் போக்குவரத்து மந்திரி மாதவராவ் சிந்தியா**

வங்கி அதிகாரிகளும், மந்திரிகளும் அவர்கள் மூலம் ஏகாதிபத்திய பன்னாட்டுத் தொழில் கழகங்களும் கைப்பற்றுவதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் பெரும் லாபம் ஈட்டக்கூடிய பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை அடிமட்டு விலைக்கு இரகசியமாகக் கைமாற்றிக் கொடுத்துள்ளனர்.

தனியார்மயமாக்களின் முதல் தவணையாக முக்கியப் பொதுத்துறை நிறுவனங்களின் 25 சதவீத பங்குகளை தனியாருக்கு விற்பது என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் இந்தப் பங்குகளைப் பகிரங்கச் சந்தையில் விற்பதற்குப் பதில், இரகசியமாகவும் மொத்தமாகவும் அர்சத் மேத்தா, கிருஷ்ணமூர்த்தி ஆகிய கிரிமினல் கும்பலின் கூட்டாளிகளால் நடத்தப்படும் மெக்கார்டிச் அண்ட் கோ மற்றும் ஸ்டீவார்ட் அண்ட் கோ ஆகிய இரு தரகுக் கம்பெனிகளிடம் விற்ப

**விவசாயிகளோ பட்டினியில்; விவசாயத்துக்கான அரசு நீதியோ பங்குச் சந்தை சூதாட்டத்தில்; மோசடியில் சிக்கிய விவசாய மந்திரி பல்ராம் ஜாக்கர்.**



னைக்காகத் தரப்பட்டன. இத்தரகுக் கம்பெனிகளிடம் இருந்து இரண்டு அந்நிய வங்கிகளுக்கு பங்குகள் மாற்றப்பட்டன. பொதுத்துறை பங்குகளின் முதலீட்டு விலக்கக் கமிட்டித் தலைவர் என்கிற முறையில் கிருஷ்ணமூர்த்தி அந்தப் பங்குகளின் சந்தை மதிப்பு என்னவென்று அறிந்திருந்தார். அவர்கள் மூலமாக இரகசியங்கள் தரகர்களுக்கு தெரிவிக்கப்பட்டன. இதனால் ஏற்கனவே நெருக்கடி - நட்டத்தில் இருப்பதாகக் கூறப்பட்ட பொதுத்துறைக்குப் பெரும் நட்டம் விளைவித்தனர்.

இந்தவகையில் 7,000 கோடி ரூபாய் மதிப்புடைய 16 பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகள் விற்கப்பட்டன. 1992 பிப்ரவரியில் இந்தப் பங்குகளை வாங்குவற்கு முன்வரும்படி தொழில் துறை அமைச்சகம் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனங்களுக்குக் கடிதம் எழுதியது. இந்தப் பங்குகளை வங்கிகள் வாங்குவதற்கு முன்பே தரகர்களிடம் பேரம் பேசி முடித்துவிட்டன. இதனால் எந்தெந்த வங்கிகளுக்கு எந்தெந்த விலைக்குக் கிடைக்கும் என்பது முன்கூட்டியே முடிவாகி இருப்பது தெரிகிறது. இதன் மூலம் பல கோடி ரூபாய் வங்கி - அரசு அதிகாரிகளும் தரகர்களும் கொள்ளையடித்துள்ளனர்.

பாரத் மிகுமின் ஆலை, இந்திய பெட்
ரோலியம் மற்றும் இரசாயன ஆலை
போன்ற அதீத லாபமீட்டும் நிறுவனங்களின்
பங்குகள் அற்ப விலைக்கு விற்கப்பட்டன
பாரத் மிகுமின் ஆலையின் துவக்க மூல
னம் 244 கோடிதான். ஆனால் அதன்
சொத்தோ 20,000 கோடி ரூபாய். இவ்வள
மதிப்புடைய, மிகுந்த லாபம் தரக்கூடிய மி
மின் ஆலையின் 10 ரூபாய் பங்குகள் 2
முதல் 37 ரூபாய் வரை தாண்டி விற்கப்ப
டன. ஆனால் பாரத மிகுமின் ஆலை
விட மிகமிகக் குறைவான ஆரம்ப மூலத
மும் சொத்தும் லாபமும் உடைய ஏ.சி.
என்னும் தனியார் சிமெண்ட் - கனரக நிறு
னத்தின் 100 ரூபாய் பங்கோ 10,00
ரூபாய்க்கு பங்குச் சந்தையில் அப்போ
விலைபோய்க் கொண்டிருந்தது.

இவ்வாறு இரகசியமாகவும், மி
குறைந்த விலையிலும் பொதுத்துறை நிற
னங்களின் பங்குகளை விற்பதன் மூ
அவற்றைத் தாமே கைப்பற்றிக் கொள்ளவு
அந்நிய வங்கிகள் மூலமாக பன்னாட்
தொழில் கழகங்களுக்கும், முகந்தெரிய
நபர்கள், நிறுவனங்களுக்கும் போய்ச்
வும் ஏற்பாடு செய்தனர். ஊழல் பெருச்சா
கிருஷ்ணமூர்த்தியின் மகன்கள் ஜெயகு
சந்திராவும் முறையே "சீமன்ஸ்" என்ற ெ
மனியின் தேசங்கடந்த தொழில் கழகம்
றும் "ஆசியா பிரௌன் பேவேரி" எ
சுவிஸ்நாட்டின் தேசங்கடந்த தொழில்
கம் ஆகியவற்றின் அதிகாரபூர்வ ஏஜெ
கள். இந்த தொழில் கழகங்களின் துணை
கம்பெனியாக பாரத மிகுமின் நிறுவனத்
மாற்றிவிடும் வகையில் இந்தத் தரகர் கும்
வேலை செய்துள்ளது. சுருக்கமாகச் செ
னால் பொதுத்துறைத் தொழில்களைத் தா
வார்ப்பதில் தேசதுரோக விபச்சாரி
கவே இந்த பார்ப்பன, பனியா, மார்வா
ஜெயின் கும்பல் நடந்து கொண்டுள்ளது

(தொட

www.padippakam.com



பகுதி கொள்ளையர்களுக்கு எதிராக பு.மா.இ.மு.-வினர் ஆர்ப்பாட்டம்

# சலவையாளர்களை கசக்கிப் பிழியும் 'சகோதரர்கள்'! போலீசு உடந்தை!

புரட்சிகர மாணவர் இளைஞர்
ன்னணியினர் உயர்த்திப் பிடித்த கரங்கள்,
ரு மோசடி பேர்வழிகளை நடுங்க வைத்
ள்ளன. வேறெங்குமல்ல திருச்சியில்தான்!
ருச்சி பெரிய ஆஸ்பத்திரிக்கு அருகே
ள்ள திரு.வி.க. நகரில் வசிக்கும் சகோதரர்
ான கோவிந்தராசும் (இவர் தமிழ்நாடு
ின்சார வாரியத்தில் பில் கலெக்டர்) ரெங்க
மியுமே (இவர் நகராட்சியில் சுகாதார
ய்வாளர்) அம்மோசடிப் பேர்வழிகள்.
நகரில் உள்ள சலவையாளர் சங்கத்தில்
யலாளராகவும் பொருளாளராகவும்
ந்து கொண்டு, ஆமாம்சாமி நபர் வெங்க
சலத்தை தலைவராகப் போட்டுக்
ாண்டு இவர்கள் நடத்தும் கொள்ளைக்
அட்டூழியத்திற்கும் அளவே இல்லை.

சலவையாளர் சங்க உறுப்பினர்கள் 66
ரிடம் புறம்போக்கில் அரசு ஒதுக்கிய
த்தில் வீடுகட்டித் தருவதாகக் கூறி
000 ரூபாய் வசூலித்து ஏப்பம் விட்ட
அப்பணத்தில் தமக்கு வீடுகட்டி அழகு
த்திக் கொண்டனர். ரெங்கசாமி தனது பத
யைப் பயன்படுத்தி புறம்போக்கு நிலங்
ள ஆக்கிரமித்து அந்நிலம் 10 வருட
பவத்தில் இருப்பதாக போலி ரசீது
தயாரித்துள்ளார். இவ்வாறு உறவினி
களுக்கும் நிலத்தை வளைத்துக் கொடுத்
ளார். தற்போது ஊருக்கு ரோடு போட்டு
பதாகக் கூறி சங்க உறுப்பினர்களிடம்
ரூ. 2,500 தருமாறு இருவரும் கேட்டுள்
கள். இதுகூட ஊருக்கு அடுத்துள்ள
ர்களது வயலுக்கு ரோடு கிடைத்தால்
க ''பிளாட்'' போட்டு விற்கலாம் என்ற
லண்ணத்தால்தான்!

சங்க உறுப்பினர்கள் யாராவது புறம்
க்கில் வீடுகட்டினால் அவர்களின்
டை இடிக்க 'சங்க லெட்டர் பேடை'யே
படுத்தி கேஸ் போடுவார்கள். போலிசு
கூட்டு சேர்ந்து அவர்களை தாக்கி
பறிப்பார்கள். சாராயம் வாங்கிக்
த்தும் 100 ரூபாய்க்காகவும் அப்பாவி

களை ஏய்த்து வீட்டை அபகரித்துள்ளார்கள், இக்கயவாளிகள்.

இவர்கள் தி.க.-வில் பற்றுக் கொண்டவராக ஒருபுறம் வேடங்கட்டிக் கொண்டு, மறுபுறம் மதுரை வீரனுக்கும், ஆஞ்சநேயருக்கும் கோயில் கட்டியதோடு அதிலும் பண மோசடி செய்து அம்பலப்படவே ஊரே காரித்துப்பியது. பக்கத்து வீட்டுக்காரர் ரமேஷ் என்பவரின் வீட்டு வாசலில் தி.க. கொடியைக் நட்டுத் தொல்லைக் கொடுத்தார்கள். இதனால் ரமேஷ் குடும்பத்தினர் குளியலறையை இடித்து வாசலாகப் பயன்படுத்த வேண்டியதாயிற்று. 26.8.92 அன்று ரமேஷ் பேருந்தில் அடிபட்டு அகால மரணமடைந்தார். அவரது இறுதிச் சடங்குக்காக ஏற்கனவே ரெங்கசாமி - கோவிந்தராசுவால் ஆக்கிரமித்து வைத்திருந்த இடத்திலும் பந்தல் போடவேண்டி வந்தது. இப்பந்தல் வேலைக்கு பகுதியிலுள்ள பு.மா.இ.மு.-வைச் சேர்ந்த ரவிச்சந்திரன், பகுதி மக்களுடன் உதவி செய்தார்.

இருவரின் ஊழல்களையும், அரக்க குணத்தையும் அட்டூழியத்தையும் பற்றி பிரசுரங்களும் சுவரொட்டிகளும் போட்டு நாறடித்தார்கள். பு.மா.இ.மு.வி-னர் மேலும் இருவரின் ஊழலைத் தொகுத்து அவர்கள் பணியாற்றும் அலுவலக உயரதிகாரிகளிடம் மனு கொடுத்தார்கள். பீதியடைந்த அக்குற்றவாளிகள், நாளொரு புகாரும் பொழுது விடிந்தால் உறையூர் போலீசு நிலையமுமாக அலைந்தனர். போலீசும் விட்டெறிந்த காசுக்கு வாலாட்டி சேவகம் செய்தது. அடித்ததாகவும், கத்தியால் குத்தியதாகவும் அவர்கள் கொடுத்த பொய் புகாருக்காக மூன்று முறை ரவிச்சந்திரனை போலீசு கைது செய்தது.

ரவிச்சந்திரன் இல்லாத நேரத்தில் அவரது மனைவியிடம் போலீசு வாடி போடியெனப் பேசி தகாத முறையில் நடந்து கொண்டது. பின்னர் ரவிச்சந்திரனை கைது செய்து அழைத்து சென்ற போது போலீசை அம்பலப்படுத்தி முழக்கமிட்டார்.

28.9.92 அன்று ரவிச்சந்திரனின் கைதை கண்டித்தும் போலீசை அம்பலப்படுத்தியும் உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு பு.மா.இ.மு. ஆர்ப்பாட்டம் நடத்தியது. இதற்கு பகுதி மக்கள், பல கட்சிக்காரர்கள் உட்பட 50-க்கும் மேற்பட்டவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே திரண்டு ஆதரவு தரவே ஊர்வலமாகச் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

மேலும், இக் கயவர்கள் சமூக விரோதிகளைத் தூண்டிவிட்டு ரவிச்சந்திரன் வேலை செய்யும் அலுவலகத்திற்குச் சென்று பிரச்சனை ஏற்படுத்த முயன்று அவமானப்பட்டுத் திரும்பினர். இத்தகைய சதிசெயல்கள், சீர்குலைவு வேலைகள் வன்முறைத் தாக்குதல்கள் - மிரட்டல்கள் மூலம் பகுதி மக்களிடமிருந்து தனிமைப்படுவது தாங்கள்தான் என்பதை பாவம் அக்கயவர்கள் உணரவில்லை. அக்கொள்ளையர்களின் செயல்பாட்டை முடக்க பு.மா.இ.மு.-வினர் பகுதி மக்களிடையே தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

*— தகவல்: பு.மா.இ.மு., திருச்சி.*

# கழிப்பிடம் கேட்டு தீப்பந்த ஊர்வலம்

மதுரை சுப்பிரமணியபுரம், எம்.கே.புரம், சோலை அழகுபுரம், ஜெய்ஹிந்த்புரம் பகுதிகளில் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட கழிப்பறைகள் சில மாதங்கள் திறக்கப்பட்டு பின்பு மூடப்பட்டன. 10 ஆண்டுகளாக மூடிக்கிடக்கின்றன. கழிப்பறைகளைத் திறக்கக் கோரி பகுதியிலுள்ள புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணியினர் மனு, சுவரொட்டி மூலம் அணுகியும் பயனில்லாததால் தீப்பந்த ஊர்வலம் நடத்த திட்டமிட்டு அறிவித்தனர்.

தீப்பந்த ஊர்வல நாள் 21.9.92 அன்று 400 க்கும் மேற்பட்ட போலீசார் வந்து போராட்டத்தைத் தடுக்க முயன்றும் பு.மா.இ.மு.வினர் போலீசுக்கு போக்கு காட்டிவிட்டு வேறொரு இடத்திலிருந்து தீப்பந்த ஊர்வலத்தைத் தொடங்கினர். பகுதி மக்கள் வியந்து பாராட்டினர். ஊர்வலம் முடிவடையும் இடத்திலிருந்த போலீசு பதறியடித்துக் கொண்டு வந்து தோழர்களைக் கைது செய்தது. 6 பிரிவுகளின் கீழ் வழக்கு போட்டு சிறையிலடைத்தது. சிறையில் தோழர்கள் புரட்சிகர பாடல்களை கைதிகளுக்குப் பாடிக் காட்டி எழுச்சியூட்டினர்.

படிப்பகம்

www.padippakam.com

● *வங்கதேச அகதிகள் கட்டாய வெளியேற்றம்*
● *தலையைச் சிரைத்து அவமானப்படுத்தி அட்டூழியம்*

# இந்தியாவின் காட்டுமிராண்டித்தனம்

முகம்மது இத்ரீஸ். டெல்லியின் புறநகர் சேரிப்பகுதியில் கடந்த 20 ஆண்டுகளாக தனது குடும்பத்துடன் வாழ்ந்துவரும் கூலித் தொழிலாளி. செப்டம்பர் 9-ம் நாளன்று திடீரென போலீசு அவரது சேரியைச் சுற்றி வளைத்தது. துப்பாக்கிகளும் லத்திகளும் நெஞ்சைக் குறிபார்க்க 132 பேர் கைது செய்யப்பட்டு, போலீசு லாரியில் நாயைப் போல அடைக்கப்பட்டனர். தாங்கள் எதற்காக கைது செய்யப்பட்டோம் என்று முகம்மது இத்ரீசுக்குப் புரியவில்லை.

சிறிது நேரத்தில் கல்கத்தா செல்லும் ரயிலில் 90 பேர் மட்டுமே அமரக்கூடிய பெட்டியில் 132 பேரும் திணிக்கப்பட்டனர். அங்கிருந்து 36 மணிநேரப் பயணம். கையிலோ காசில்லை. பசியால் குழந்தைகள் அலற வேதனையோடு அவர்கள் கல்கத்தா வந்திறங்கினர். இரண்டு நாட்கள் பட்டினியால் பரிதவித்த அவர்களுக்கு இன்னுமோர் அதிர்ச்சி காத்திருந்தது. அவர்கள் எல்லைப் பாதுகாப்புப் படையிடம் ஒப்படைக்கப்பட்டு மீண்டும் லாரியில் அடைத்துக் கொண்டு செல்லப்பட்டனர். வங்கதேச எல்லையில் அவர்களை இறக்கிய எல்லைப் பாதுகாப்புப் படை, ''நாய்களே, ஓடுங்கள்!'' என்று அடித்து வங்கதேசத்துக்கு விரட்டியது.

பசியாலும் வேதனையாலும் துடிதுடித்து ஓடிய அவர்களை வங்கதேச எல்லைப்புற ராணுவம் தடுத்து நிறுத்தியது. ''எங்கிருந்து வந்தீர்களோ, அங்கேயே ஓடுங்கள்! அன்னிய நாய்களுக்கு வங்கதேசத்தில் இடமில்லை'' என்று துரத்தியது. அவர்கள் கெஞ்சினார்கள்; கதறினார்கள். இரு நாடுகளுமே தங்களைத் துரத்தினால் இனி எங்கே போவது என்று அவர்கள் அலறினார்கள். பட்டப்பகலிலேயே அவர்கள் வாழ்வு இருண்டுபோனது. நிர்க்கதியாய் வங்கதேச எல்லையில் பரிதவித்த அவர்கள் இன்று வரை என்ன ஆனார்கள் என்றே தெரியவில்லை.

இந்தக் காட்டுமிராண்டித்தனம் டெல்லியில் மட்டும் நடக்கவில்லை. செப்டம்பர் 12-ம் நாளன்று கல்கத்தா புறநகர்ப் பகுதியிலிருந்து 102 பேர் கைது செய்யப்பட்டு வங்கதேச எல்லைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். எல்லைப் பாதுகாப்புப் படையினர் அவர்களது தலைமுடியை பாதியளவு மட்டுமே மழித்து அவமானப்படுத்தினர். அவர்களது அற்ப உடமைகளும் உடைத்தெறியப்பட்டன. கையில் வைத்திருந்த பணமும் பறித்துக் கொள்ளப்பட்டு கட்டிய துணியோடு அவர்கள் வங்கதேசத்துக்குத் துரத்தப்பட்டார்கள்.

முகம்மது இத்ரீசுக்கு மெதுவாகப் புரியத் தொடங்கியது. தான் பிறப்பால் ஒரு வங்கதேசத்துக்காரன். இந்தியாவில் அகதியாகக் குடியேறியவன் என்பதாலேயே இந்த அவமானமும் அடக்குமுறையும் என்று அவருக்குப் புரிந்தது. 1971-ம் ஆண்டில் 10 வயது சிறுவனாக இருந்த போது தனது தாய் - தந்தையருடன் அகதியாக டெல்லிக்கு ஓடி வந்ததை அவர் நினைவுபடுத்திப் பார்த்தார். ஏறத்தாழ 20 ஆண்டுகாலம் டெல்லியிலே வாழ்ந்த அவருக்கு, வங்கதேசத்தில் தனது பூர்வீக கிராமம் எங்கிருக்கிறது என்றுகூடத் தெரியவில்லை.

அவருடன் சேர்ந்து விரட்டப்பட்ட அப்துல் சுக்கூரின் வேதனைக்குரல் நெஞ்சை உலுக்கியது. சுக்கூர் தனது உறவினரைப் பார்க்க வந்தபோது மற்ற அகதிகளோடு சேர்த்து கைது செய்யப்பட்டார். அவரும் ஓர் வங்கதேச அகதிதான் என்றாலும் தனது மனைவி - குழந்தைகளுடன் மற்றொரு சேரிப்பகுதியில் வாழ்ந்து வருகிறார். ''எனது மனைவி - மக்களைச் சந்திக்கவோ, உடன் அழைத்துக் கொண்டு செல்வதற்கோ போலீசார் அனுமதிக்கவில்லை. நான் அவர்களின் காலில் விழுந்து கதறிய போதிலும் ஏற்கவில்லை. என் மனைவியையும் குழந்தைகளையும் பற்றி நினைத்துப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது. போலீசாரும், விபச்சாரத் தரகர்களும், குண்டர்களும் சூழ்ந்த டெல்லியில் என் மனைவியின் கதியைப் பற்றி நினைத்தாலே நெஞ்சம் விம்முகிறது'' என்று கண்ணீர் மல்க கதறுகிறார், சுக்கூர். அவரைப் போலவே மனைவி - குழந்தைகளிடமிருந்து பிரிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட அகதிகள் வேதனையால் விம்முகின்றனர்.

இந்தியக் காட்டுமிராண்டிகளின் வெறியாட்டம்: வங்கதேச அகதிகளின் தலையைப் பாதியளவு சிரைத்து அவமானப்படுத்தும் எல்லைப் பாதுகாப்புப் படை.


படிப்பகம்

வங்கதேச மக்கள் அகதிகளாக
இந்தியாவுக்கு ஓடி வருவதென்பது
இப்போது திடீரென நடப்பதல்ல. 1965-ல்
நடந்த இந்திய - பாகிஸ்தான் போரின்
போது, அப்போது கிழக்கு பாகிஸ்தானாக
இருந்த வங்கதேசத்திலிருந்து லட்சக்கணக்
கானோர் அகதிகளாக ஓடி வந்தனர். பின்னர்
1971-ல் பாகிஸ்தானிடமிருந்து பிரிந்து இந்
திய ராணுவத்தின் உதவியுடன் முஜிபுர் ரஹ்
மான் தலைமையில் வங்கதேசம் உருவான
போது, போரின் காரணமாக லட்சக்கணக்கா
னோர் அகதிகளாக ஓடி வந்தனர். வங்கதேச
விடுதலைப் போரை உலக அரங்கில் முன்ன
ணிக்குக் கொண்டு வரவும், இந்தியாவின்
ராணுவத் தலையீட்டை நியாயப்படுத்தவும்
அன்றைய இந்திரா அரசு, அகதிகள் தப்பி
யோடி இந்தியாவுக்கு வருவதை ஆதரித்து
ஊக்குவித்தது. தனது பிராந்திய மேலாதிக்
நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ள வங்
தேச அகதிகள் பெருக்கத்தை ஒரு கருவிய
கப் பயன்படுத்திக் கொண்டது.

அதன் பிறகு தொடர்ச்சியாக வங்கதே
சத்தில் நிலவிய ராணுவ அடக்குமுறை கா
ணமாகவும், அடுத்தடுத்து தாக்கிய புயல்
வெள்ளம், வறட்சி காரணமாகவும் பிழைக்
வழியின்றி வறுமையில் உழன்ற வங்கதே
மக்கள் இந்தியாவுக்கு அகதிகளாக ஓடி வர
தொடங்கினார்கள். இவர்களில் இரு பிரி
கள் உண்டு. புத்த மதத்தைச் சேர்ந்த ''சாக்ம
'' பழங்குடியினர் வங்கதேச ராணுவத்தி
இனவெறியாட்டம் காரணமாக திரிபுர
மாநிலத்தில் அகதிகளாகத் தஞ்சமடைந்து
ளவர்கள் ஒரு பிரிவினராவர். இவர்கள
மொழியும் பண்பாடும் வங்காளிகளிட
ருந்து வேறுபட்டதாகும்.

மற்றொரு பிரிவினர், இந்து - முஸ்லீ
களைக் கொண்ட வங்காளிகள் ஆகும். இவ
கள் வறுமை காரணமாக பிழைக்க வ
யின்றி இந்தியாவுக்கு ஓடி வந்தவர்க
இவர்களது மொழியும் பண்பாடும் இந்தி
விலுள்ள வங்காளிகளிடமிரந்து வேறுபட்
தாக இல்லை. இவர்கள் மே.வங்கம், அசா
திரிபுரா மாநிலங்களில் பெருமளவில் அக
களாகக் குவிந்துள்ளனர்.

இவர்கள் தவிர, வங்காளி இனத்திட
ருந்து வேறுபட்டவர்களான பீகாரி முஸ்
கள் பெருமளவில் இந்தியாவுக்கு அக
ளாக ஓடி வருகிறார்கள். 1947-ல் இந்தி
வும் பாகிஸ்தானும் மதரீதியாகப் பிளவுப்
டபோது இந்தியாவிலிருந்து பீகாரி முஸ்
கள் வங்கதேசத்துக்கு (அன்றைய கிழ
பாகிஸ்தானுக்கு) விரட்டியடிக்கப்பட்
கள். 30 ஆண்டுகளுக்குப் பிறகு பாகிஸ்
னிடமிருந்து பிரிந்து வங்கதேசம் உருவா
போது, பிரிவினையை எதிர்த்த காரணத்
காக பீகாரி முஸ்லீம்கள் மீது வங்கதேச அ
அடக்குமுறையை ஏவியது. அவர்
பாகிஸ்தானின் கைக்கூலிகள் என்று

www.padippakam.com

திரை குத்தி. வங்கதேசத்தில் வங்காளிகள் அல்லாத முஸ்லீம்களை அனுமதிக்க முடியாது என்று தொடர்ந்து பீகாரி முஸ்லீம்களை இந்தியாவுக்கு விரட்டுகிறது. இந்திய அரசோ அவர்களை ஏற்க மறுத்து மீண்டும் வங்கதேசத்துக்கே துரத்துகிறது.

கடந்த பத்தாண்டுகளில் வங்கதேச அகதிகள் பீகார், உ.பி. டெல்லி, குஜராத், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் பிழைப்பைத் தேடி குடியேறியுள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் புறநகர் சேரிப் பகுதியில் அல்லற்படும் கூலித் தொழிலாளிகளாவர். மற்றவர்கள் பிச்சை எடுப்பது, குப்பை பொறுக்குவது முதலானவற்றின் மூலம் எப்படியோ வாழ்க்கையை ஓட்டுகின்றனர். இன்றைய நிலையில் ஏறத்தாழ 50 லட்சம் வங்கதேச அகதிகள் இந்தியாவில் குவிந்துள்ளனர். அதிகாரபூர்வ எண்ணிக்கை தெரியாத நிலையில் சில கட்சிகளும், அமைப்புகளும் அகதிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ ஒன்றரை கோடிப் பேராக இருக்கும் என்று கூறுகின்றன.



அடிப்படை வசதிகளின்றி டெல்லி சேரிப் பகுதியில் அவதிப்படும் வங்கதேச அகதிகள். பாரதீய ஜனதாவின் பார்வையில் 'நாட்டை உளவு பார்க்கும் சதிகாரர்கள்'.

வங்கதேச அகதிகளின் பெருக்கத்தால் இந்தியாவுக்கு அரசியல் - பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்பது உண்மைதான். ஆனால் இதற்கு இந்திய அரசுதான் பொறுப்பேற்க வேண்டும். ஏனெனில் தனது பிராந்திய மேலாதிக்க நோக்கங்களுக்காக பாகிஸ்தானைத் துண்டாடி வங்கதேசத்தை உருவாக்க அகதிகள் இந்தியாவுக்கு ஓடிவருவதை ஊக்குவித்ததும் ஆதரித்ததும் இந்திய அரசுதான். பின்னர், வங்கதேசம் உருவான பின்னரும்கூட அகதிகளை தாய்நாட்டுக்கு திருப்பி அனுப்புவதை இந்திய அரசு முக்கிய பிரச்சினையாக கருதவில்லை. அகதிகளுக்கு ரேஷன் அட்டை வழங்கியும், வாக்காளர் பட்டியலில் திருட்டுத்தனமாகச் சேர்த்தும் அவர்களை காங்கிரசின் ஓட்டு வங்கியாக மாற்றிக் கொள்வதிலேயே பாசிச இந்திரா - ராஜீவ் அரசுகள் குறியாக இருந்தன. குறிப்பாக டெல்லி, பம்பாய், கல்கத்தா ஆகிய பெருநகரங்களில் சேரிப்பகுதியில் வாழும் அகதிகளில் கணிசமானோர் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அசாமில் மாணவர் போராட்டம் தீவிரமடைந்தபோது, அந்நியர்களான வங்காளிகளை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கக் கோரினர். ஆனால் தனது ஓட்டு வங்கியை இழந்துவிடாதிருக்க வங்கதேசம் மற்றும் மே.வங்கத்திலிருந்து அசாமில் குடியேறிய க்களைத் தூண்டிவிட்டு, ஐக்கிய சிறுபான்மையினர் முன்னணி என்ற கட்சியை நிறுவி ாங்கிரசு கயவாளிகள் எதிர்போராட்டத்தை டத்தினர். அசாம் வாக்காளர் பட்டியலிலிந்து வங்காளிகளை நீக்குவது தொடர்பான ரச்சினை இன்னமும் தீராத பிரச்சினையா தொடர்கிறது.

வங்கதேச அகதிகளில் பெரும்பான்மயினர் முஸ்லீம்கள் என்பதால் மதவெறி ழ்ப்புணர்ச்சியின் காரணமாகவும், அவர் காங்கிரசுக்கு ஆதரவான ஓட்டு வங்கி க மாறிவிட்டதைக் கண்டு ஆத்திரமடைந் ம் வங்கதேச அகதிகளை வெளியேற்றக் ாரி இந்துவெறி பாரதீய ஜனதா அன் ைக்காலமாக இயக்கங்களை நடத்தி வருகிறது. மூன்றாண்டுகளுக்கு முன்பு வங்கதேச அரசு தன்னை இஸ்லாமியக் குடியரசாக அறிவித்துக் கொண்டபிறகு அங்கு சிறுபான்மை இந்துக்கள் துன்புறுத்தப்படுவதால் அகதிகளாக ஓடிவருவதாகவும், எனவே இந்திய அரசு அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கோருகிறது. அதே நேரத்தில் அகதிகளாக வரும் வங்கதேச முஸ்லீம்கள் சதிவேலைகளில் ஈடுபடுவதாகவும், நாட்டை உளவு பார்ப்பதாகவும், சமூகவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் குற்றம் சாட்டுகிறது. மே. வங்கம் மற்றும் வடகிழக்கிந்திய மாநிலங்களில் காலூன்றும் நோக்கத்தோடு இந்துவெறியைக் கிளறிவிட்டு அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கிறது.


ஒருபுறம் பாரதீய ஜனதாவின் நிர்பந்தம் காரணமாகவும், மறுபுறம் அசாமின் உல்ஃபா போராளிகளும் நாகா, மிஜோ, மணிப்பூரின் சுயநிர்ணய உரிமை கோரி ஆயுதப் போராட்டம் நடத்திவரும் போராளிகளும் வங்கதேசத்தின் சிட்டகாங் மலைத்தொடர் காட்டுப் பகுதிகளில் ரகசியமாக ஆயுதப் பயிற்சி பெறுவதைத் தடுக்கவும், இப்போராளிகளின் நடவடிக்கைகளைத் தடுக்காத வங்கதேச அரசுக்குப் பாடம் புகட்டும் நோக்கத்துடனேயே இந்திய அரசு வங்கதேச அகதிகளை வலுக்கட்டாயமாக வெளியேற்றுகிறது. இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை வங்கதேச அரசு எதிர்த்துக் கண்டனம் தெரிவித்த போதிலும், விரட்டப்படும் அகதிகளில் வங்கதேசத்தைச் சேர்ந்தவர் என்பதற்கான ஆதாரம் உள்ளவர்களை மட்டுமே ஏற்க முடியும் என்று வாதிடுகிறது. இதனால் விசா, அடையாள அட்டை ஏதுமற்ற பல லட்சக்கணக்கான அகதிகளின் கதி என்னவாகும் என்று சொல்லத் தேவையில்லை.

அகதிகள் பிரச்சினையை இருநாடுகளும் சுமுகமாகப் பேசித் தீர்ப்பதும், சர்வதேச அரங்குக்கு பிரச்சினையைக் கொண்டு சென்று, அகதிகள் தமது தாய்நாட்டுக்குத் திரும்பிச் சென்று வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்கப் பாடுபடுவதுமே அகதிகள் பெருக்கத்தால் பாதிக்கப்பட்ட நாட்டின் கடமையாக இருக்க வேண்டும். ஆனால் இந்திய அரசோ வங்கதேசத்தைக் கலந்தாலோசிக்காமல் அகதிகள் இந்தியாவுக்கு ஓடிவருவதைத் தடுக்க, தன்னிச்சையாக எல்லையில் சில பகுதிகளில் முள்வேலி அமைத்துள்ளது. மறுபுறம், தேசிய வெறியூட்டியும், பாரதீய ஜனதா மூலம் மதவெறி - இனவெறியூட்டியும், தேசத்துக்கு ஆபத்து என்று பிரிவினைவாத - பயங்கரவாதப் பீதியூட்டியும் வங்கதேச அகதிகளை விரட்டியடிக்கும் தனது காட்டுமிராண்டித்தனத்தை நியாயப்படுத்தி வருகிறது.

இந்த அட்டூழியம் தமது கண்ணெதிரே நடந்த போதிலும் இந்திய மக்கள் கடுகளவு எதிர்ப்புகூட காட்டாமல் மௌனமாக நின்று அங்கீகரித்துள்ளனர். ஒருசில பத்திரிகைகளில் மட்டும் இந்த அட்டூழியம் வெளியாகி எதிர்விளைவு ஏதுமின்றி முடங்கிப் போயுள்ளது. இந்த மௌனமும் செயலற்ற நிலையும், நாளை இந்திய அரசு பயங்கரவாதிகள் எந்தவொரு இந்தியக் குடிமகனையும், சிறுபான்மை மக்களையும் பயங்கரவாத - பிரிவினைவாத முத்திரை குத்தி அடக்குமுறையை ஏவுவதற்குச் சாதகமாகப் போய்முடியும். இந்துவெறி பாசிசம் காலூன்றுவதற்குத் துணைபோவதாக முடியும்.

எனவே மதச்சார்பின்மையையும் மனிதாபிமான உணர்வுகளையும் மரத்துப் போகச் செய்யும் ஆளும் கும்பலின் பயங்கரவாத - பிரிவினைவாதப் பீதியூட்டலுக்கு உழைக்கும் மக்கள் பலியாகிவிடக்கூடாது. ஆளும் கும்பலின் பாசிச நோக்கங்களை அம்பலப்படுத்தி, நிராதரவான அகதிகள் மீதான காட்டுமிராண்டித்தனத்திற்கு எதிராகப் போராட உழைக்கும் மக்கள் முன்வர வேண்டும்.

www.padippakam.com



# போராடும் தொழிலாளர்கள் மீது போலீசு வன்முறை வெறியாட்டம்

தமிழகமெங்கும் உழைக்கும் மக்கள் மீது தொடரும் போலீசின் வெறியாட்டத்திற்கு இதோ மேலும் ஒரு உதாரணம். திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள விக்கிரமசிங்கபுரத்தில் அமைந்துள்ளது. மதுரா கோட்ஸ் பஞ்சாலை. இந்நிறுவனத்திற்கு தூத்துக்குடியிலும் மதுரையிலும் கிளைகள் உள்ளது. வழக்கம் போலவே இந்த ஆண்டும் தீபாவளி போனஸ் வழங்குவது சம்பந்தமாக கடந்த ஒருமாதமாகவே மூன்று கட்ட பேச்சுவார்த்தைகள் நடந்து தோல்வியுற்றது.

சென்ற ஆண்டு ரூ. 39.34 கோடி லாபமென அறிவித்த நிர்வாகம் 30.36% போனஸ் வழங்குவதாக அறிவித்து பின்னர் 28.64% போனஸாக வழங்கியது. ஆனால், இவ்வாண்டு ரூ. 52.80 கோடி லாபம் காட்டும் நிர்வாகம், போனஸாக கடந்த ஆண்டைக் காட்டிலும் குறைவாக 16.85% மட்டுமே தருவதாக பிடிவாதம் செய்கிறது. 1989-90-ம் ஆண்டு தொழிற்சங்கங்களும், நிர்வாகமும் ஒப்பந்தம் செய்து கொண்டதன் அடிப்படையில் தொழிலாளர்களுக்கு 46% போனஸ் தரப்பட வேண்டும். ஆனால் நிர்வாகம் அடாவடித்தனமாக அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டது. எனவே, கடந்த 13.10.92 முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர்.

இந்நிலையில் 17.10.92 அன்று திருச்சியில் தொழிலாளர் துறை இணை ஆணையர் முன்பு நடந்த பேச்சுவார்த்தையும் தோல்வியுற்றது. இச் செய்தி எட்டப்பட்ட விக்கிரமசிங்கபுரம் தொழிலாளர்கள் ஆங்காங்கே தன்னெழுச்சியாகக் கூடிப்பேசினர். அப்போது போலீசு கும்பல் 'ஜீப்'பிலும், 'வேனி'லும் வந்திறங்கி வழியில் போவோர், வருவோரையெல்லாம் கண்டபடி தாக்கி விரட்டியடித்தது. அப்போது மதுரா மில்லுக்கு செல்லும் வழியில் உள்ள மேலக்கொட்டாரம் பகுதியில் ஒரு கோயிலில் திருவிளக்கு பூசை முடிந்து பெண்கள், குழந்தைகள், தொழிலாளர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்தின்மீது காரணமின்றி 'வேனை' விட்டிறங்கிய போலீசு கண்மூடித்தனமாக தடியடி நடத்திச் சென்றது. இதைக் கேள்விப்பட்ட பொதுமக்கள் அப்பாவிப் பெண்களை ஏன் அடித்தீர்கள் என்று கேட்டதற்காக கூட்டமாக கூடினர். ஆலைக்குச் சென்று திரும்பிய போலீசு மக்களைக் கண்டதும் கலைந்து போகுமாறு கூறவில்லை. தடியடி நடத்தவில்லை. கூட்டத்தை கலைக்க கண்ணீர்ப் புகை குண்டுகூட வீசவில்லை. எந்த முன்னறிவிப்பும் இன்றி காட்டுமிராண்டித்தனமாக ஓட ஓட விரட்டிச் சுட்டது. போலீசு இன்ஸ்பெக்டர் பாலகிருஷ்ணன், ''சிறுக்கி மவன்களை சுடுங்கடா'', என்றும் ஒரு தொழிலாளி குண்டடிபட்டு விழுந்தபோது ''ஒரு நாய் விழுந்திருச்சிலே! மற்ற நாய்களையும் சுடுங்கலே...!'' என்றும் கத்தினான் பல ரவுண்டுகள் சுட்டதில் ஒரு விவசாயக் கூலிப்பெண்ணும் மூன்று தொழிலாளர்களும் குண்டடிப்பட்டு பாளை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அன்று இரவு 7 மணிக்கு வியாபாரிகள் கடைகளை மூடி போலீசுக்குக் கண்டனம் தெரிவித்தனர்.

இந்த வன்முறை வெறியாட்டம் மறுநாளும் தொடர்ந்தது. லாரி லாரியாக ஊரெங்கும் போலீசு இறக்கப்பட்டது. எஸ்.பி. நரேந்திரபால் சிங்கும், சப்-கலெக்டர் நஜிமுதீனும் அதிரடி வேட்டை நடத்துவது போல ரோந்து சுற்றி பொது மக்களை விரட்டியடித்து பீதியூட்டினர். அடாவடித்தனமாக பி.எல்.யூ., ஏ.ஐ.டி.யு.சி, தொழிற்சங்கங்களுக்குள் புகுந்து போலீசு தாக்கியது. சப்-கலெக்டரே தொழிலாளர்கள் நிறுத்தி வைத்திருந்த சைக்கிள்களை உதைத்துத் தள்ளினார். ஒரு தொழிற்சங்க ஊழியரை பட்டப்பகலில் எஸ்.பியே தாக்கி, மிரட்டினார். கிளர்ந்தெழுந்த தொழிலாளர்கள், ஒன்றுகூடி காவல் நிலையத்தை முற்றுகையிட்டதும் மாவட்ட கலெக்டர் வேலு, சப்-கலெக்டர் விசாரணைக்கு உத்தரவிட்டார். ஆனால், அடாவடித்தனமாக நடந்துகொண்ட சப்-கலெக்டர் விசாரணையை, தொழிலாளர்கள் நிராகரித்துவிட்டனர். துப்பாக்கிச் சூடு நடத்திய போலீசு, அருகிலிருந்த மாட்டு வண்டிகளை நடு ரோட்டில் நிறுத்தியும் கற்களை கொண்டு வந்து போட்டும் (படம் பிடித்துக் கொண்டு) சாலை மறியல் - வன்முறை நடந்ததாகக் கூறி மாட்டு வண்டிகளைக் கைப்பற்றிக் கொண்டது. தற்போது போலீசை ஏராளமாக குவித்து பீதியூட்டுகிறார்கள்.

அனைத்துத் தரப்பினரும் இந்த வன்முறை வெறியாட்டத்தை கண்டித்துள்ளனர். இதைத் தொடர்ந்து 20.10.92 அன்று முழு அடைப்பும், மாலை மாபெரும் மௌன ஊர்வலமும், 21.10.92-ல் தாலுகா அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது. இத்தனைக்குப் பிறகு நிர்வாகம் 20-ம் தேதி சென்னையில் நடந்த பேச்சுவார்த்தையை முறித்து, 27-ம் தேதிக்கு ஒத்திப் போட்டுள்ளது.

தொழிலாளி தன் உரிமையை கேட்கும் போது கூட இந்த அதிகார வர்க்கம் பாய்ந்து அவன் குரல்வளையை நசுக்குவதையே தொழிலாளர்கள் மட்டுமல்ல பகுதி மக்களும் நன்கு புரிந்து கொண்டார்கள். ''இந்தப் போராட்டத்திற்காக என் மகன் உயிர்த் தியாகம் செய்தாலும் நான் பெருமைப்படுவேன், '', என்று காயமடைந்து சிகிச்சை பெறும் ஒரு தொழிலாளியின் தந்தை உணர்ச்சி பொங்க கூறிய வார்த்தை காதில் ஒலித்துக் கொண்டே உள்ளது.

*தகவல்:*
*தொழிலாளர் பிரச்சாரக்குழு,*
*விக்கிரமசிங்கபுரம்.*

## அறிவிப்பு

*அன்பார்ந்த வாசகர்களே!*

8-ஆம் ஆண்டிலிருந்து புதிய ஜனநாயகத்தை முறையாகக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் செய்துள்ளோம். அத்தோடு அடுத்த இதழில் இருந்து புதிய பகுதிகளைக் கொண்டு, புதிய பொலிவுடன் புதிய ஜனநாயகம் வெளிவரும். வடிவமைப்பிலும், உள்ளடக்கத்திலும் மாற்றங்களுடன் வெளிவர வாசகர்களிடம் இருந்தும் அதற்கான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. தொடர்ந்து விமர்சனங்கள் எழுதி அனுப்பி ஊக்குவிக்குமாறு கோருகிறோம். — ஆசிரியர் குழு.

*இந்த இதழ் அட்டைப்படம் நன்றி: தூண்டில்*

படிப்பகம்

www.padippakam.com

# சிலுவையணிந்த சாத்தான் ரபேலின் ரௌடித்தனம்

பட்டுக்கோட்டை அருகே புனல்வாசல் என்ற ஊரில் ஒரு பள்ளியைத் தொடங்கி பல லட்சம் ரூபாய் வசூலித்து பினாமி பெயர்களில் பதுக்கி வைத்துவிட்டு, தஞ்சை தூய அந்தோனியார் மேல் நிலைப் பள்ளியின் தாளாளர் - தலைமையாசிரியராக நான்காண்டுகளுக்கு முன் பொறுப்பேற்றார், ரபேல் பாதிரியார். இவர் பதவி வகித்த நான்காண்டுகளில் மட்டும் நன்கொடையாக சுமார் 36 லட்சம் ரூபாய் மாணவர்களிடம் வசூலித்து முழுவதையும் தனது உறவினர் பெயரில் மறைத்து விட்டார். இதை தஞ்சை ம.க.இ.க. பிரசுரம் அடித்து அம்பலப்படுத்தியது. இதனால், ஆத்திரமுற்ற ரபேல் பாதிரியார் ம.க.இ.க.-வின் தட்டிகளை ஆள் வைத்துத் திருடியதோடு, ம.க.இ.க. செயலரை மிரட்ட தனது அடிவருடி ஆசிரியர்கள் சிலரை அனுப்பினார். மிரட்ட வந்த எடுபிடிகள் மூக்குடைந்து திரும்பினர்.

இவரின் கொள்ளையை எதிர்த்து, ரபேல் பாதிரியார் வசூலித்த சட்டவிரோத நன்கொடைப் பணத்தை மாணவர்களுக்குத் திருப்பித்தர உத்திரவிடக் கோரி தமிழ்நாடு தனியார் பள்ளி ஆசிரியர் சங்கம் உயர்நீதி மன்றத்தில் ரிட்மனு தாக்கல் செய்தது.

இதோடு இப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றும் லூர்துசாமி என்ற ஆசிரியர் தனது மகனை பள்ளியில் சேர்க்க அனுமதி கேட்டார். நன்கொடை கொடுக்கவில்லை என்பதால் அனுமதி மறுத்தார் ரபேல் பாதிரியார். ஆசிரியர் லூர்துசாமி தனது மகனை வேறொரு அரசுப் பள்ளியில் சேர்த்தார். ரபேல் பாதிரியார் சட்டவிரோதமாகச் செயல்படுவதையும், அவர் வசூலித்த பணத்தைத் திரும்பக் கோரியும் கல்வித் துறை, மாவட்ட ஆட்சியர், மந்திரி, பிஷப் ஆகியோருக்குப் புகார் மனு அனுப்பினார்.

இதனால் வெறிகொண்ட ரபேல் பாதிரியார் ஆசிரியர் லூர்துசாமியைப்



ரபேல் பாதிரியார்

பழிவாங்க பல முயற்சிகளை மேற்கொண்டார். சில பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தி லூர்துசாமியை வேலை நீக்கம் செய்தார்.

இவ்வேலை நீக்கத்தை எதிர்த்து மீண்டும் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார் லூர்துசாமி. இதற்கிடையில் ரபேல் பாதிரியார் தலைமையாசிரியர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு மாயவரத்தில் பாதிரியாராகப் பொறுப்பேற்றார்.

இந்த நிலையில், ஆசிரியர் லூர்துசாமி மேலும் பல விஷயங்களை அம்பலப்படுத்தி விடுவார் என பயந்த பிஷப்பும், பள்ளி நிர்வாகமும் சமரசத்துக்கு வந்தனர். உயர் நீதிமன்ற வழக்குகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் ஆசிரியர் லூர்துசாமி 25.9.92 இல் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டார்.

இதையறிந்த ரபேல் பாதிரியார் தனக்கு எதிராக பகிரங்கமாகச் செயல்பட்ட லூர்துசாமிக்கு வேலை கொடுத்ததால் ஆத்திரமுற்றார். தனது சாதிக்கார பாதிரியார்கள் 15 பேரைத் திரட்டிக் கொண்டு தஞ்சை பிஷப்பை 'கெரோ' செய்து லூர்துசாமியை உடனே வேலை நீக்கம் செய்யவேண்டும் எனத் தகராறு செய்து மிரட்டியுள்ளார். இதுவரை தலைமையாசிரியராகப் பணியாற்றிய காலத்தில் ஒரு கோடி ரூபாயை சுருட்டிக் கொண்ட இவர் காசு கொடுத்து அடியாட்களை ஏவும் அளவுக்கு ஒரு தேர்ந்த கிரிமனலாகவே மாறிவிட்டார்.

*ம.க.இ.க., தஞ்சை.*

# மாநிலக் கல்லூரித் தேர்தலில் மாஃபியாக்களின் கைவரிசை

சென்னை மாநிலக் கல்லூரி மாணவர் தேர்தலில் சில ஆண்டுகளாக, அயோத்திக்குப்பத்தைச் சேர்ந்த மாஃபியா தலைவன் வீரமணியின் கை வரிசை இருந்து வருகிறது. இந்த ஆண்டு கும்மிடிப்பூண்டி அ.தி.மு.க. எம்.எல்.ஏ., சக்குபாய் ஆதரவோடு வீரமணியின் ரௌடித்தனம் மாணவர் தேர்தலில் தலைவிரித்தாடியது. மாணவர் பேரவைத் தேர்தலுக்கான அறிவிப்பு வந்ததும் எம்.எல்.ஏ., சக்குபாயின் மகன் ரமேஷ்பாபு தலைவர் பதவிக்கு போட்டியிட்டார். இவருக்கு ஆதரவாக தடி, சைக்கிள் செயின், கத்திகளைத் தூக்கிக் கொண்டு நின்றது வீரமணி கும்பல். ரமேஷ்பாபுக்கு எதிராக போட்டியிட விரும்பிய மாணவர்கள் எல்லோரையும் மிரட்டி போட்டியிலிருந்து திரும்பப் பெறச் செய்தது. ஆனால், சதீஷ் என்ற மாணவர் தலைவர் பதவிக்கும் அறிவழகன், பழனி என்ற மாணவர்கள் பிற பதவிகளுக்கும் (திரும்பப்பெற மறுத்து) துணிந்து போட்டியிட்டனர். 14.9.92 அன்று விண்ணப்ப மனு கொடுத்து திரும்பிய சதீஷ் மற்றும் அவரது குழுவினர் வீரமணி கும்பலால் பலமாக தாக்கப்பட்டனர். கல்லூரிக்குள்ளேயே புகுந்து விண்ணப்பப் படிவங்களை எல்லாம் பிடுங்கிக் கொளுத்தியது. சதீஷை அரிவாளால் வெட்டி 15 இடங்களில் காயப்படுத்தியது. கல்லூரி பிரின்சிபால், பேராசிரியர்கள், மாணவ - மாணவிகள் முன்னிலையிலேயே அனைத்தும் நடந்தது. தட்டிக் கேட்க முனைந்த பேராசிரியர்கள் உட்பட பலர் மிரட்டப்பட்டனர். சதீஷ் வீட்டில் புகுந்து பொருட்களை எல்லாம் நொறுக்கியும் அவரது பெற்றோரை மிரட்டியும் வந்தனர்.

ரமேஷ்பாபு கும்பலின் ரௌடித்தனத்தால் மாணவ - மாணவிகள் பெரும்பான்மையோர் சதீஷ் குழுவினருக்கே வாக்களிக்க தீர்மானித்தனர். வெற்றிபெற முடியாது என்பது தெரிந்ததும் தேர்தலையே நிறுத்திவிட ரமேஷ்பாபு கும்பல் முயன்றது. இறுதியில் அ.தி.மு.க., புள்ளிகளிடமிருந்து வந்த நெருக்கடி காரணமாக கல்லூரி முதல்வர், ரமேஷ்பாபு கும்பலுக்கு சாதகமாக வளைந்துபோய், தலைவர் பதவித் தேர்தலை மட்டும் ரத்து செய்தார். மற்ற பதவிகளுக்கு நடந்த தேர்தலிலும் சதீஷ் குழுவினரே அறுதி பெரும்பான்மை ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றனர். இதையும் பொறுத்துக் கொள்ள முடியாத ரமேஷ்பாபு கும்பல் தேர்தல் முடிவுக்குப் பின்னும் கல்லூரி பொருட்களை நொறுக்கியும் மாணவர்களைத் தாக்கியும் வெறியாட்டம் போட்டனர். சதீஷை போட்டியிலிருந்து விலகிக் கொள்வதற்காக தொடர்ந்து பலவாறு கொலை மிரட்டல் விடுகின்றனர். வீரமணி கும்பலின் தாக்குதலுக்கு அஞ்சி சதீஷ் மற்றும் வெற்றி பெற்ற அவரது குழுவினர் பலர் தலைமறைவாகி பல வாரங்களாகி இன்று வரை கல்லூரிக்கு வரவில்லை.

இதில் வீரமணி கும்பலின் ரௌடித்தனத்திற்கு பக்கபலமாகவும் தனது மகனை எப்படியும் வெற்றிபெற வைத்துவிட வேண்டும் என்ற வெறியோடு பல லட்சங்களை வாரியிறைத்தும் வருகிறார், எம்.எல்.ஏ. சக்குபாய். வீரமணியும் அமைச்சர் மதுசூதனன் துணையுடன் பல சமூக விரோத தொழில் செய்து சென்னையை கலக்கி வரும் மாஃபியா கும்பல் தலைவன். இவனை பகைத்துக் கொண்டு கல்லூரிக்குள்ளும் கல்லூரியைச் சுற்றிய பகுதிகளிலேயே நடமாட முடியாது என்கிற நிலையும் உள்ளது. ஆனால், மாணவர்கள் ஒன்றுபட்டு, பகுதி மக்கள் மற்றும் சகல ஜனநாயக - புரட்சிகர அமைப்புகள் துணையுடன் போராடினால் இச்சமூகவிரோத கும்பலை தனிமைப்படுத்த முடியும்.

—*தகவல்: ஏ.கே.கே.பரன்*

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 Regd. No. TN/MS(S) 344



# இதுதான் இன்றைய இந்தியா!

இதோ. சென்னை அருகே காட்டூர் கிராமத்திலுள்ள இந்தக் கிணற்றின் நீர் அண்மையில் நஞ்சாகிப் போய் 4 பேரின் உயிரைப் பறித்துக் கொண்டது. 62 பேர் மருத்துவமனையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கனவே பல முறை முறையிட்டும் உரிய நடவடிக்கை எடுக்காத சுகாதாரத்துறை, உயிர்ப்பலி ஏற்பட்ட பிறகு இப்போது குளோரின் மருந்தை கிணற்றில் ஊற்றிக் கொண்டிருக்கிறது. சென்னை பெருநகரத்திலேயே குடிநீருடன் கழிவுநீர் கலந்து காலரா நோய் தாக்கி பலர் அவதிப்பட்டனர். மகாராஷ்டிராவின் தானே மாவட்டத்தில் பரவிய காலரா நோயினால் 150 பேர் மாண்டு போயினர். பீகார் மாநிலத்தில் ஏழத்தாழ 40 பேரை காலரா காவு கொண்டது.

இந்தியாவில் பெரும்பாலான கிராமங்களில் குடிநீரே கிடைப்பதில்லை. குடத்துடன் பெண்கள் பல மைல்களுக்கு அப்பால் சென்று குடிநீர் எடுத்து வருவதும், ரயில் என்ஜின் தண்ணீரைப் பிடிக்க ரயில்வே நிலையங்களில் மணிக்கணக்கில் காத்துக் கிடப்பதும் 47 ஆண்டுகால 'சுதந்திர' இந்தியாவில் தீராத அவலமாகத் தொடர்கிறது.



அடிப்படை வசதிகளை அறவே புறக்கணிக்கும் அரசு, குடிநீர் கேட்டுப் போராடினாலே துப்பாக்கிச் சூடு நடத்துகிறது. அதிலும் [illegible] போது உலக வங்கியின் உத்திரவுப்படி [illegible] கள் நல்வாழ்வுத் திட்டங்களுக்கான ந[illegible]யைப் பெருமளவு குறைத்துவிட்டது. அ[illegible] மருத்துவமனைகளில் கூட மக்களிடம் கட்[illegible]ணம் வசூலிக்கத் தீர்மானித்துள்ளது.

இதோ, இது சுத்திகரிக்கப்பட்ட தாதுநீர் குடுவையின் விளம்பரம். இயற்கை நீரூற்றுகளிலிருந்து பெறப்படும் மருத்துவ குணங்கள் அடங்கிய இந்தத் தாதுநீரை மேட்டுக்குடியி[illegible]னர் அன்றாட குடிநீராகவே பயன்படுத்[illegible]கின்றனர். தாதுநீர் குடிப்பதை தமது அ[illegible]தஸ்தை வெளிப்படுத்தும் கலாச்சாரமாகவே மேட்டுக்குடி கருதுகிறது. அரசு அதிகாரிகள் மந்திரிகள் நடத்தும் கூட்டங்களில் தவறா[illegible]மல் இந்தத் தாதுநீர் இடம் பெற்றுவிடுகிறது. இந்தத் தாது நீர் மோகத்தைப் பயன்படுத்திக் கொண்டு பல்வேறு தரகு முதலாளித்துவ நிறு[illegible]வனங்கள் போட்டிபோட்டுக் கொண்டு இத்[illegible] தொழிலில் இறங்கிவிட்டன. இதைக்காட்டி புதிய பொருளாதாரக் கொள்கையின் விளை[illegible]வாக தொழில்கள் பெருகி வளர்வதாக அரசு பெருமைப்பட்டுக் கொள்கிறது.

ஒருபுறம், நாட்டு மக்களுக்கு பாதுகா[illegible]க்கப்பட்ட குடிநீரில்லை; மறுபுறம், மேட்டுக்குடி கும்பலோ தாதுநீரில் கொப்பளிக்கிறது. இதுதான் புதிய பொருளாதாரக் கொள்கை[illegible]யின் 'சாதனை'! இந்த மக்கள் விரோதிகளின் ஆட்சி இன்னமும் நீடிக்கத்தா[illegible] வேண்டுமா?

படிப்பகம்